பக்கங்கள்:-இருபது

Registered as a News paper in Sri Lanka

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 6.00

ராம்கோ சிமெந்து
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2034 | மார்கழி 05 | சனிக்கிழமை | (20.12.2003) | தொலைபேசி - 2223378 | ஒலி 01

## தாயகத்தில் ஒன்றாக வாழும் காலம் விரைவில் ஏற்படும்

# முஸ்லிம்களின் வெளியேற்றம்

# துரதிஷ்ட வசமான முடிவு!

### கிழக்கிலங்கைப் பத்திரிகையாளர்களிடம் தமிழ்ச்செல்வன் தெரிவிப்பு

(கிளிநொச்சி)

**தமிழர் தாயகப் பிரதேசத்தில் முஸ்லிம் உறவுகள் ஒன்றாக வாழும் காலம் உருவாகும் என்ற நமபிக்கையுடனேயே தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் இருக்கிறார்.**

**இவ்வாறு தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன், கிழக்கிலங்கை தமிழ்-முஸ்லிம் ஊடகவியலாளர்கள் மத்தியில் உரையாற்றும் போது குறிப்பிட்டார்.**

கிழக்கிலங்கைத் தமிழ்-முஸ்லிம் ஊடகவியலாளர்கள் வடபகுதிக்கு விஜயம் செய்து நேற்றுக் கிளிநொச்சிக்குச் சென்றனர். வன்னி நிலைமைகள் குறித்து ஆராயும் இவ் ஊடகவியலாளர்கள், அரசியல் துறைப் பொறுப்பாளரைச் சந்தித்து கலந்துரையாடியபோதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் பேசுகையில், தமிழீழ விடுதலைப் போராட்டம் முனைப்படைந்திருந்த சூழ்நிலையில் எமது உரிமைப் போராட்டத்தைப் பலவீனப் படுத்தும் நோக்கோடு தமிழ் முஸ்லிம் உறவில் விரிசலை ஏற்படுத்தி, அதனூடாக எமது போராட்டத்தை நசுக்கத் தென்னிலங்கைப் பேரினவாதிகள் முனைந்த காலம் ஒன்று உள்ளது.

அத்தகைய சூழ்நிலையில் அவர்களது முனைப்பும் முயற்சியும் அவர்களது பேரினவாதத்திற்கு சாதகமாக அமைந்ததை நாம் அறிவோம்.

இந் நிலையிலேயே அன்றைய காலகட்டத்தில் எம்மைப் பொறுத்த

(20ம் பக்கம் பார்க்க)

## விபத்து நடந்த இடங்களில் மக்கள் கூடுவதைத் தவிர்க்க வேண்டும்

### கோப்பாய் பொலிஸ் அதிகாரி அறிவுறுத்தல்

(யாழ்ப்பாணம்)

பாதசாரிகளும், வாகனசாரதிகளும் வீதி ஒழுங்கைப் பின்பற்றி நடப்பார்களேயானால் வீதி விபத்துக்களைத் தவிர்க்க முடியுமென்று கோப்பாய் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி அருணகிரி ஸ்ரீசெல்வம் தெரிவித்துள்ளார்.

கல்வியங்காட்டுப் பகுதியில் நேற்று இடம் பெற்ற விபத்துச் சம்பவம் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் கூறுகையில், விபத்துக் குறித்து விசாரணைக்காகச் சென்ற பொலிஸார் மீது கல்வீச்சுத் தாக்குதல் இடம் பெற்றுள்ளது. இது சட்டப்படி தவறானதொரு செயலாகும். பொலிஸாரைக் கடமை செய்யவிடாமல் தடுப்பது சட்டப்படி குற்றமாகும். மேலும் கல்லை வீசி எறிவதால் சாதிக்கப்போவதென்ன என்றும் கேள்வி எழுப்பினார்.

அத்துடன் விபத்துப் போன்ற சம்பவங்கள் இடம் பெறுகின்ற போது அவ்விடங்களில் பொது மக்கள் இளைஞர்கள் கூடுவதைத் தவிர்க்க வேண்டுமென்றும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார். (இ)

## போட்டி போட்டு ஓடிய மினிபஸ் மின்கம்பத்தில் மோதியது-3பேர் காயம்

### ஆத்திரமுற்ற இளைஞர்கள் மினிபஸ்ஸைத் தாக்கினர்

(யாழ்ப்பாணம்)


ஏட்டிக்குப் போட்டியாக ஒன்றையொன்று முந்தும் நோக்கில் கலைபட்டுக் கொண்டு வந்த மினிபஸ், கட்டுபபாட்டை இழந்து வீதிக்கு எதிர்ப் பக்கமாகச் சென்று மின்கம்பத்துடன் மோதியதில் மூன்று பேர் படுகாயமடைந்துள்ளனர்.

இச்சம்பவம் நேற்று முற்பகல் 11 மணியளவில் கல்வியங்காட்டில் சட்டநாதர் சிவன் கோயிலுக்கருகில் இடம் பெற்றுள்ளது.

இதனையடுத்து சம்பவ இடத்தில் திரண்ட இளைஞர்கள் ஆவேசத்துடன் மினிபஸ்ஸின் கண்ணாடிகளை அடித்து நொருக்கி சேதப்படுத்தினர். நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸார் அங்கு கூடியபோது அவர்கள் மீதும் கல்வீச்சுத் தாக்குதல்கள் இடம் பெற்றன. எனினும் பொலிஸார் நிலைமையக் கட்டுப்படுத்தி விபத்துக்குள்ளான வாகனத்தையும் அங்கிருந்து மீட்டு கோப்பாய் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றுள்ளனர்.

யாழ்ப்பாணத்தில் இருந்து அச்சுவேலி நோக்கிச் சென்று கொண்டிருந்த மினிபஸ்ஸே இவ்வாறு விபத்துக்குள்ளானது. இதில் வீதியால் நடந்து வந்து கொண்டிருந்த நாயன்மார்கட்டைச் சேர்ந்த கிருஷ்ண பிள்ளை இராசாத்தி (வயது 45) பஸ்ஸுக்குள் அமர்ந்திருந்த நீர்வேலியைச் சேர்ந்த கந்தசாமி கௌரி (வயது25) மற்றும் மோட்டார் சைக்களில் வந்துகொண்டிருந்த யாழ்ப்

(20ம் பக்கம் பார்க்க)



வலம்புரியின் முதல் பிரதியை துணை வேந்தர் பேராசிரியர் பாலசுந்தரம்பிள்ளை பெற்றுக் கொண்ட நிகழ்வு அருகில் ஆதீன சுவாமிகள்.
படம்:புகைப்படக் கோவை 20-12-1999

## இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் படைப் பிரிவை மீளச் செயற்படுத்துக

### உலக சமாதானப் பேரவை ஜனாதிபதிக்குக் கடிதம்

(கொழும்பு)

அத்துருகிரிய இராணுவப் புலனாய்வுப் பிரிவினரின் இரகசிய வீட்டின் மர்மங்களை வெளியிட்டதுடன், இராணுவத்தகவல்களை வழங்கி வந்த 23பேர் கொல்லப்படக் காரணமாக இருந்தவர்கள் தண்டிக்கப் படவேண்டும். நாட்டின் பாதுகாப்பைப் பாதிக்கும் துரோகச் செயலைச் செய்தவர்களுக்குத் தண்டனை வழங்க வேண்டும் என அவுஸ்திரேலியாவை மையமாகக் கொண்டியங்கும் உலக சமாதானப் பேரவை ஜனாதிபதியிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது. இவ் அமைப்பு ஜனாதிபதிக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அத்துருகிரிய வீட்டைப் பொலிஸார் முற்றுக்கையிட்ட விடயமானது அண்மையில் நிகழ்ந்த மிகப்பெரிய துரோகச் செயலாகும். சம்பந்தப்பட்ட பாதுகாப்பு அமைச்சரினதும், உள்துறை அமைச்சரினதும் ஏனைய அரசியல் வாதிகளினதும் தூண்டுதலாலேயே உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் குலசிறி உடுகம்பலவால் இவ் வீடு முற்றுகையிடப்பட்டிருக்கிறது.

இத்துரோகத்தனமான சம்பவம் பற்றி ஜனாதிபதி விசாரணைக்குழுவின் அறிக்கை வெளியிடப்பட்டுள்ள நிலையில், குற்றவாளிகளை இப்போதாவது சட்டத்தின்முன் கொண்டு வர நடவடிக்கை எடுக்குமாறு வேண்டுகிறோம்.

இந்த நடவடிக்கை புலிகளின் விருப்பத்திற்கிணங்க நாட்டின் விருப்பத்திற்கெதிராக செய்யப்பட்டது. ரணில் விக்கிரமசிங்காவின் அரசிற்கும் புலிகளுக்கும் இடையிலான பிணைப்பை வலுவடையச் செய்வதற்கும் அதேவேளை, குழப்ப

(20ம் பக்கம் பார்க்க)

### அமைச்சர் மகேஸ்வரன் இந்தியா செல்வார்

(யாழ்ப்பாணம்)

இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் இந்தியாவுக்குச் செல்லவுள்ளார். காஞ்சிகாமகோடி பீடத்தின் அழைப்பை ஏற்றே அவர் அங்கு செல்கிறார்.

எதிர்வரும் 23ந் திகதி தொடக்கம் 27ந் திகதி வரை சென்னையில் அனைத்துலக மகாபாரத மாநாடு நடைபெறும்.இம் மாநாட்டில் அமைச்சர் கலந்துகொள்ளவார். இதேவேளை

(20ம் பக்கம் பார்க்க)

### வலம்புரியின் நான்காம் ஆண்டு நினைவில் உங்களுடன்...

*அன்பிற்கினிய வாசகர்களே!*

*இன்று உங்கள் வலம்புரிக்கு அகவை நான்கு, நீங்கள் பாலூட்டிச் சீராட்டி வளர்த்த வலம்புரி நான்கு ஆண்டுகளைத் தாண்டி ஐந்தாவது ஆண்டில் காலடி எடுத்து வைக்கிறது. இறைவனின் திருவருளும், குருவருளும், எம்மை வழிப்படுத்துகின்றன. நேற்றுப் போல்இருக்கிறது வலம்புரியின் முகிழ்ப்பு. ஆனால் நான்கு ஆண்டு கடந்து விட்டது என்பதை எண்ணும் போது கண்களின் உதிர்ப்பு கன்னத்தை நனைக்கின்றது. இது ஆனந்தக் கண்ணீரா அல்லது நடந்துவந்த பாதையில் சந்தித்த துயரங்களின் நினைப்பா என்பதைத் தீர்மானிக்க முடியவில்லை. ஆம், அதற்குக் காரணமும் உண்டு. வாசகப் பெருமக்கள், விளம்பரதாரர்கள், என்றும் வலம்புரியோடு ஒன்றித்துப் போன எமது அன்பு உள்ளங்கள். அனைவரினதும் அன்பூட்டல், அறிவுப்பகிர்வு, நேசக்கரம், மனங்கோணாது உவந்தளித்த விளம்பரங்கள் இவற்றையெல்லாம் எண்ணுகின்றபோது, கன்னத்தின் நனைவை ஆனந்தத்தின் எல்லை எனக் கண்டு கரங்கள் துடைக்கின்றன.*

*ஆனால் மறுபுறத்தே எத்தனை இடையூறுகள், எத்தனை விசமப் பிரசாரங்கள், ஆட்பறிப்புக்கள், நன்றி மறந்த கேடுகள், ஏன் இப்படி.. எதற்காக... இந்த மண்ணில் வாழ்வதற்காக* (20ம் பக்கம் பார்க்க)

## சிறு விளம்பரம்

### மணமகள் தேவை

யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும், சைவ சமய வேளாள குடும்பத்தைச் சேர்ந்த லண்டனில் வதியும் 31வயது நிரம்பிய கிரக பாவம் 62 கொண்ட பகைப்பெற்ற உதயச் செவ்வாய்க்குற்றமுடைய கேட்டை நட்சத்திரமுடைய, உயரம் சுமார் 6 அடிகள் கொண்டவர். லண்டன், சுவிஸ் மற்றும் கனடாவில் நிரந்தர விசாக்கொண்ட பெண் மணியை விவாகம் செய்ய விரும புகின்றார். தகவல்கள் இரகசியமாக வைக்கப்படும். தொடர்பு கொள்ள வேண்டிய விலாசம் V.A. சிவராசா சோதிடர் இலக்கம்: 01, பழம் றோட், கந்தர்மடம், யாழ்ப்பாணம். விவாகத்தை விரும்புவோர் தொடர்பு கொள்ளலாம். (8042)

### திருத்துதலும் ஒட்டுதலும்

மூக்குக்கண்ணாடி ஒட்டுதல், சகல கெமரா வகைகளும் எலெக்ரோனிக் பிளாஸ்கன் திருத்துதல், சிறிய பிளாஸ்ரிக் பாட்ஸ் ஒட்டுதலுக்கு தொடர்பு:- சு.நாராயணசாமி இல. 301 கஸ்தூரியார் வீதி, (மேல் மாடி) கன்னாதிட்டிச் சந்திக்கருகில் மீண்டும் இயங்குகின்றது. (8005)

### இலவச பயிற்சி

சனசமூக நிலையங்களிற்கூடாக இளைஞர், யுவதிகளிற்கு நிரந்தர சுயதொழில் வாய்ப்பை உருவாக்கும் நோக்கில், ஒருவாரகால, திரைக் கலைசார் இலவசப் பயிற்சி நெறி ஒன்றை மாவட்டத் திரைக் கலைச் சங்கங்களின் சம்மேளனமான "சலன சித்திரம்" நடத்தவுள்ளது.

இதற்காக ஒவ்வொரு சனசமூக நிலையத்திலிருந்தும் தலா மூன்று பயிற்சியாளர்கள் தெரிவு செய்யப்படவுள்ளனர். இதில் இணைந்து கொள்ள விரும்புவோர், தங்கள் விபரங்கள் அடங்கிய விண்ணபங்களை சன சமூக நிலையத் தலைவர்/ செயலாளரின் சிபார்சுடன், "சலன சித்திரம்", கொடிகாமம் வீதி, கர வெட்டி என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (உ)

## வன்னி மாவட்டத்தில் உள்ள கண்ணிவெடிகளை அகற்ற நடவடிக்கை

(கொழும்பு)

கடந்த யுத்த காலங்களில் வன்னிப் பிரதேசத்தில் புதைக்கப்பட்டுள்ள நிலக்கண்ணி மற்றும் மிதி வெடிகளை அடுத்த ஆண்டுக்குள் முற் றாக அகற்ற புனர்வாழ்வு மீள் குடி யோற்ற அமைச்சு தீர்மானித்துள் ளது.

அதற்கமைய வன்னிப் பிர தேசத்தில் உள்ள முல்லைத்தீவு, வவுனியா, மன்னார் போன்ற 3 மாவட்டங்களிலும் மனிதாபிமான நிலக் கண்ணிவெடி அகற்றும் பிரிவும் நோர்வேயும் இணைந்து இந்தப் பணிகளை மேற்கொண்டுள்ளன.

இம் 3 மாவட்டங்களிலும் கண்ணி வெடி, மிதிவெடி அபாயம் உள்ள இதுவரை 76 கிராமங்கள் மாவட்டச் செயலாளர்களினால் தெரிவுசெய்யப்பட்டுள்ளன. (தி-61)

## இந்து சமய சொற்பொழிவுகளை நிகழ்த்த உப்சாலா பல்கலைப் பேராசிரியர் திங்களன்று யாழ் வருகிறார்

(கொழும்பு)

சுவிடிஷ்நாட்டு உப்சாலா பல்கலைக் கழகப் பேராசிரியர் பீற்றர்ஷாக், இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரனின் அழைப்பை ஏற்று இந்து சமய ஆராய்ச்சி சொற்பொழிவுகளை நிகழ்த் துவதற்காக இலங்கை வந்துள்ளார்.

பேராசிரியர் ஷாகதமது துணைவியார் ஜேட்ஷாக்குடன் நேற்று முன்தினம் இலங்கைக்கான தனது 3வார விஜயத்தை ஆரம்பித்துள்ளார்.

உப்சாலா பல்கலைக்கழகத்தின் இந்திய பாட நெறிகளின் பீடாதிபதியான இவர் இந்து சமயம் பற்றி விரிவான ஆராய்ச்சிகளை மேற்கொண்டுவருவதுடன் பல நூல் களையும் எழுதியுள்ளார் .இவரது புலமைத் ததுவத்தை எமது நாட்டு அறிஞர் களும் பகிர்ந்து கொள்ளும் வகையில் இவ்விஜயம் ஏற்பாடாகியுள்ளது.

எதிர்வரும் 22ஆம்திகதி திங்கட் கிழமை பேராசிரியர் ஷாக்கும் அவரது மனைவியாரும் யாழ்ப்பா ணம் விஜயம் செய்யவுள்ளனர்.

இதற்கான சகல ஏற்பாடுகளையும யாழ். பல்கலைக்கழக துணை வேந்தர் பேராசிரியர் எஸ். மோகனதாஸின் பணிப்புரைக்கமைய பல்கலைக்கழக இந்து கலாசார பீடம் மேற்கொண்டுள்ளது. பேராசிரியர் ஷாக் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகததில பல தொடர் உரைகளை நிகழ்த்தவுள்ளதுடன் அவரது மனைவியார் திருமதி ஜேட்ஷாக் சிறுவர் இல்லங்கள், வலுவிலந்தோர் இல்லங்கள், முதியோர் இல்லங்கள் ஆகியவற்றைப் பார்வையிடுவதுடன் , அவற்றுக்கான உதவிகளை வழங்குவதற்கான முயற்சிகளில் ஈடுபடவுள்ளார். (உ)

## அத்துருகிரிய இராணுவக் களஞ்சியம் பாராளுமன்ற தெரிவுக்குழு நியமிக்க அமைச்சரவை தீர்மானம்

(கொழும்பு)

அத்துருகிரிய மிலேனியம் சிற்றி இராணுவக் களஞ்சியத்தோடு தல தொடர்பான அனைத்து விடயங்களையும் ஆராய்வதற்காக பாராளுமன்றத் தெரிவுக்குழுவை நியமிக்க அமைச்சரவை தீர்மானித்துள்ளது.

கடந்த 2002ஆம்ஆண்டு இராணுவக கட்டளை இடும் சட்டத்தின் கீழ், நாட்டின் பாதுகாப்புத் தொடர்பாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து வெளியிடப் பட்ட ஆணைக குழு அறிக்கைக்கும் இவ் இராணுவக் களஞ்சியம் தொடர்பான தேடுத லின் பின், விசாரணைக்கென நிய மிக்கப்பட் குழுவின் அறிக்கைக்கும் இடைய்ில் வேறுபாடுகள் காணப் பகின்றன.

இவ்விரு அறிக்கைகளினதும் முரண்பாடுகளை நீக்குவதற்காகவே இத்தீர்மானம் எடுக்கப்பட்டது. (தி-61)

### வழிகாட்டல் கருத்தரங்கு

கணக்காளர் தரம் II ற்கான பரீட்சை வழிகாட்டல் கருத்தரங்கு இன்று காலை9.00 மணிக்கு யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறவுள்ளது.

யாழ்.மாவட்ட அரச நிறுவனங்களில் பணிபுரியும் கணக்காளர்கள் கருத்துரை வழங்கவுள்ளனர்.(இ-4,5)




## சண்டியனுக்குப் பயமில்லை

அவர்கள் ஒருவாளியைச் சாயம் கரைக்கப்பட்ட தண்ணீரால் நிரப்பி அதை அவன் வரும் வழியில் உள்ள மரக்கொப்பில் கட்டிவிடுகின்றனர். மிதுவை ஒரு பெண்பிள்ளையைப் போன்று உடையுடுத்து அந்த மரத்தின் கீழ் நிற்க வைக்கின்றனர். புதிய பெண்பிள்ளையைக் கண்ட சண்டியன் அவளைக் கேலி செய்யப்போகிறான். மிதுவை நோக்கி அவன் போகும்போது வழியில் கட்டி வைக்கப்பட்ட கயிற்றின் மீது மிதிக்கின்றான். அப்பொழுது வாளி சரிந்து அவன் மீது நிறத்தண்ணீர் கொட்டுகிறது. அவன் முற்றாக நனைந்து விடுகிறான். அவனுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை. அவனை நண்பர்கள் தவிக்க விட்டு விட்டு ஓடி விடுகின்றனர். மீனாவும் அவளின் தம்பி ராஜு"வும் சண்டியனுக்கு உதவுகின்றனர். ரீற்றாவுக்கு இப்பொழுது மன நிம்மதி. இனி மேல் அந்தச் சண்டியன் தன்னைக் கேலிசெய்ய மாட்டான் என்று அவளுக்குத் தெரியும். பாடசாலைக்குப் போக இனிமேல் பயப்படத் தேவை யில்லை. சண்டியன்களால் ஏற்படும் பிரச்சினைகளைத் தீர்ப்பது இலகுவானது என்பதை அவள் உணருகிறாள். அதற்கு பெண்பிள்ளைகள் ஒன்றாகச் சேர்தல் வேண்டும். ரீற்றாவுக்கு இப்பொழுது சுய நம்பிக்கையும் சுயபலமும் வந்து விட்டன.



உங்கள் தொடர்புகளுக்கான எங்கள் முகவரி:–
மாவட்ட சிறுவர் பாதுகாப்புக் குழு
அறை எண் – 30,
யாழ். போதனா வைத்தியசாலை,
யாழ்ப்பாணம்.

unicef (C/6946)

★ நத்தார் – புதுவருட விலைக் கழிவுகள், ★ நத்தார் – புதுவருட சலுகைகள்
ஒன்றை வாங்கி மற்றொன்று இலவசமாகப் பெற்றுக்கொள்ளுங்கள்
★ நத்தார் – புதுவருடத்தில் பொன்னான வாய்பபுக்களைத் தவறவிடாதீர்கள்

விரையுங்கள் இச்சலுகை கையிருபபு உள்ளவரை மட்டுமே!

பண்டிகை, தினசரி தேவைகளுக்கு எங்களிடமிருந்து பெற்றுக்கொள்ளுங்கள்

நியாய விலையில்
தரமான பொருட்கள் ஒரே கூரையின் கீழ்!
யாழ். நகரில் 1ஆவதாக முற்றிலும்
நவீனமயப்படுத்தப்பட்டது.




★ நத்தார் பண்டிகைப் பொருட்கள்
★ இறைச்சி வகைகள்
★ வெளிநாட்டு பழவகைகள்
★ அன்பளிப்புப் பொருட்கள்
★ ஐஸ்கிறீம் வகைகள்
★ பழப்பானங்கள்
★ சிகை அலங்காரப் பொருட்கள்
★ மளிகைப் பொருட்கள்
★ வீட்டுப்பாவனை பொருட்கள்
★ தங்க நகைகள்
★ மருந்துவகைகள் மேலும் பல...


175, கே.கே.எஸ். வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: (021) 2225515, (021) 2225223

வலம்புரியின்

# 4ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்புமலர்

ஐந்தாம் ஆண்டில் கால் தடம் பதிக்கும் வலம்புரியே!
உன் சேவை மென்மேலும் சிறப்புற்று நீடூழி வாழ வாழ்த்துகின்றோம்!

இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி விசேட விலைக் கழிவில் விற்பனைக்கு



## பவர் செலுலர்



24 மணி நேரத்தில் பக்கேஜ் இணைப்புக்களுடனான மேசைத் தொலைபேசி எப்பிரதேசத்திற்கும் பொருத்தித் தரப்படும்.

உள்வரும் அழைப்புக்கள் முற்றிலும் இலவசம்

உத்தரவாதம் உண்டு

I.D.D இணைப்புக்கள் ஸ்ரீலங்கா ரெலிகொம்முடன் இணைக்கப்பட்டுள்ளது

எமது சேவை கேபிள் இணைப்புக்கள் இல்லாமல் எப்பிரதேசத்திற்கும் இயங்கக்கூடிய சேவை. இது அன்ரனா மூலம் இயங்குகின்றது.

HAND PHONE UNLOCK செய்து தரப்படும்

HAND PHONE பழுது பார்க்கப்படும்



புது வருடத்தை முன்னிட்டு மாபெரும் சிறப்புத் தள்ளுபடியுடன் உங்களுக்கு வழங்குகின்றோம்

மேலதிக விபரங்களுக்கு

# பவர் செலுலர் ட்ரேடிங் கம்பனி

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
(ராஜா தியேட்டர் அருகாமை)

தொ.பேசி: 021 222 7070, 0712 399220, 0712 384624, 0777 242416.

## இன்று ஒரு தகவல்

# அன்பின் பெருமை

"இந்த உலகத்தில் எல்லோருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு பொருள் எது?" இது ஒரு முக்கியமான கேள்வி. இந்தக்கேள்விக்குப் பொருத்தமான ஒரு பதிலை உங்களால் கூறமுடியுமா? சிறிது யோசித்துப் பாருங்கள். பணம் என்று சொல்லலாமா? கையில் காசில்லாதவனிடம் பத்து ரூபா கொடுத்தால் அது அவனுக்கு சந்தோஷத்தை கொடுக்கும். ஏற்கனவே வருமானவரி பிரச்சினையில் இருப்பவருக்கு "இந்தாருங்கள் இன்னும் கொஞ்சம் பணம்" என்று கூறினால்... அது சங்கடத்தைத்தான் தரும்!

சரி... இனிப்பு என்று கூறலாமா? சர்க்கரை வியாதி உள்ளவர்களுக்கு அது சந்தோஷத்தையா கொடுக்கும்? ஆக... எல்லோருக்கும் வேறுபாடு எதுவும் இல்லாமல் சந்தோஷத்தைக் கொடுக்கக்கூடியது வேறு ஏதோ ஒன்று இருக்கின்றது. அது என்னவென்று கண்டுபிடிப்போம். அது தான் இன்றைய தகவல். அதைக்கண்டு பிடிக்கவேண்டும் என்றால் இந்தக் கதையைக் கேளுங்கள்.

ஒரு ஊரில் ஒரு ராஜா இருந்தார். அவருக்கும் இதே சந்தேகம் வந்து விட்டது. அதாவது... எல்லோருக்கும் சந்தோஷத்தைத் தரக்கூடிய பொருள் எது? என்று. இதற்குப் பதில் தெரிந்துகொள்ள ஆசைப்பட்டார். சரி... அதற்கு என்ன செய்யலாம் என்று யோசித்தார். நாட்டு மக்களுக்குப் பகிரங்கமாக ஓர் அறிவிப்புக் கொடுத்தார். "நமது நாட்டு மக்கள் இன்பம் தரக்கூடிய பொருள் எது என்று நினைக்கின்றார்களோ அதைக் கொண்டு வந்து அரண்மனையில் உள்ள கண்காட்சி மண்டபத்தில் வைக்கலாம். அப்படி அவர்கள் வைக்கும் பொருட்களில் எது எல்லோருக்கும் இன்பம் தரக்கூடியதாக இருக்குமோ அதை வைத்தவருக்கு 1000 பொற்காசுகள் பரிசு" என அறிவித்துவிட்டார்.

நாட்டு மக்கள் இவ் அறிவிப்பைக் கேட்டனர். சும்மா இருப்பார்களா? 1000 பொற்காசுகள் என்றால் சும்மாவா? அவரவர் கையில் என்னென்ன கிடைத்ததோ அவற்றைக் கொண்டுவந்து அரண்மனையில் வைத்துவிட்டனர்.

அதன் பின் ராஜா வந்தார். ஒவ்வொன்றாகப் பார்த்துக் கொண்டு வந்தார். முதலில் ஒரு குயில் இருந்தது. இனிமையாகப் பாடக்கூடியது குயில். "இந்தக் குயிலின் இன்னிசை எல்லோருக்கும் இன்பம் தரக்கூடியது தான்... இருந்தாலும் காது கேளாதவர்களுக்கு இந்த இசை எப்படி இன்பம் தர முடியும்? எனவே இது சரியில்லை" என்றார். அடுத்து ஒரு அழகான மயில் தோகை விரித்தாடிக்கொண்டிருந்தது.

"இந்த மயிலின் ஆட்டம் மனதிற்கு இன்பம் தரக்கூடியது தான். இருந்தாலும் பார்வையற்றோர் இந்த ஆட்டத்தைப் பார்த்து ரசிக்க முடியாதே! அதனால் இதுவும் சரி இல்லை" என்று கூறி விட்டார்.

பலவகையான இனிப்பு வகைகளை வைத்திருந்தார்கள். அதைப்பார்த்தார். "வயதானவர்களுக்கும் நோயாளிகளுக்கும் இது இன்பம் தராது. துன்பம் தான் தரும்" என்றார். இப்படியே பார்த்துக் கொண்டு சென்றார். அழகான மலர்கள், கனிகள், ஓவியங்கள் எதுவும் பொருத்தமானதாக இல்லை.

கடைசியாக ஒரு களிமண் பொம்மை இருந்தது. அது என்ன பொம்மை தெரியுமா? பசியால் வாடும் ஒருவருக்கு ஒரு பெண்மணி இனிமையாகப் பேசிக்கொண்டு உணவளிப்பது போன்ற பொம்மை. அதற்குக்கீழே "அன்பு" என்று எழுதியிருந்தது. ராஜா "பளிச்" என்று ஒரு முடிவுக்கு வந்தார்.அந்த பொம்மையைச் செய்த சிற்பியை வரவழைத்தா. பரிசு கொடுத்தார். "அன்பு ஒன்று தான் எல்லோருக்கும் இன்பம் அளிக்கக்கூடிய பொருள். காது கேளாதவர்களும் அதைக்கேட்க முடியும். பார்வையில்லாதவர்களும் அதைப்பார்க்க முடியும். குழந்தைகளும் அதை உணர முடியும்" என்று அதற்கு விளக்கம் கொடுத்தார். இந்த உலகத்தில் எல்லோருக்கும் மகிழ்ச்சி தரக்கூடிய ஒரு பொருள் அன்பு தான்.

இதனைப் புரிந்துகொண்டு தான் சில கணவன்மார்கள் மனைவி மீது மிகுந்த அன்பு காட்டுவார்கள். ஒரு வீட்டு வாசற்படிப் பக்கமாக மழைக்கு வந்து ஒதுங்கினார் ஒருவர். மழை தூறிக்கொண்டிருந்தது. இருட்டு நேரம்.அந்த வீட்டில் இருந்தவர் "இன்று இரவு இங்கே தங்கிவிட்டு விடிந்த பின் போங்கள்" என்றார். உடனே இவர் "மிக்க நன்றி... பத்து நிமிடத்தில் வந்து விடுகின்றேன்" என்று கூறி எங்கோ சென்றார். பத்துநிமிடம் கழித்துத் திரும்பி வந்தார்."எங்கே போய் விட்டு வருகின்றீர்கள்?" என்றார் வீட்டில் இருந்தவர்."என் வீட்டிற்குப்போய் மனைவியிடம் இன்றிரவு இங்கே தங்குவதாகக் கூறி விட்டு வந்தேன்" என்றார் அவர். அன்பில் இது ஒரு ரகம்.

*தென்கச்சி கோ. சுவாமிநாதன்*

# நாட்டின் அரசியல் நெருக்கடியை சீர் செய்யும் முயற்சிகள் காலதாமதம்

(கொழும்பு)

ஜனாதிபதி மூன்று அமைச்சுக்களை பொறுப்பேற்றதால் எழுந்த அரசியல் நெருக்கடி நிலையை சீர் செய்யவென நியமிக்கப்பட்ட மனோ- மலிக் தலைமையிலான குழுவினர் தமது நடவடிக்கைகளை தற்போது பிற்போடவேண்டிய நிலைக்குள்ளாகியுள்ளனர்.

வரவிருக்கும் கிறிஸ்மஸ் பண்டிகையை முன்னிட்டு, இவர்கள் இருவரும் தனித்தனி வேலைத்திட்டங்களில் தம்மை ஈடுபடுத்திக் கொண்டுள்ளனர். இவர்களில் ஒருவர் கிறிஸ்மஸ் விடுமுறைக்காக வெளி நாடு செல்லவிருக்கிறார்.

பேச்சுக்கள் ஒத்திப்போடப்பட வேண்டியுள்ளமைக்கு இதுவே காரணம் எனத்தெரிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி,பிரதமரினால் கூட்டாக முன்வைக்கப்படும் சில பிரேரணைகள்பற்றி இக்குழு ஆராய்ந்து வந்துள்ளது.

அத்துடன் ,பிரதமரும் ஜனாதிபதியும் இம்மாத இறுதியில் மீண்டும் ஒரு தடவை சந்தித்து பேசவுள்ளமை பற்றியும் இக்குழுவினர் பேச்சுக்களை நடாத்தி வந்தனர்.

இதேவேளை, ஜனாதிபதியின் சிரேஷ்ட ஆலோசகர் மனோதித்தவெல நேற்று வெளிநாடு சென்றிருப்பதுடன் அவர் மீண்டும் எதிர்வரும் ஜனவரி முதல் வாரத்தில் நாடு திரும்பவுள்ளார். இவர் நாட்டில் இல்லாத சமயம் இடம் பெறும் எத்தகைய கூட்டங்களிலும் அவருக்கு பதிலாக ஜனாதிபதியின் செயலாளர் எஸ். கருணாரட்னவே கலந்து கொள்வார்.

இது தவிர ,மிக முக்கியமான சட்ட விவகாரங்கள் பற்றி குழுவினர் ஆழமாக முடிவு செய்யவேண்டியுள்ளதும் குறிப்பிடத்தக்கது. (உ-6)

## தமிழகத்தைச் சேர்ந்த

# ஆதீன முதல்வர்கள் , மடாதிபதிகள் இலங்கைக்கு ஆன்மீக விஜயம்

(யாழ்ப்பாணம்)

சைவ சமய எழுச்சியை ஏற்படுத்தும் நோக்குடன் இந்து சமய விவகார அலுவல்கள் அமைச்சர் தி.மகேஸ்வரன் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க, தமிழக ஆதீன முதல்வர்களும் மடாதிபதிகளும் இலங்கை வர்வுள்ளனர்.

இந்த வகையில், இம் மாதம் 27ஆம்திகதி சனிக்கிழமை பேரூர் ஆதீன முதல்வர் தவத்திரு சாந்தலிங்க அடிகளார் தமது அருள் கூட்டத்தினருடன் இலங்கை வரவுள்ளார். இவர் ஜனவரி மாதம் 4ம்திகதி வரை ஈழத்தில் தங்கியிருந்து யாழ்ப்பாண ஆலயங்கள் மற்றும் திருக்கோணேஸ்வரம், திருக்கேதீஸ்வரம், கதிர்கமாம் முதலான திருத்தலங்களை தரிசித்து அருளுரைகள் வழங்கவுள்ளார்.

அதே தினம் தருமபுர ஆதீனம் ஸ்ரீமத் குமாரசாமி தம்பிரானும் ஈழத்திற்கான இருவார கால விஜயத்தை மேற்கொண்டு இலங்கை வரவுள்ளார். இவர் இலங்கை பூராவுள்ள முக்கிய தலங்களைத் தரிசித்து உபன்னியாசங்கள் நிகழ்த்துவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகின்றன.

இதேசமயம் கௌமார மடத்தைச் சேர்ந்த குமரகுரு அடிகளார் ஒருவார கால விஜயத்தை மேற்கொண்டு எதிர்வரும் 3ஆம்திகதி இலங்கை வருவதற்கும் ஏற்பாடாகியுள்ளது.

ஆதீன முதல்வர்களையும் மடாதிபதிகளையும் தத்தமது பகுதிகளில் அழைத்து கௌரவிக்க விரும்புவோர் இந்து கலாசார அமைச்சரின் செயலாளர் க. பரமேஸ்வரனுடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளது.

0112554804- 0112552641 ஆகிய தொலைபேசி இலக்கனூடாகத் தொடர்புகளை ஏற்படுத்த முடியும். (உ)

## இராசி பலன்

**20. 12. 2003**
**(மார்கழி 05,சனி)**
துவாதசி மு.இ.10.44 வரை
சுவாதி மு.ப.8.45 வரை
இராகுகாலம் 9.24-10.54
சுபநேரம் 3.24-4.54
அமிர்த சித்தம்

**மேடம்**
கலந்துரையாடல், எடுத்தகாரியம் கைகூடும், தெய்வசிந்தை, அபூர்வ சந்திப்பு.

**இடபம்**
செய்தொழில் விருத்தி, சந்தோசமான நிகழ்வு, பெரியோர் சந்திப்பு முயற்சி கைகூடும்.

**மிதுனம்**
மனக்கவலை, காரிய இடையூறு, அஜீரண ரோகம், கௌரவக் குறைவு.

**கடகம்**
தன்நம்பிக்கைக் குறைவு, முயற்சி தாமதம், வாக்குமேன்மை, கல்வியில் ஆர்வம்

**சிங்கம்**
கூட்டு முயற்சி, இனிய அனுபவம், போசன சுகம், நல்ல வரவேற்பு.

**கன்னி**
பொருள் விரயம், எடுத்தகாரியம் தாமதமாகும், பிரயாணம், உறவினர் சந்திப்பு.

**துலாம்**
கற்பனை மிகுதி, தொழில் நன்மை, எடுத்த காரியம் கைகூடும், விருந்துபசாரம்.

**விருச்சிகம்**
காரிய தாமதம், சயனசுகக் குறைவு, வீண் வார்த்தை, பொருள் விரயம்.

**தனுசு**
உஷ்ணநிலை, எதிர்பாராத நன்மை, காரிய அனுகூலம், நல்ல வருமானம்.

**மகரம**
சுபநிகழ்வு, கடின முயற்சி, அதிகாரம், நல்லசெய்தி.

**கும்பம்**
புதிய முயற்சி, உடல் உழைப்பு, வயிற்றுக்கோளாறு, சயனசுகம்.

**மீனம்**
காரிய தடங்கல், திருடர் பயம், வாகன பயம், போசன சுகம்.

**(பழைய நேர்ப்படி கண [illegible] பிடப்பட்டது)**

**- வளவன்.**

**இலங்கை-இந்திய பாதுகாப்பு உடன்படிக்கை**

# இறுதி முடிவொன்றை எட்டுவதில் ஜனாதிபதி மிகுந்த ஆர்வம்

(கொழும்பு)

இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான படைத்துறை உடன்படிக்கை தொடர்பாக இந்திய உயர் அதிகாரிகளுடன் ஆராய்ந்து இறுதி முடிவொன்றை எடுப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தயாராகி விட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி உடன்படிக்கையில் கைச்சாத்திடுவது தொடர்பான இறுதி முடிவொன்றை எடுப்பதற்கு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க முன்னுரிமை கொடுத்துள்ளதாக பொது ஜன ஐக்கிய முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் நிமால் சிறிபால டிசில்வா தெரிவித்துள்ளார்.

கடந்த புதன்கிழமை பாராளுமன்றில் உரையாற்றும் போதே மேற்படி விடயத்தை நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார். அவர் அங்கு தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

ஐககிய தேசிய முன்னணி அரசாங்கத்தைப் போலவே, இது விடயத்தில் ஜனாதிபதியும் மிகவும் முக்கியத்துவம் கொடுத்துள்ளார்.

இலங்கைக்கும் இந்தியாவுக்கம் இடையிலான இப்படைத்துறை உடன்படிக்கை எதிர்வரும் மார்ச் மாதம் கைச்சாத்திடப்படுவதற்கான முயற்சிகளை அரசாங்கம் மேற்கொண்டு வருகின்றது எனக் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, வெளிவிவகார அமைச்சர் டிரோன் பெர்னாண்டோவும் அண்மையில் இவ் உடன்படிக்கையில கைச்சாத்திடுவது தொடர்பாக கருத்து வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (உ-18,63)

# பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர் தொகை வருடாந்தம் வீழ்ச்சி

பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் எண்ணிக்கை வருடாந்தம் குறைந்து வருவதாக கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இது தொடர்பாக கல்வி அமைச்சு நடத்திய ஆய்வு அறிக்கையில்,

வருடாந்தம் சுமார் 25ஆயிரம் முதல் 40 ஆயிரம் மாணவர்கள் கல்வியை இடை நிறுத்துகின்றனர்.

இதற்கமைய எதிர்வரும் 2008ஆம் ஆண்டு இத்தொகை 38 இலட்சமாக அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதனால்,பாடசாலைகளின் செயற்பாடுகள் குறைந்து வருகின்றன அத்துடன் மாணவர்களின் எண்ணிக்கை விகிதத்திற்கு அதிகமான ஆசிரியர்கள் தமது கடமைகளை ஆற்ற வேண்டியும் நிலை ஏற்படும்.

அத்துடன், மேலதிக சேவையில் உள்ள ஆசிரியர்களுக்கு சம்பளம் வழங்குவதில் சிக்கல்கள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.இதனைக் கட்டுப்படுத்த கல்வி அமைச்சு நடவடிக்கை எடுத்து வருவதாகவும் குறிப்பிடப் பட்டுள்ளது. (தி-61)

# பன்முக ஆளுமை கொண்ட தமிழறிஞர் சதாசிவ ஐயர்

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே குறிப்பிடத்தக்க முக்கியத்துவம் வாய்ந்தவராக முகாந்திரம் தி.சதாசிவ ஐயரவர்கள் காணப்படுகின்றார். ஈழத்து இலக்கிய ஆய்வு முயர்சிகளில் ஆர்வம் அதிகரித்துவரும் இந் நாட்களிலே மிக அண்மைக் காலம் வரைவாழ்ந்து மறைந்த சதாசிவ ஐயரைப் பற்றிப்போதியளவு நம்மவர் உணரவில்லையென்பது கவலைக்குரியதாகும். இருபதாம் நூற்றாண்டு ஈழத்துத் தமிழ் அறிஞர்களுள் பன்முக ஆளுமை கொண்டவராக திகழ்ந்த தி.சதாசிவ ஐயரை இன்றைய தலைமுறையினருக்கு அறிமுகம் செய்து வைப்பதே இக்கட்டுரையின் பிரதான நோக்கமாகும்.

தமிழிலும் வடமொழியிலும் நிரம்பிய புலமையாளனும் கோயிற் கிரியை முறைகளிலும் ஆசார அனுட்டானங்களிலும் பயிற்சியும தேர்ச்சியுமுடைய வரான தியாகராஜ ஐயருக்கும் நாகரத்தின அம்மாவிற்கும் சிரேஷ்ட புத்திரனாக 1882 ஆம் ஆண்டு அளவெட்டியிலே சதாசிவ ஐயர் பிறந்தார். இதே ஆண்டிலே தான் எட்டயபுரத்திலே சின்னச்சாமி ஐயருக்கும் இலக்குமி அம்மாளுக்கும் புதல்வராகச் சுப்பிரமணிய பாரதியார் பிறந்தார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

அளவெட்டியில்தமிழ்ச்சைவச் சூழலிலே மரபுவழித் தமிழக் கல்வியைப பெற்ற ஐயர், அளவெட்டி ஆங்கில வித்தியாசாலையிலே கற்ற ஐயர் பின்னர் யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியிலே கற்று கேம்பிறிஜ் சீனியர் பரீட்சையில தேறினார். தமிழ், சமஸ்கிருதம் , ஆங்கிலம், இலத்தீன் முதலான மொழிகளிலே சிறப்புத் தேர்ச்சி உடையவராகத் திகழ்ந்த ஐயரவர்கள் அக்காலத்தில் கொழுமபில் இயங்கிய சிரேஷ்ட ஆசிரிய பயிற்சிக் கலாசாலைக்குத் தெரிவு செய்யப்பட்டு இரண்டு ஆண்டுகள் ஆசிரியப் பயிற்சி பெற்றார். பின்னர் சிலகாலம் ஆசிரியராகப் பணியாற்றிக் கொண்டே கல்கத்தாப பல்கலைக்கழக F.A பரீட்சையில் முதற்பிரிவிலே சித்தியெய்தினார். F.A பரீட்சையில் ஆங்கிலத்திலும் சமஸ்கிருதத்திலும்விஷேட சித்தி யைப் பெற்றமை குறிப்பிடத் தக்கது.

ஆசிரியராக, அதிபராகப் பணியாற்றிய சதாசிவஐயர் தமது திறமையினாலும் விடா முயற்சியாலும் படிப்படியாக உயர்ந்து மாவட்டக் கல்வியதிகாரியானார். அக்காலத்திலே கல்வி அதிகாரி எனும் பதவி மிக அதிகாரம் உள்ள உயர்ந்த பதவி என்பது குறிப்பிடத்தக்கது. ஏறத்தாழ நான்கு தசாப்தங்களாகக் கல்வித்துறையிலே பணியாற்றிய ஐயர் தமது உத்தியோகக் கடமைகளுக்கு மத்தியிலும் பன்முகப்பட்ட தமிழ்ப்பணி யாற்றியமை அவரது ஆற்றலையும் ஆளுமையையும் புலப்படுத்தி நிற்கின்றது.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே கல்வித்திணைக் களத்திற் பணிபுரிந்த இருவர் மிக முக்கியமான இடத்தை வகிக்கின்றனர். இருவரும் ஏதோ ஒருவகையில் சிறப்பான சில அம்சங்களை உடையவர்களாக, முதன் முயற்சியாளர்களாகக் கருதப்படுகின்றனர்.

கல்வித்துறையில் உயர் பதவி வகித்த க.ச. அருள் நந்தி கல்வித் தகைமையில் ஐயரி லும் மேம்பட்டவர். தமிழிலும் ஆங் கிலத் திலும் புலமைபெற்றிருந்த அருள்நந்தி விஞ்ஞானத்துறை யில Msc பட்டம் பெற்றவர். கல்வி உளவியலில் சிறப்புப் பட்டம் பெற்றவர். தமிழ் இலக்கிய, இலக்கணக் கல்விக்கு அதிக ஊக்கமளித்த அருள்நந்தியின் முயற்சியாலேயே தமிழ் உலகின் முதலாவது குழந்தைப் பாடல் தொகுதி எனக்கூறப் படும்பிள்ளைப்பாட்டு எனும் நூல் 1935ஆம் ஆண்டு வெளியானது.

அருள்நந்தியிலும் பார்க்க ஒரு படி மேலே சென்று ஐயர் பன்முகப் பட்ட தமிழ்ப்பணியாற்றியமை விதந்து குறிப்பிடத்தக்கது. ஐயரின் பணிகளுக்குப் பின்புலமாக இவர் வகித்த பதவிகளும்

**வலம்புரியின் 4வது ஆண்டு நிறைவு**
**சிறப்புக் கட்டுரை**

அமைந்தன என்பதும் குறிப்பிடத் தக்கது. ஐயரின் தமிழ்ப் பணிகளில் முக்கியமானதும், முதன்மையானதும் எனக் கொள்ளக் கூடியது இவரின் பதிப்புப் பணியே எனலாம்.

**பதிப்பு முயற்சிகள்**

தமிழ் நூற்பதிப்புத்துறையிலே ஈழநாட்டிற்குச் சிறப்பானதோர் இடமுண்டு. ஆறுமுகநாவலர், சி.வை.தாமோதரம்பிள்ளை முதலானோர் தமிழ்நூற் பதிப்புத்துறையின 'கொடுமுடிகளாகத்" திகழ்ந்தவர்கள். இவர்களுக்குப் பின்னரே உ.வே.சாமிநாதையர் பதிப்புத் துறையிலே ஈடுபட்டார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஈழத்துப் பதிப்பாசிரியர்களிலே சதாசிவ ஐயருக்கும் குறிப்பிடத்தக்கதோர் முக்கியத்துவம் உண்டு.

உ.வே.சா.பதிப்பித்த ஐங் குறுநூறு என்னும் சங்கநூலைச் சதாசிவ ஐயரும் பதிப்பித்துள்ளார். ஐங்குறுநூறு முழுவதற்கும் விளக்கவுரையோடு இருந்த கையெழுத்துப் பிரதியை உபகரித்தவரும் ஐயருடன் உடனிருந்து பிரதிசெய்தவருமான இளைப்பாறிய தலைமையாசிரியர் ஆ.தா.சுப்பிரமணியம் அவர்கள் அண்மையிலேதான் காலமானார். ஐங்குறுநூற்றிற்கு ஈழத்து உரையாசிரியர் ஒருவர் மிகச் சிறந்த விளக்கவுரையொன்று எழுதியமையைத் தமிழ் கூறும் நல்லுலகிற்குத் தெரியப்படுத்திய பெருமை சதாசிவ ஐயரையே சாரும். 1943இல் சதாசிவஐயர் பதிப்பித்த ஐங்குறுநூற்றினை அண்மையில் (2000) உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் மீள்பதிப்புச் செய்துள்ளது.

ஐங்குறுநூற்றின் கையெழுத்துப் பிரதியைஉபகரித்த ஆசிரியர் ஆ.தா.சுப்பிரமணியத்திற்கு ஐயர் நூலின் முன்னுரையிலே நன்றி கூறியிருக்கின்றார். அவர் கூற்றின் ஒரு பகுதி பின்வருமாறு:

**''இற்றைக்குச் சில ஆண்டுகளுக்கு முன் பருத்தித்துறையைச் சார்ந்த துன்னாலைப்பதிவாசரும் கரவெட்டிமேற்கு மெதடிஸ்த தமிழ்ப் பாடசாலைத் தலைமை ஆசிரியராய் இருப்பவரும் ஆகிய திருவாளர் ஆ.தா.சுப்பிரமணியம் அவர்கள் ஐங்குறுநூறு முழுவதற்கும் உரை எழுதிய காகிதக் கையெழுத்துப் பிரதியொன்று தம்மிடம் இருப்பதாகக் கூறி அப்பிரதியை எனக்கு அளித்தார்கள். இவ்வுரைப்பிரதியை எனக்களித்த திரு.சுப்பிரமணிய ம்வர்கள் இதனை அச்சிட்டு வெளிப்படுத்த வேண்டும் என விரும்பியமையால் யான் அவர் வேண்டுகோளையும் அவ்வுரைப் பிரதியையும் யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருத்திச்சங்க நிர்வாக சபையாருக்குச் சமர்ப் பித்தேன். தம்மிடம் இருந்த உரைப் பிரதியை சங்கத்திற்கு உபகரித்து இப்புத்தகம் வெளிவருவதற்குக் காரணமான திருவாளர் ஆ.தா. சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்களது பெரும் நன்றியும் தமிழார் வமும் என்றும் பாராட்டற்பாலன"**

ஐங்குறுநூறு பதிப்பாகி உலாவரக் காலாக அமைந்த ஆ.தா.சுப்பிரமணியம் ஆசிரியர் அவர்களை இக்கட்டுரை ஆசிரியர் பேட்டி கண்ட போது (ஆ.தா.சுப்பிரமணியம் இக்கட்டுரை ஆசிரியரின் ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது) பல முக்கியமான தகவல்களைப் பெற முடிந்தது. சதாசிவ ஐயர் ஐங்குறுநூறினைப் பதிப்பிக்கும் பொழுது, அக்காலத்து ஈழத்துத் தமிழறிஞர்கள் பலர் உதவி புரிந்துள்ளனர். குறிப்பாக, இப்பதிப்பு முயற்சியிலே நல்லூர்சுவாமி ஞானப்பிரகாசர் அதிக ஆர்வத்துடன் உதவிபுரிந்தார் என்று ஆ.தா.சுப்பிரமணியம் குறிப்பிட்டார். ஐங்குறுநூறு பதிப்புரையிலே ஐயர் இவர்களின் பெயரைக் குறிப்பிடவில்லை என்பதும் அவதானிப்புக்குரியது. ஐங்குறுநூறினைப் பதிப்பிக்கும் பொழுது உ.வே.சாமிநாதையரைப்போலப் பதிப்பிக்க வேண்டும் என்று சதாசிவ ஐயர் அடிக்கடி கூறுவார் என்றும் ஆ.தா.சுப்பிரமணியம் குறிப்பிட்டார்.

கலாநிதி
**எஸ்.சிவலிங்கராஜா**
(தமிழ்த்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

பெருமளவுக்குச் சதாசிவ ஐயர் உ.வே.சாவின் பாணியையே பின்பற்றியுள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது. ஊ.வே.சாவின் பதிப்பு முறையியலை இவர் பின்பற்றியதனால் போலும் உடனிருந்து உதவியவர்களைக் குறிப்பிடாது விட்டாரோ எனக் கருதவேண்டியுள்ளது. எனினும், சதாசிவ ஐயர் பதிப்பித்த ஐங்குறுநூறு உ.வே.சா பதிப்பித்த ஐங்குறுநூறிலும் பார்க்கச் சிறப்புடையதாகக் காணப்படுகின்றது.

**கரவைவேலன் கோவை**

சதாசிவ ஐயரின் பதிப்பு முயற்சிகளில் விதந்து போற்றக்கூடியதாக அமைவது கரவைவேலன் கோவைப பதிப்பாகும். 1935ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷா விருததிச் சங்கத்தாரால் வெளியிடப்பட்ட இக்கோவைப் பிரபந்தம் அவர்களின் பரீட்சைக்குரிய பாடநூலாகவும் இருந்தமை குறிப்பிடத்தக்கது. நல்லூர் சின்னத்தம்பிப் புலவரால் இயற்றப்பட்ட கரவைவேலன் கோவையை அழிந்துபோகவிடாது பதிப்பித்த பெருமை சதாசிவ ஐயரையே சாரும் இதனால் ஈழத்து இலக்கிய வரலாற்றிலே ஐயர் தனித்துவமானதோர் இடத்தைப் பெறுகின்றார் எனலாம். சதாசிவ ஐயர் பதிப்பித்த ஐங்குறுநூறிலும் பார்க்கப் பல வழிகளில கரவைவேலன் கோவைப்பதிப்பு செம்மையுடையதாகவே காணப்படுகின்றது. இந்நூலின் பதிப்புரையிலே ஐயர் பின்வருமாறு குறிப்பிடுகின்றார்.

**''இந்நூலில் இருந்து சில செய்யுட்களை எடுத்துச் சுன்னாகம் அ.குமாரசுவாமிப் புலவரவர்கள் செந்தமிழ்ப் பத்திரிகை வாயிலாக வெளியிட்டார்கள். அந்நாள் தொடங்கி இந்நூல் முழுவதையும் பதிப்பிப்பதற்கு தமிழன்பர் பலர் ஆவலாயிருந்தனர். எனினும், மூலப்பிரதி அகப்படாமையால் இந்நூல் அச்சில் வெளிவந்திலது. 1932ஆம் ஆண்டில் இந்நூற் காகிதப் பிரதியொன்று கரவைவேலன் வழித்தோன்றிய கந்தப்புச் சட்டம்பியார் சங்கரப்பிள்ளை என்பவரிடம் இருந்து அரிதிற் கிடைப்பதாயிற்று. தமிழுக்கும் தமிழ் உலகத்திற்கும் உபகாரமாகும்படி இப்பிரதியைத் தந்துதவிய கரவெட்டி க.சங்கரப்பிள்ளையவர்களது நன்றியும் இதிலொரு பாகத்தைக் கரலிகித வழுக்களைந்து பிரதி பண்ணிக்கொடுத்த கரணவாய் பண்டிதர் திரு.செவ்வந்திநாத தேசிகரவர்கள் செய்த நன்றியும் என்றும் போற்றற்பாலன.**

**மூலத்தைச் சுத்தபாடமாக்குதலிலும் அதற்கோர் அரும்பதவுரை அமைப்பதிலும் சலிப்பின்றி உடனிருந்து பெருந்துணை புரிந்தவர்கள் வித்துவான் கணேசையரவர்கள். கவிஞர் நவநீதகிருஷ்ண பாரதியார் அவர்கள், பண்டிதர் வே.மகாலிங்கசிவம் அவர்களுமாவார். இவர்கள் செய்த நன்றி என்றும் பாராட்டற்குரியது"**

கரவைவேலன் கோவைக்கு ஐயர் நீண்ட முகவுரையொன்று எழுதியுள்ளார். சின்னத்தம்பிப் புலவரின் வரலாற்றையும், யாழ்ப்பாணத்தின் கல்விப் பாரம்பரியத்தையும் விளங்கிக்கொள்ள இம் முகவுரை பெரிதும் உதவுகின்றது.

**''சின்னத்தம்பிப் புலவருடைய வரலாற்றைப் பற்றிய விசாரணையில் ஆங்காங்கு கிடைத்த செய்திகளைத் திரட்டி உத்தேசமாக இங்கு கூறியவற்றை அறிஞர்கள் நன்கு ஆராய்ந்து உண்மை காண்பார்களாக "**

என்று ஐயர் குறிப்பிடுவது பாராட்டிற்குரியது.

ஈழத்தின் அல்லது யாழ்.குடா நாட்டின் வரலாற்றை அறியக்கூடிய தகவல்கள் இக்கோவைப் பிரபந்தத்தில் காணப்படாவிடினும், ஈழத்து இலக்கிய வரலாற்றின் ஒருகால கட்டத்தின் இலக்கியப் போக்கினையும் நோக்கினையும் அறிய உதவுவதோடு சின்னத்தம்பி புலவரின் இலக்கிய ஆளுமையையும் கண்டுகொள்ள உதவுகின்றது.

**மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு**

சதாசிவ ஐயரின் பதிப்பு முயற்சிகளில் அடுத்து விதந்து கூறக் கூடியது மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டு என்னும் நூலாகும். நாட்டார் பாடல் ஆய்வுகள், தொகுப்பு முயற்சிகள் பெருமளவு இடம் பெறாத காலகட்டத்திலே (1940) ஐயரவர்கள் மட்டக்களப்பு வசந்தன் கவித்திரட்டினைத் தொகுத்துப் பதிப்பித்தமை பாராட்டிற்குரியது. யாழ்ப்பாணத்திலே பிறந்து வளர்ந்து அதன் கல்விப் பாரம்பரியத்தினூடு மேற்கிளம்பிய சதாசிவ ஐயர் ''உத்தியோக நிமித்தம்'' (வித்தியாதரிசியாக) மட்டக்களப்பிலே பணியாற்றிய கால கட்டத்திலே, மட்டக்களப்புப் பிரதேசத்திலே வழங்கும் நாட்டார் இலக்கியத்தின்பால் ஈர்க்கப்பட்டு இத்தொகுப்பு முயற்சியிலே ஈடுபட்டார் எனலாம்.

மட்டக்களப்பு பிரதேசத்திலே வழங்கும் நாட்டார் பாடல்களினால் ஈர்க்கப்பட்ட யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த தமிழறிஞர்கள் பலர் அப்பாடல்களைத் தொகுப்பதிலும் அச்சிட்டுப் பாதுகாப்பதிலும் அதிக ஆர்வம் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. வட்டுக்கோட்டை இராமலிங்கம், குலசபாநாதன், பேராசிரியர் சு.வித்தியானந்தன் இவர்க ளோடு யாழ்ப்பாணம் காரை நகரைப்



கலாநிதி எஸ்.சிவலிங்கராஜா

பிறப்பிடமாகவும் மட்டக்களப்பைப் புகுந்த இடமாகவும் கொண்ட மகாவித்துவான் எவ்.எக்ஸ்.சி. நடராசா முதலியோர் விதந்து குறிப்பிடப்பட வேண்டியவர்கள். இவர்களுக்கெல்லாம் முன்னோடியாக விளங்குபவர் சதாசிவ ஐயரே எனலாம்.

''பாமர இலக்கியம் என நாட்டார் இலக்கியங்கள் இழித்துரைக்கப்பட்ட காலத்தில், பண்டித, வித்துவான்களின குழுவில் ஒருவராய் இருந்த ஐயர் ஆசிரியர்களின் உதவியோடு வசந்தன் கவித்திரட்டினைப்பதிப்பித் தமை நன்றியுடன் போற்றப்பட வேண்டியதாகும்.

**''யாழ்ப்பாணம் த.சதாசிவ ஐயர் அவர்களால் தொகுத்துப் பரிசோதிக்கப்பட்டு மட்டக்களப்பு தெற்கு தமிழாசிரியர் சங்கத்தாரால் வெளியிடப்பட்டது"**

எனக் குறிப்பிடப்படும் வசந்தன் கவித்திரட்டிற்கு ஐயர் (ஏறத்தாழ 25 பக்கங்களில்) நீண்ட முகவுரையொன்று ஆங்கலத்தில் எழுதியுள்ளார். நாட்டார் பாடல்களின் முக்கியத்துவம் அவற்றின் தோற்றம், இலக்கியத் தரம், அவற்றைப் பாதுகாக்கவேண்டியதன் அவசியம், அவை செல்வாக் கிழந்தமைக்கான காரணங்கள் முதலியன அ் முகவுரையிலே விரிவாக விளக்கப்பட் டுள்ளன.

**''மட்டக்களப்பு மக்களது வாழ்க்கையில் பெரும் மகிழ்ச்சிக்கும் கொண்டாட்டத்திற்கும் ஏதுவாய் முன்பு விளங்கியிருந்த இந்தப் பாடல்கள் கால வேறுபாடு காரணமாகக் கைவிடப்பட்டு ஒளிந்து மறைந்து போகாவண்ணம் இவற்றைக் காப்பாற்றி வைக்கவேண்டும் என்ற ஆசையே இவ் வேலையில் என்னை ஈடுபடுத்தியது**"என்று குறிப்பிடுகின்றார்.

ஐயரவர்களின் 'ஆசை' அவரது ஆற்றலையும் இரசிகத் தன்மையையும் நோக்குநிலையினையும் புலப்படுத்துகின்றது. வசந்தன் கவிகளைக் கட்டியம், கோத்திரம், சரித்திரம், தொழில், வேடிக்கை, விளையாட்டு முதலிய தலைப்புக்களிலே வகைப் படுத்திப் பதிப்பித்துள்ளார். இன்றைய நாட்டார் பாடல் ஆய்வுகளில் இவ் வகைப்பாடு முற்று முழுதாக அனுசரிக்கப்படாவிடினும், அக்காலகட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட வகைப்பாடாக அமைந்தது என்பதும் குறிப்பிடத்தக்கது. இந்தவகையிலே நாட்டார் பாடல் தொகுப்பு முயற்சியின் முன்னோடியாக ஐயர் திகழ்கின்றார் எனக் கொள்ளலாம்.

**பன்முகப் பணிகள்**

சதாசிவ ஐயரின் பன்முகப்பட்ட தமிழ்ப் பணிகளில் சிறப்பானவையாகக் குறிப்பிடக் கூடியவை அவர் முன்னின்று நிறுவிய ஆரியதிராவிட பாஷாவிருத்தச்சங்கமும், பிராசீன பாடசாலையும் எனலாம்.

(.. ஆம் பக்கம் பார்க்க)

# வலம்புரியின் 4ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்புமலர்

நான்காம் ஆண்டை நிறைவு செய்யும் வலம்புரியே!
நின் சேவை பாரெல்லாம் பரவ பலகோடி வாழ்த்துக்கள்!

**நியூ நோபல் அக்கடமி**

சங்கத்தானை, சாவகச்சேரி.

* கல்வி உலகின் ஓர் விடிவெள்ளி*

**A/L 2006** கலை வர்த்தகம்

Eco- ஜெயக்குமார்
Tam- H.c- Hin- } கமலநாதன்
Geo - { நித்தி, ஜெபதாஸ்
His- சுஜீகரன்
Po.Sc- பொன். சந்துரு
Drama- இளங்கோ
Log- சத்தி

கணக்கீடு- { முகுந்தன், செந்தூரன்
வணிகக் கல்வி- உமாகாந்த்
பொருளியல்- ஜெயகுமார்
ஆங்கிலம்- நிஷாந்தன்

ஆரம்பம் 25.12.2003
வியாழன் 9.00 A.M

[C/6817]

**நியூட்டன் கல்வி நிலையம்**

ஆரியகுளம் சந்தி, யாழ்.

**அரசியல் A/L2006**
ஆரம்பம்-21. 12. 2003 ஞாயிறு
நேரம் மு. ப. 8. 00

G.A.Q, B.A } யாழ், பேராதனை
விரிவுரைகள் நடைபெறுகின்றது
ஆசிரியர்:பொன். சந்துரு

[C/6815]

நான்காவது ஆண்டை நிறைவு செய்யும்
வலம்புரிக்கு எமது வாழ்த்துக்கள்

**ஸ்கை எலக்ரோனிக் சிஸ்ரம்**

1c, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[C/6886]

ஐந்தாவது ஆண்டில் காலடி பதிக்கும்
வலம்புரியினை
மக்கள் வங்கி சங்கானை கிளையினர்
மனப்பூர்வமாக வாழ்த்துகின்றோம்

மக்கள் மனமறிந்த வங்கி

**மக்கள் வங்கி**

முகாமையாளர்,
வங்கி ஊழியர்கள்
மக்கள் வங்கி,
சங்கானைக்கிளை.

[C/6882]

வலம்புரிக்கு
எமது நல்வாழ்த்துக்கள்

**PC HOUSE (PVT) LTD**

1K,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

[C/6885]

எந்நிலையிலும் தன்னிலை தவறாது நடுவு நிலை காத்து, நல்ல பல செய்திகளை நாட்டிற்கு நல்கிவரும் தமிழ் நாளிதழாம் ''வலம்புரி'' தனது நாலாண்டு நிறைவை எய்தும் இவ்வினிய நாளிலே அதன் சேவை மேன்மேலும் வளர்ச்சியுற எமது இனிய வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்வதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

பனையெம் காக்கும் பனையில் உழைக்கும்

**கற்பகம் / திக்கம் வடிசாலை**

**பனை அபிவிருத்திச் சபை**

தலைமை அலுவலகம்
53, கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
தொலைபேசி - 222 - 2034

[C 6820]

வலம்புரியின்
சேவை மென்மேலும் வளர
எமது வாழ்த்துக்கள்.

**நல்லூர் பல நோ .கூ. சங்கம்**

[C/6883]

ஐந்தாவது ஆண்டில் காலடி பதிக்கும் வலம்புரிக்கு
எமது வாழ்த்துக்கள்!

**கதிரவன் ஜெம்ஸ் சென்ரர்**

(இரத்தினக்கல் வியாபாரம்)

**உதய கதிரவன் நகை மாடம்**

172, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

[C/6887]

வலம்புரிப் பத்திரிகைக்கு எமது நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்

**பாக்கியம் கட்டடப் பொருள் விற்பனை நிலையம்**

163,165;பிரதான வீதி, சங்கானை

**தரன் ரேடேஸ்**

130,ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
T.P-021.222 2664

[C/6880]

# ஓ சமூகமே!

# சற்று நில்!

# சிந்தித்துப் பார்!

**வலம்புரியின் 4வது ஆண்டு நிறைவு சிறப்புக் கட்டுரை**

வாழ்நாள் பேராசிரியர்
செ.சிவஞானசுந்தரம் (நந்தி)
சமூக மருத்துவத்துறை
யாழ். பல்கலைக்கழகம்

சாதரணமாக ஒரு தனி மனிதனின் சுகநிலை ஒரு குடும்பத்தைப் பாதிக்கின்றது. குடும்பங்களின் சுகநிலை ஒரு சமூகத்தைப் பாதிக்கின்றது... இப்படியாகக் கூறுவது உண்டு. எமது நாட்டைப் பொறுத்தவரை, குறிப்பாக தமிழர் வாழ்வை வைத்துக் கூறுவதானால் எமது சமூகத்தின் சர்கேடுதான் குடும்பங்களையும் தனிமனிதரின் சுகநிலையையும் பெரிதும் பாதிக்கின்றது என்று கூறவேண்டும். இக்கட்டுரையை யாழ். குடாநாட்டின சமூக நிலையைக் குறிப்பாகக் கொண்டே எழுதுகிறேன். எமது சமூகத்தின் சுகநிலை மிகவும்மோசமடைர்துள்ளது. ஆனால்அது படித்தோருககும் வெட்ட வெளிச்சமாகத் தெரிவதில்லை. ஏனெனில் அவாகளும் அந்த சமூகத்தவா், நீண்டகால சமூக நோயினால் பாதிக்கப்பட்டவா்கள், அதிகமானோர் ''அக்கினிப் பெருமூச்சு'' நாடகத்தில் வரும வெள்ளைப் பூச்சு முகத்தினா் போல்''நமக்கென்ன ஐயா, நம்ம பாட்டில் இருப்போம் '' என்ற சுயநல வேண்டாவெறுப்பான அல்லது வேடிக்கையான மனம் படைத்தவா்கள்.

சீா் கெட்ட சமூக சிந்தனையும் செயற்பாடும் ஒருவரின் சுக வாழ்வை பல வடிவங்களில் சீரழிக்கின்றன. அந்தக் கேட்டின் எல்லை மரணங்கள் ஆவதுண்டு. சில தேர்ந்தெடுக்கப்பட்ட உதாரணங்களை நோக்குவோம்.

**வீதிகளிலே...**

எமது வீதிகள் எமது விதியை மாற்றக் கூடிய நிலையில் உள்ளன. எமது பிரதான வீதிகளில் உள்ள பள்ளங்கள் (கிடங்குகள்) வாகனங்களைத் திடீரெனத் திசை திருப்பச் செய்து விபத்துக்களை ஏற்படுத்தி, வேண்டாத ஊனங்கள், முறிவுகள் என்று மட்டுமல்லாமல் அகால மரணங்களுக்கும் காரணமாகின்றன. ஏற்கனவே, வீதி ஒழுங்கைகக குழப்ப மனத்துடன் மீறும இளம் வட்டங்களுக்கும், யார் கெட்டாலும் சரி நாம் சம்பாதித்தால் போதும் என்று ரேஸ் ஓடும் மினிவான் சாரதிகளுக்கும், உண்மையாகவே வீதிகள் தன்னுடைய பாட்டன், பாட்டி வழிச் சொத்துக்கள் என்ற உரிமையை நிலை நாட்டும் மற்றோருக்கும் வீதிகளின் அலங்கோலம் அவர்களின் தவறுகளை மூடித் தாக்குப் பிடிக்கின்றன.

அத்துடன் வீதி விபத்துக்களுக்கு வித்திடுபவர்கள் வீதிகளை உடனுக்குடன் பராமரிக்காது பாராமுகம் காட்டும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள்(நம்மவர்கள்), வீதி மரணம் குறிதவறாத ஒரு குடும்பக கட்டுப்பாடு முறை என்று கணக் கிடும் பொலிஸ்காரர், அவ்வப்போது சாரதி லைசன்ஸ் வழங்க கொழும்பிலிருந்து இங்கு வரும் கடமை உதாசீன உல்லாசப் பிரமுகர்கள், பிள்ளைகளின் ஒழுக்கத் தைக் கைகழுவிய ஆசிரியர் கள், பெற்றோர்கள், தெருநடுவில் முதுகோடு முதுகுவைத்து கிடக்கும் ஆடுகள், குறுக்கே தெரு நாயாகப் பாயும் வீட்டு நாய்களின் உரிமையாளர்கள் என்று குற்றப் பட்டியல் புரளும். இனி, வீதிகளில் கிடங்கும் குட்டையும் இல்லாத ஓரங்களில் குப்பைகள் இருக்கும். அவற்றினால் வரக் கூடிய சுகாதாரக்கேடு சூழல் சுகாதாரம் படிக்கும் மூன்றாம் ஆண்டுப் பிள்ளைக்கும் தெரியும். தெரிய வேண்டியவர்களுக்குத் தெரியாமல் இருப்பது தான் எமது கலாசாரததினதும் நிர்வாகத்தினதும் சாபக்கேடு.

**சூழலிலே...**

சூழல் சுகாதாரம், சூழல் பாதுகாப்பு என்பன எமது சுயநல சுதந்திரத்தைக் கட்டுப்படுத்தும் வார்த்தைகளாகக் கருதப்படுகின்றன. அதனால் தான் மலேரியா, டெங்கு, ஜப்பானிய மூளைக் காய்ச்சல் காவும்நுளம்புகளும்பல நோய்க் கிருமிகளைச் சுமக்கும் ஈக்களும் சுதந்திரமாகப் பெருகித் திரிகின்றன. ''நமக்கென் னையா நம்ம பாட்டில் இருப்பம்'' (சுகாதாரப் பகுதியினர்)

**காற்றினிலே...**

காற்றினிலே வரும் கீதம் அல்ல சேதம! தொழிற்சாலைகளும், பெற்றோல் வாகனங்களும் நிறைந்த நாடுகளில் காற்று அசுத்தமாவதும் அதனால் வரும் நோய்களும் நாம் அறிந்ததே. அந்த வியாதி எமக்குப் படிப்படியாக இந்த நூற்றாண்டில் வரும். ஆனால் ஏற்கனவே நமது நிம்மதியை, நித்திரையை, நோயாளி சுகமடையும் நிலையை, பிள்ளைகளின் படிப்பை, காதுச் சவ்வுகளின் மென்மையை, இதயத்தின் இதத்தை, சண்டியர் போல் தன்னிச்சையாக வந்து எமது காற்றில் கலாட்டா செய்யும் ஒலிபெருக்கிகளின் பேரோசை தரும் சமூகசேதத்தை என்ன என்று சொல்வது? ஆமாம், ஏதாவது ஒரு தனிப்பட்ட வைபவத்தை வைத்து, பெரும்பாலும் ஒரு வீட்டில் நடக்கும சிறு சடங்கை அல்லது ஒரு கோவில் குறு விழாவை வைத்து, இரவும் பகலும் ஒலிபெருக்கியில் டப்பாக்களை முழாச வைத்து காற்றை அசுத்தமாக்குவது எந்த நாகரிகத்தைச் சாரும்? சௌந்தரராஜனானாலும் மற்றவர்களின் நிம்மதியைக் கெடுப்பதற்கு உரிமை இல்லை. சில மாதங்களுக்கு முன் ஹெலியின் ஓசையும் எறிகணைகளின் முழக்கமும் தந்த வேதனைக்கும், இத்தகைய ஆக்கிரமிப்புப் பெருக்கி ஒலிகளுக்கும் அதிக வேற்றுமை இல்லை. ஒலியை நஞ்சாக்குவது மன்னிக்க முடியாத சமூகக் குற்றமாகும்.

**கடைகளிலே...**

உணவுச் சாலைகளிலே அசுத்தமான பாத்திரம்,அழுக்கு நீர், போஷாக்குக் குறைவான உணவு, இலையான்கள் உண்டு பீச்சிய பண்டங்கள், இருமல், குடல் தோல் நோயாளிகள் பரிமாறிய சாப்பாடு இவற்றின் தாக்கம் சமூகத்தின் நோய் நிலையைப் பெருமளவு நிர்ணயிக்கின்றன.

இதை நிவிர்த்தி செய்வதற்கு துணிச்சலுள்ள சமூக உணர்வு வேண்டும். இதை, எமது சமூகத்தில் யாரிடம எதிர்பார்ப்பது? ''நமக்கென்னையா நம்மபாட்டில் இருப்பம்''

மருந்துக் கடைகள் நம்மவரின் சுயநல, பொறுப்பற்ற, பேராசையுடைய, எமகிங்கர மறைமுக உணர்வுகளின் களஞ்சியமாகச் செயற்படுவதும் ஒரு சமூக சஞ்சல நிலையாகும் . சந்தையில் கீரையும், கத்தரிக்காயும விற்கக்கூடிய அளவு சாமர்த்தியம் பெற்ற பிள்ளைகளை விற்பனையாளராக அமர்த்துவது, தானதோன்றி மருத்துவ கலாநிதிகளாக நடித்து கடைக்கு வநத நோயாளியின் புலம்பலுக்கு மட்டுமல்ல அவரின் பணப்பையின் பவிசுக்கு ஏற்ப மருந்தை (கூட்டுக் குளிகைகள் ஆகியன) சமயோசித்து விற்பது, அதிலும் கொடுமையிலும் கொடுமை. காலாவதியாகி விட்ட மருந்தை, உண்மை தெரிந்தும், அப்பாவிகளிடம் கடத்தி விடுவது. இத்தகைய அசம்பாவிதங்கள் எமது பெரும்பாலான மருந்துக் கடைகளில் உண்டு. இதற்குக் காரணம இவற்றைக்கண்காணிக்க வேண்டிய நிர்வாகி களின் அசமந்தப் போக்கு ஆகும். கண்டிப்பாக எமது சமூகத்திலுள்ள சில நோய் நிலைகளுக்கு இப் படிக் கட்டாக்காலியாக நடமாடும் மருந்துகளும் காரணமாகும்.

**கோவில்களிலே(சைவ)...**

ஒருவரின் சுகத்தின் குணங்களில் இன்றியமையாதது ஆன்மீக அமைதி. எமது வீடுகளிலும் வேலைத் தலங்களிலும் அந்த அமைதியைபோதிய அளவு அடைய முடியாமல், எமது சைவக் கோவில்களுக்குச் சென்றால் குளிக்கப் போய் சேற்றைப் பூசிய நிலையும், சிலவேளைகளில் பிச்சை வேண்டாம் வெறி நாயைப் பிடி என்று ஏங்கக் கூடிய ஆபத்தும் உண்டு. அமைதியான தியான நிலையில் இருக்கும் வேளையில் நேரம், காலத்தை மதியாத ஒருவர் தனக்குத் தெரிந்த தேவாரங்களை ஆர்ப்பரிக்கிறது, பூஜை நடைபெறும் போது இருகக வேண்டிய இடத்தில் நிற்பதும், நிற்கவேண்டிய இடத்தில் இருப்பதும், கற்பூர ஆரத்தி காட்டும் வேளையில் முன்னே நிற்பவர் தலைமேல் குவித்த கையை எடுக்க மனமில்லாமல் பின்னால் நிறபவருக்குக் கிடைத்த சொற்ப காட்சியும கிடையாமல் போவதும், நிற்கவே போதிய வசதியில்லாமல் அந்தரத்தில் நின்று கும்பிடும்போது சாஷ்டாங்கமாக விழுந்து வணங்க முயலுவதும் ''வழிக்கு அரோஹரா'' என்று ஒருவர் கூப்பாடு போட மற்றவர் அங்கப்பிரதட்சிணம்செய்து கோவிலுக்குள் நுழைவதும், சுவாமி தீர்த்தமாட வரும் போது முதியோர் பெண்கள் மீது ராகிங் வன்முறை செய்வதும், ஆத்மீக வழிபாட்டுக்கு உகந்தனவல்ல. சந்தேகமின்றி இவை எமது சமய வழிபாட்டு முறைகள் தான். ஆனால், முறை அறியாது மனச் சாட்சியும் சமூக உணர்வும் மீறும் போது அவை ஆத்மீக சுகநிலையைச் சீரழிக்கின்றன. இப்படியான சீர்கேடுகளை வேறு வழிபாட்டுத தலங்களில காண்பது அரிது; காணமுடியாது.

தப்பித் தவறி ஒழுக்கமும் அமைதியும் அரிய போதனையும் வேண்டி, அத்தகைய வழிபாட்டு ஆலயங்களுக்கு யாரும சென்றால் ''ஐயகோ ! திசை திரும் புகிறார்கள்'' என்ற புராண முறையிட்டால் என்ன பயன்? ஆத்மீக சுக பேணலுக்கு ஆதரவு தருவது தான் மதங்களின் தா்மகக் கடமையாக வேண்டும். முன்னைய காலங்களிலும் பார்க்க நவீன காலத்திற்குத் தான் அந்த மத தர்மம் அவசிய தேவையாகும்.

**முடிவிலே.....**

சமூக சுக நிலையை சுருக்கமாக, ஆனால் சில முக்கிய பரிணாமங்களில் இக்கட்டுரை காட்ட முயன்றது. கட்டுரையாளரின் மேலோட்டமான ஆதங்கத்தைப் பொருட்படுத்தாமல், உள்ளார்ந்த கரிசனைக் கருத்துக்களை கவனத்தில் கொள்ளுமாறு வேண்டுகிறேன். □



# பாடசாலைக் களங்களில்...

எதிர்காலக்கல்வி தொடர்பான புத்தாக்கங்களின் போது பாடசாலைகள் மட்டத்தில் செயற்பாட்டாய்வுகளைத் திட்டமிட்டு நடைமுறைப்படுத்தும் தேர்ச்சி படைத்தவர்களாக எல்லா ஆசிரியர்களையும் உருவாக்க வேண்டும். கற்பித்தல் முறைகள் வகுப்பறைப் பரிமாணங்கள், குழுக்கள் அமைத்தல், கற்றல் இடர்பாடு, மொழித்திறன் இடை விலகல் விருத்திகள், வகுப்பறை முகாமைத்துவம், நேர முகாமைத்துவம், கற்றல் தொடர்பான மதிப்பீடு, கணிப பீடு, மனப்பாங்குகளும், விழுமியங்களும், பாடசாலை நிர்வாகம், முகாமைத்துவம், மீள வலியுறுத்தல் செயல் மூலம் கற்றல என்ற எண்ணக்கரு நிலமைகள் தொடர்பாக செயல நிலை ஆய்வுகளை மேற்கொள்ளலாம். இவை பின்வரும் உதாரணங்களை பரிணமிக்கும்.

1. வரவுகுன்றிய மாணவர்களைப் பாடசாலைக்குத் தொடர்ச்சியாக வரவழைத்தல்

★ கணிதபாட அடைவினை இருபது வீதத்தால் அதிகரித்துக் கொள்ளல்.

★ வகுப்பறையில் ஆங்கிலத்தில் மாணவர்களை உரையாடப் பழக்குதல்.

★ பெற்றோரை அறிவூட்டுதல் வாயிலாக மாணவரைக் கற்பதற்குத் தூண்டுதல்.

★ ஒரு நகரும் நூலகத்தினை நடைமுறைப்படுத்தல் வாயிலாக சுயகற்றலுக்கான வாயப்புக்களை விரிவுபடுத்தல்.

★ மொழி சார்ந்த நலிவுகள் உடைய பிள்ளைகளை இனம் கண்டு அது தொடர்பான குறுகிய காலத தீர்வுகளை நடைமுறைப் படுத்தல்.

★ விசேட தேவையுள்ள பிளளைகள் தாமதமாக விளங்கிக் கொள்ளும் கற்றல் நிலமைகளை இனம் கண்டு அவர்களின் கற்றல் அடைவுமட்டத்தை உயர்த்துதல்.

★ ஆரம்ப இடைநிலைக் கல்வியின் பல்வேறு பாடங்களின் அடைவுமட்டத்தை உயர்த்துதல்.

★ இணைப்பாடவிதான, மாணவர் உதவிச்சேவைகள், கல்வி வழிகாட்டலும் ஆலோசனையும், பாடசாலை பௌதீக வளப்பெருககம், முரண்பாடுநிலை, மாற்றம், மாணவர் சமூகத் தனியார் நடத்தைகள், கற்பித்தல் கற்றல் அணுகுமுறைகள், பிரச்சினைகள் தீர்த்தல்.

பாடசாலைப் பிள்ளைகள் தம் வாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள அவசியமான ஏராளமான தேர்ச்சிகளை (Competenies) செயற்பாட்டாய்வுகள் மூலம் வழங்கலாம் பாடசாலைகளின் மேம்பாட்டோடு தொடர்புடைய பெரும்பாலான பிரச்சினைகள்அ் பாடசாலைகளுக்கே உரித்தானவையாக இருக்கும் அப் பிரச்சினைகளுக்குத் தீர்வுகள் உண்டு என்ற அர்ப்பணிபுடன் (Dedication) புதிய பிரவேசங்களுடன் தீர்வைத் தேடிச் செல்லல் ஆசிரியரது உயர்பணியாகவுள்ளது. இதற்கு அதிபர், பெற்றோர்கள், கல்விப பணிப்பாளர்கள் தடையாக இருககக்கூடாது. செயல்நிலை ஆய்வில் இரு பணிகள் முக்கிய மானவை. ஒன்று ஆய்வு;மற்றையது நடைமுறைப் படுத்தல என்ற வகையில்ஆசிரியர்; கல்வியியலாளர் என்ற நிலையில் இருந்து கல்வி அபிவிருத்தி நடை முறையாளர் என்ற பாத்திரத்தை ஏற்று செயல் நிலை ஆய்வுகளை மேற்கொண்டு எமது எதிர்காலச சந்ததியினரின் வாழ்வை மலர்விக்கலாம். ★

# பாடசாலைக் களங்களில் பிரயோகப்படுத்தும் கல்வியியல் ஆய்வுகளும் பயன்பாடும்

கல்வி அறிவின் எல்லைகளை ஆய்வுகள் முன்நோக்கி நகர்த்திய வண்ணம் உள்ளன. இவ்வகையில் தற்போது இலங்கைப் பாடசாலைகள் சார்ந்த ஆய்வுகளும், செயல்நிலை ஆய்வுகளும் மிகுந்த முக்கியத்துவத்துடன் நோக்கப்படுகின்றன. ஆனாலும் பாடசாலைகளில் பிரயோகப்படுத்தும் கல்வியியல் ஆய்வுகள் அவற்றின் பயன்பாடு தொடர்பாகப் பல பிரச்சினைகளும் உள்ளன.

கல்வியியல் ஆய்வுகளுக்கான போதிய பயிற்சிகள் வழங்கும் வசதிகள் இன்மை, பயிற்சிகளையும் புதிய ஆய்வுத் தேவைகளையும் முன்னெடுக்காமை, கல்வியியல் ஆய்வுக் கலாசாரம் (Educational Research Culture) உறுதியாக ஆசிரியர்களிடையே கட்டியெழுப்பப்படாமை, ஆய்வு மேற்பார்வைக்குரிய வெளியீடுகள இன்மை, தரவுகள் பெறுதலில் இடர்பாடுகள் ஆகியன காரணமாகக் கல்வியியல் ஆய்வுகள் பல சவால்களை எதிர்நோக்குகின்றன. இவற்றை வெற்றி கொள்ளப் புதிய செயற்பாடுகளும் வெளியீடுகளும் விழிப்புணர்வும் தேடல்களும் கல்விப் புலத்திலிருக்கும் அனைவருக்கும் தேவையாகவுள்ளது.

மேலும், பாடசாலைகள் தொடர்பாக இன்று பலப் பல கல்வியியல் ஆய்வுகள் மேற்கொள்ளப்படுகின்ற போதிலும் அவை வெளியிடப்படுவதில்லை, பயன்படுத்த செயற்படுத்தப்படுவதில்லை. ஆய்வுக்குட்பட்ட பாடசாலைக்கோ, ஆசிரியர் - அதிபருக்குகோ அவை கிடைப்பதில்லை. இந்நிலைமாற்றப்படவேண்டும். பாடசாலைகள் தொடர்பான கல்வியியல் ஆய்வுகள்-அவற்றின் பெறுபேறுகள் வெளியிடப்படுவதை எளிதுபடுத்துவதற்கான ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை இன்றைய கல்வியியலாளர்கள் மேற்கொள்ள வேண்டும். ஆய்வுகள் செயல் வடிவம் பெறவேண்டும். கல்வியியல ஆய்வுகளின் எளிமையான பொழிப்பைத் தயார்ப்படுத்தி வெளியிடலானது, ஆய்வுப் பெறுபேறுகளை முறையாக வெளியிடுவதற்கு ஓர் முதன்மை வழியாகவுள்ளது. ஆய்வுகளை வெளியிட கல்வி அமைச்சு ஏனைய நாடுகளில் நிதி வசதிகளைச் செய்துவருகிறது. அந்நிலை எமக்கும் ஏற்படவேண்டும்.

21 ஆம் நூற்றாண்டுக்கான கல்வி பற்றிய சர்வதேச ஆணைக்குழுவால் யுனெஸ்கோவிடம் சமர்ப்பிக்கப்பட்ட கற்றல் உங்களுடைய வளமாகும்-Learning The Treasure within என்ற முக்கிய கல்வி அறிக்கையில், பாடசாலைகளினது வினைத்திறன்களை அதிகரிக்க வகுப்பறைகளில் மாணவர்களின் கற்றலில் மேமபாடுகளைக் காண, கல்விச செயற்பாடுகளுக்குப் புதுத்திருப்பத்தைத் தேட, பாடசாலைகள் தொடர்பான கல்வி ஆய்வுகளும் செயன் நிலை ஆய்வுகளும் (ActionResearch) விஸ்தரிக்கப்பட வேண்டும் என விதந்துரைக்கின்றது. பாடசாலைகள் எதிர்நோக்கும் பல்வேறு சவால்களைக் கல்வியியல் ஆய்வுக் கலாசார விழிப்பின் மூலம் வெற்றி கொள்ளவும் முடியும்.

ஆய்வுகள் வழியாகப் புதிய கண்டுபிடிப்புக்கள் பிரச்சினை



களுக்கான தீர்வுகள் புத்தாக்கங்கள் என்பன முன்வைக்கப்படுகின்றன. ஆய்வு வினாக்களை அல்லது கருதுகோள்களை உருவாக்குதல், தரவுகளைச் சேகரித்தல், ஒழுங்கமைத்தல், புடமிடுதல், மதிப்பீடு செய்தல், தீர்வுகளை நோக்கி நகர்த்தல் எனப் பல பரிமாணங்களில் ஆய்வானது விரிந்து செல்கின்றது.

### ஆய்வுகளின் தேவை

பாடசாலைக் கருமங்களு

## வலம்புரியின் 4வது ஆண்டு நிறைவு சிறப்புக் கட்டுரை

டன எண்ணிறைந்த ஆய்வுகளை ஒன்றிணைக்க வேண்டிள்ளது. இன்றைய பாடசாலைகளினதும், ஆசிரியர்களினதும் செயற்பங்கில் ஏற்பட்டுவரும் மாற்றங்கள் மூலம் ஆய்வுககான ஊக்கலின் தேவை அதிகமாகியுள்ளது. இதற்கமைய, ஆசிரியர்கள் தமது பயிற்சிக்காலங்களிலும், தமது அன்றாட தொழில் சார் கருமங்களின் போதும் கல்வியியல் ஆய்வுகளில் ஈடுபடவேண்டும். இது ஆசிரியர்களுக்குத் தமது அன்றாட கருமங்களைச் சிறப்பாக மேற்கொளள; அவதானித்தல், உற்று நோககல், பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடல், பிரச்சினைகளுக்குத் தீர்வுகளைக் காண அடித்தளத்தை அமைத்துக் கொடுக்கும். எனவே, ஆய்வுக்கான தேவை இன்று பல பரிமாணங்களில் அதிகரித்துள்ளது.

தற்போதைய பட்டப்பின் கல்வி டிப்ளோமா, கல்விமாணி, கற்பித்தலில் தேசிய டிப்ளோமா, கல்வி முதுமாணிபட்டங்களைப் பூர்த்தி செய்ய மேற்கொள்ளப்படும். பாடசாலைக்கல்வி தொடர்பான கல்வியியல் ஆய்வுகளை விட, மிகையான வகை கூறக்கூடிய ஆய்வுச் செயற்பாடுகளை ஆசிரியர்களுக்கு வழங்க வேணடியுள்ளது. மேலும், ஆசிரியர்களின் வாண்மையை ஆய்வுகளினூடாக விருத்தி செய்வதோடு, இதில் கல்விப்பணிப்பாளர்கள், அதிபர்கள் ஆகியோர் கூடிய கவனம் செலுத்தினால் கூட்டு மொத்த பாடசாலைத் தொகுதியில் பல்வேறு பிரச்சினைகளைத் தீர்த்து, புதுமைகளைப் புகுத்தி, பாடசாலைகளின் வினைத்திறன்களை அதிகரிக்கலாம்.

பாடசாலைகள் தற்போது ஒரு பெரும் தொழிற்துறைகள் போன்றே இயங்குகின்றன. தொழிற்துறைகளில் எவ்வாறு ஆராய்சசி மற்றும் அபிவிருத்திக்கான (Research and Development) ஒரு பிரிவு இன்றியமையாததோ அதேபோல் பாடசாலைகளிலும் தேவை. ஒவ்வொரு ஆசிரியரும் கல்வி ஆய்வுப்பணிகளில் ஈடுபட வேண்டும்.

### செயன் நிலை ஆய்வு

குறிப்பிட்ட ஒரு பிரச்சினையைத தீர்ப்பதற்கான ஆய்வைச் செய்து தீர்வுகளைச் சமர்ப்பிப்பதுடன் பொதுவான ஆய்வாளர் ஒருவரின் கடமை முடிகிறது.

ஆனால், செயன் நிலை ஆய்வாளர் குறித்த பிரச்சினைத் தீர்வுகளை முன்வைத்து அவற்றை நடைமுறைப்படுத்தியும் காட்ட வேண்டும். செயனநிலை ஆய்வானது எப்போதும் செயல் பயன



சார்ந்தது. மற்றும் இதன மூலம் யாவருக்கும் எல்லா நிலைகளிலும் பொதுக் கோட்பாடுகளை உருவாக்குவது அன்று. உடனடிப் பயன் மேம் பாடு ஒன்றே இதன் பிரதான நோக்கு. ஆய்வு முறைகளுமநெகிழ்ச்சியாகக் கைக்கொள்ளப்படுகின்றன. செயன்நிலை ஆய்வுகள் பல்வேறு துறைகளில் மேற்கொள்ளப்பட்டாலும் எமது பிரதேசக் கல்வி அபிவிருத்தி நோக்கிலேயே இங்கு கவனம் செலுத்தப்படுகின்றது. முக்கியமாகப் பாடசாலை வகுப்பறைக் கற்றல்- கற்பித்தல நிலைமைகளில் மாற்றங்களை, விருத்திகளை ஏற்படுத்தி கற்றல் பெறுபேறுகளை முன்னேற்றுவதற்கும், பாடசலைக்கும் சமூகத்துக்குமிடையில் ஒத்துழைப்பையும் பரஸ்பர உறவையும் வளர்ப்பதற்கும் செயன்நிலை ஆய்வுகளைப் பயன்படுத்தல் சற்றது என உலகளாவிய கல்வியியலாளர்கள் சிபார்சு செய்கின்றனர்.



### செயல் நிலை ஆய்வின் செயற்கிரமங்கள்

1. வகுப்பறையின் ஒரு பிரச்சினையை - நிலைமையை இனங் காணல், அதுபற்றி ஏனையோருடன் கலந்துரையாடல், அந்நிலைமையை விளங்கிக் கொள்ளத்தேவைப்படும் தகவல்களை அறிதல்.
2. எந்த மூலங்களில் இருந்து தரவுகள் பெறுதல் என்பதைத் திட்டமிடல், நுட்பங்களைக் கையாண்டு தரவு சேகரித்தல், தரவுகளை நிரற்படுத்தல், பகுத்தாராய்தல்.
3. ஆய்வு வினாக்களைத் தீமானித்தல், ஆய்வு வினாக்களுக்கான விடைகளை அனுமானித்தல்
4. ஆய்விலிருந்து செயற்பாடுகளைத் திட்டமிடல், செயற்பாடுகளை நடைமுறைப்படுத்தல், கண்காணித்தல்.
5. அவதானித்த பெறுபேறுகளை நிரற்படுத்தி மதிப்பிடல்-பகுப்பாய்வு செய்தல் (ஏனையவர்களின் ஆலோசனைகளுடன்) பெறுபேறுகள் திருப்தியற்றிருப்பின் மேலதிக நடவடிக்கைகளைத் தீமானித்தல்.
6. மேலதிக நடவடிக்கைகளைத் திட்டமிடல் - நடைமுறைப்படுததல் - கண்காணித்தல், பெறுபேறுகளை மதிப்பிட்டு தேவைகளின்படி மேலும நடவடிக்கைகளைத் தொடர்தல்.

செயல் நிலை ஆய்வில் முக்கியமாக செயல்களைத்திட்டமிட முன் பிரச்சினை தொடர்பான தரவுகளைச் சேகரிக்க வேண்டும். தரவுகளை அவதானத்தல், நேர்காணல் , சரிபீட்டுப்பட்டியல்கள், கணிப்பீடுகள், விடயத் தனியாள் ஆய்வுகள், மாணவர் கணிப்பீட்டுப் பதிவுப் புத்தகம், ஒப்படைகள், மாணவர் செயல் மாதிரிகள, தொழில் அனுபவ ஏடு, செயர்பாட்டறை நடத்தைகள், ஆவணங்கள், புகைப்படங்கள் மூலம் பெற்றுக் கொள்ளலாம்.

ஒரு செயல் நிலை ஆய்வாளர் தரவுகளைச் சேகரித்து ஆய்வை நடைமுறைப்படுத்துகையில் அவதானித்த பெறுபேறுகளை சரியாக மதிப்பிட வேண்டும். இதை ஒரு குழுவாகவும மேற்கொள்ளலாம். குறித்த ஆசிரியர் தன செயல் நிலை ஆய்வை ஏனைய அதிபர், ஆசிரியர், மேற்பார்வையாளர்கள் மூலம் அவதானித்தல், வழிகாட்டல், உதவியைப பெறுதல் மூலம் அவர்களையும இதில் ஈடுபடுத்திப் பயன்பாட்டை மேலும் வினைத் திறனாக்கிக்கொள்ளலாம். செயல் நிலை ஆய்வு தனி ஒருவரால் ஆரம்பிக்கப்படினும் ஈற்றில் குழு ஈடுபாடு எதிர்பார்க்கப்படுகின்றது. ஏனெனில் ஆய்வை நடைமுறைப்படுததலின் பயன்படுதன்மையை உறுதிப்படுத்தலாகும். எனவே, செயல் நிலை ஆய்வுகள் வெறும் ஆய்வு ஏடுகளாக இல்லாமல் பாடசாலையில் குறித்த ஆய்வாதலால் உடனடியாக நடைமுறைப்படுத்தல் மிகச சிறந்த பயனுள்ள நடவடிக்கையாக இருப்பதுடன், கல்வி விருத்திக்கான சிறந்த வழியாகவுமுள்ளது.

பாடசாலையின் கற்றல்-கற்பித்தல் சார்ந்த பிரச்சினைகள், நிலைமைகளே

கலாநிதி
திருநாவுக்கரசு கமலநாதன்
பீடாதிபதி யாழ்ப்பாணம் தேசிய
கல்வியியற் கல்லூரி

செயற்பாட்டாய்வின் பொருளாகின்றன. அதன் நிமித்தம் கல்வி மார்க்கத்தைச் செப்பனிடல், மாணவர்களின் கற்றல் பிரச்சினைகளுக்கான தீர்வுகளை ஆராய்ந்து வழங்கப்படும் உதவிகள், வழிகாட்டல்கள், அறிவுறுத்தல்கள் என்பன ஓர் ஆசிரியரின் வாழ்வினைப் பிரகாசிக்கச் செய்யும். இதன் நிமித்தம் விஞ்ஞான ரீதியில் உதவும் தொழில் நுட்பமாக செயற்பாட்டாய்வு உள்ளது. இது ஒரு சிறப்புமிக்க ஆசிரியரின் அன்றாட நடவடிக்கையின் அம்சமாகவே பிரதிபலிக்கவேண்டும்.

### செயல் நிலை ஆய்வு மேற்கொள்ளக் கூடிய விடயப் பரப்புக்கள்

வினைத்திறன் பொருந்திய பாடசாலைகளைக் கட்டியெழுப்புவதற்காக இச் செயற்பாட்டாய்வுப் பின்னணியானது நவீன கல்விச் செயன்முறை (Education process) பாடசாலை நிர்வாகச் செயன்முறை(Administration process) நோக்கில் புதிய பிரவேசங்களை இனங்காண உதவும்

(07ஆம் பக்கம் பார்க்க)

வலம்புரியின்

# 4ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்புமலர்

வையமெல்லாம் வலம்புரி வலம் வர
எமது இனிய நல்வாழ்த்துக்கள்.
சகல விதமான அன்பளிப்புப்
பொருட்களையும் நீங்கள் ஓரிடமாகப்
பெற்றுக்கொள்ள

**பேள் நியூ பசன் கவுஸ்**

பிரதான வீதி, சங்கானை. [C/6874]

நாலாவது ஆண்டைப் பூர்த்தி செய்யும்
வலம்புரியே! நீ பல்லாண்டு காலம் வாழ்க!
என அன்புடன் வாழ்த்துகின்றோம்.
என்றும் அண்ணா தயாரிப்புக்களையே கேட்டு வாங்குங்கள்
அண்ணா கோப்பி, அண்ணா பற்பொடி,
அண்ணா ஜீவாகாரம், அண்ணா மாவகை,
அண்ணா இனிப்புவகை, அண்ணா பத்திவகை
மொத்தமாகவும் சில்லறையாகவும் எங்கும் பெற்றுக்கொள்ளலாம்.

**அண்ணா தொழிலகம்**

அண்ணாதொழிலகம்,
இணுவில்,
யாழ்ப்பாணம்.
தொ.பேசி :- 222 3565
[C/6868]

தனது நான்காவது ஆண்டை பூர்த்தி செய்யும்
வலம்புரிக்கு எமது இதயம் நிறைந்த
நல்வாழ்த்துக்கள்!
"பசுவதை கொடிய பாவமாகும்
பசுவதை ஒழிப்போம்"
கோமாதா எங்கள் குலமாதா

**வேணி களஞ்சியம்**

165, கே.கே.எஸ். வீதி, [C/6870] யாழ்ப்பாணம்.

வையகமெல்லாம் வலம்புரி வலம்வர
வேண்டுமென வாழ்த்துகின்றோம்.
சகலவிதமான மணிக்கூடுகளையும் சிறந்த
முறையில் திருத்திக்கொடுப்பவர்கள்.

**சிவாஸ் மணிக்கூட்டுத் தொழிலகம்**

**SIVAS WATCH WORKS**

24, முனீஸ்வரன் வீதி, [C/6871] யாழ்ப்பாணம்.

நான்காவது அகவையில் காலடி பதிக்கும்
வலம்புரியின் சேவைகள் மேலும் வளர
எமது இதயம் கனிந்த நல்வாழ்த்துக்கள்

**நாவலர் கல்வி நிலையம்**

ஆனைப்பந்தி, யாழ்ப்பாணம்.
புதிய கல்வியாண்டு - 2004
தரம் 1 முதல் A/L வரை
தரம் 5 புலமைப் பரிசில் - 2004
யாழ் மாவட்டத்தில் இன்றைய நிபுணத்துவம்
வாய்ந்த ஆசிரியர்களின் ஒருங்கிணைந்த சேவை. [C/6869]

பத்திரிகை உலகில்
நான்கு ஆண்டுகளைப் பூர்த்தி செய்து
ஐந்தாம் ஆண்டில் கால் பதிக்கும்
எங்கள் வலம்புரிக்கு
எமது வாழ்த்துக்கள்

**றஜனி மோட்டர் றிவைன்டேர்ஸ்**

175, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
[C/6818]

## அன்பான வலம்புரிக்கு!

தடைகள் பல தாண்டி
தடங்கள் பதித்து
தனக்கென்று தனியிடம் பெற்ற
தன்னிகரில்லா வலம்புரிக்கு
தித்திக்கும் இனிய
பிறந்தநாள் வாழ்த்துக்கள்.

ச.சுஜாதா

## வாழி வலம்புரி

சீரெழிற் பொலிவினோடு
சிறந்த செய்திகள் தாங்கி
பேரெழில் மங்கை போல
பொலிவுடன் வருவாய், வாழி!
காரிருள் அகற்றும் காலைக்
கதிரவன் ஒளியும் நீயே
சூர் பகு பெருமை கொண்டாய்
வலம்புரி நீடு வாழி!

ஆயிரம் பிறைகள் கண்ட
அறிஞரே வியக்கும் வண்ணம்
கோபுரம்போல் உயர்ந்தாய்!
கொள்கையில் குன்றாய் நின்றாய்!
போயின அகந்தை சூழ்ச்சி
பெருகின அன்பு நேர்மை
நீயதன் வழியில் நின்றாய்
வலம்புரி வாழி! வாழி!

சத்தியம் தர்மம் என்றும்
தோற்பது இல்லை என்ற
தத்துவப் பொருட்கு நீயே
சான்றதாய் நிமிர்ந்து நின்றாய்!
நித்தமும் உன்னைக் காணும்
நினைவுடை நெஞ்சம்தன்னில்
கொத்தவிழ் மலரைப் போலக்
கோலமும் கூட்டி நின்றாய்!

வலம்புரி அன்னாய் என்றும்
வளமுடன் நடு வாழ்க!
நலம் தரும் செய்தி தாங்கி
நற்பணி புரிவாய் வாழி!
அறநெறி தழைக்க வேண்டும்
அன்பு நீர் பாய வேண்டும்
குறு நெறிஅகல வேண்டும் (எனும்)
கொள்கையை கொணடாய் வாழி!

வலம்புரிக் குடும்பத்தில்
ஒருவன்

யாழ்.நகரில் முதன் முதலாக அதிஷ்ர
லாபச் சீட்டு விற்பனை முகவர்
அறிமுகப்படுத்திய

**எஸ். எம். அதிஷ்ரம்**

உரிமையாளர்:- 55,முனீஸ்வரன் வீதி,
சோ.மகேந்திரலிங்கம் யாழ்ப்பாணம். [C/6873]

"வலம்புரியின் பணி சிறக்க
வாழ்த்துகின்றோம்"

**மருத்தாய் பல்பொருள் வாணிபம்**

பொன்னாச்சி கடைசந்தி,
உரிமையாளர்:- பிரதான வீதி,
செ. ஞானசீலன் ஊர்காவற்றுறை.[C/6872]

நான்காவது ஆண்டைப் பூர்த்தி செய்யும்
வலம்புரிக்கு எமது வாழ்த்துக்கள்
யாழ்நகரில் தரமான மதியம் - மாலை
அசைவ உணவுகளுக்கு நாடவேண்டிய
இடம்......

**அருமை உணவகம்**

இல:- 8, செம்மாதெரு, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
[C/6875]

5ஆம் ஆண்டில் காலடி வைக்கும்
மக்கள் மனம் நாடும் வலம்புரிக்கு
எமது வாழ்த்துக்கள்

**வசந்தா**

வெதுப்பகம் . களஞ்சியம் . மருந்தகம்

பிரதான வீதி [C/6816] ஊர்காவற்றுறை

# வலம்புரியின் 4ஆம்



## நல்லை ஆதீன முதல்வரின் அருளாசிச் செய்தி

யாழ் குடாநாட்டிலிருந்து வெளிவரும் வலம்புரிப் பத்திரிகை தனது சிறப்பான பணியில் நான்கு ஆண்டுகளைப் பூர்த்தி செய்வதையிட்டு பெருமகிழ்வடைகின்றோம்.

''வலம்புரி'' என்பது தெய்வீகத்துடன் இணைந்த சொற்பதம். உலகிற்குக் கீதையைத் தந்த கண்ணபரமாத்மா தர்மத்தின் முகிழ்ப்பிற்காக வலம்புரிச்சங்கை தனது கரத்தில் தாங்கியுள்ளார்.

அத்தகைய உயரிய நாமம் கொண்ட வலம்புரி, தர்மத்தின் வழி நின்று எமது மக்களுக்குச் செய்திகளைத் தருவது பாராட்டுதற்குரியது. நாட்டில் சமாதானமும், சுபீட்சமும் நிலவ வலம்புரி தனது பத்திரிகைப் பணியைத் தொடர வேண்டி வலம்புரிக் குடும்பத்திற்கு எமது அருளாசிகளைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

நல்லை ஆதினம், நல்லூர்.
ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசார்ய சுவாமிகள்,
ஆதீன முதல்வர்.




## யாழ்.அரச அதிபரின் வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாண மாவட்டத்தில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகைகளில் ஒன்றான வலம்புரி பத்திரிகையின் நாலாவது ஆண்டு நிறைவையொட்டி வெளியாகவுள்ள மலருக்கு எனது மனமார்ந்த பாராட்டுக்கள்.

யுத்தம் நிலவிய காலத்திலும் தற்போதைய சமாதான சூழ்நிலையிலும் மக்களுக்கான செய்திகளை வெளியிடுவதிலும், மக்களுடைய கருத்துக்களை மற்றவர்களுக்கும், நிர்வாகிகளுக்கும் தெரியப்படுத்துவதிலும் பத்திரிகைகள் முக்கிய பங்கு வகிக்கின்றன. யாழ்ப்பாணத்தில் வெளிவரும் பத்திரிகைகள் பாதிக்கப்பட்ட எமது மாவட்டத்தை மீளக் கட்டியெழுப்புவதற்காக இம்மண்ணின் மீதும், மக்களின் மீதும் உள்ள ஆர்வத்தினால் அவர்களுடைய அபிவிருத்தியில் தங்களையும் இணைத்து மக்களினுடைய வளர்ச்சிக்காக தமது கருத்துக்களை பல வடிவங்களில் வெளியிட்டு வருகின்றன.

இந்த வகையில் வலம்புரி பத்திரிகையும் தனது பொறுப்பை நன்கு உணர்ந்து அதன் அடிப்படையில் வழி நடத்தப்பட்டு வருகின்றது. இப்பத்திரிகை தனது நாலாவது ஆண்டை நிறைவு செய்யும் இவ்வேளையில் தொடர்ந்து பல்லாண்டு காலம் சமூகப் பணிபுரிய வேண்டுமென வாழ்த்துவதில் மகிழ்ச்சியடைகின்றேன்.

செ.பத்மநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ்.மாவட்டம்.



## நடுவுநிலை தவறாத நாளிதழ்

வலம்புரி நாளிதழின் 4ஆம் ஆண்டு நிறைவை முன்னிட்டு வெளிவரும் சிறப்பு இதழுக்கு வாழ்த்துச் செய்தி ஒன்றினை வழங்குவதில் பெரிதும் மகிழ்ச்சியடைகின்றேன்.

உண்மை, நேர்மை, நடுவுநிலைமை போன்ற முக்கிய பண்புகளைத் தன்னகத்தே கொண்டு உள்ளூரில் வெளியாகும் பத்திரிகை ஒன்று 5ஆம் ஆண்டில் கால் பதிப்பதிலிருந்து வாசகர் மத்தியில் அதற்கு இருக்கும் ஆதரவை அளவிட்டுக்கொள்ள முடியும்.

வலம்புரி ஆசிரியர்களில் ஒருவரான திரு. ந.விஜயசுந்தரம் அவர்கள் மாநகரசபையின் சைவசமய விவகாரக் குழுவினால் வெளியிடப்பட்டு வரும் நல்லைக்குமரன் மலரின் கௌரவ பதிப்பாசிரியராகத் திகழுவதால் மாநகரசபைக்கும், வலம்புரிக்குமிடையேயான உறவு, நட்பு ஆகியவை இரட்டிப்பாகவே உள்ளன.

பத்திரிகைகளுக்குள்ள சுதந்திரங்களை அர்த்தபுஷ்டியாக்கி தரும வழியில் தனக்குரிய பணியை மேற்கொண்டு வரும் வலம்புரி எதிர்காலத்திலும் மக்கள் மத்தியில் நன்கு பிரகாசித்து புகழுடுக்க வேண்டுமென நல்லைக் கந்தனின் தாழ் பணிந்து உளமார வாழ்த்துகின்றேன்.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.



## சர்வதேச இந்துமத குருபீடாதிபதியின் நல்லாசிச் செய்தி

தினமும் காலையில் ஒவ்வொருவருடைய கரங்களில் வந்து குவியும் வலம்புரி நான்காவது ஆண்டை பூர்த்தி செய்து இன்று ஐந்தாவது ஆண்டில் கால் எடுத்து வைக்கும் வேளையில், தனது சேவையை சிறப்பாக முன்னெடுக்க எல்லாம்வல்ல எம்பெருமானை முதலில் வணங்குவோமாக!

காக்கும் தெய்வமாகிய திருமாலின் கரங்களில் விளங்கும் ''சங்கு சக்கரம்'' எவ்வளவு மகத்துவம் பெற்று இருக்கிறதோ அதேபோன்று பத்திரிகை உலகில் ''வலம்புரி'' சங்குபோல் மக்களின் மனதில் நிலைபெற்றுள்ளதை அவதானிக்கமுடிகின்றது.

''வேண்டுதல் வேண்டாமை இலானடி சேர்ந்தார்க்கு
யாண்டும் இடும்பை இல''

என்ற திருவள்ளுவரின் வாக்குக்கு அமைவாக திருமாலின் கரங்களை அலங்கரித்து வரும் 'வலம்புரி' தனது பத்திரிகை மூலம் ஆற்றும் பணி அனைத்து மக்களுக்கும் மனநிறைவைக் கொடுக்கின்றது.

கடந்த நான்கு ஆண்டுகள் எத்தனையோ கஷ்டமான சூழ்நிலையிலும் தனது சேவைகளையும் உலகப் புதினங்களையும் ஆன்மீக கட்டுரைகளையும் மக்களுக்கு எடுத்தியம்பி வருவது எல்லோராலும் போற்றப்பட்ட விடயம்.

தனது ஐந்தாவது வயதில் தனது சேவைகளை மென்மேலும் விரிவுபடுத்தி உலகளாவிய ரீதியில் பத்திரிகா தர்மத்தை வெளிக்கொண்டு வரும் ஆசிரியர்கள், பணியாளர்கள் அனைவருக்கும் எல்லாம் வல்ல அம்பிகையை பிரார்த்தித்து வாழ்த்தி ஆசி கூறுகின்றேன்.

சிவஸ்ரீ.ச.மஹேஸ்வரக்குருக்கள்,
சர்வதேச இந்துமத குருபீடாதிபதி.



## சமாதானத்திற்கும், தமிழுக்கும் முன்னுரிமை வழங்கும் நாளிதழ்

வலம்புரிப் பத்திரிகை தனது பத்திரிகைப் பணியைத் திறம்பட ஆற்றி நான்கு ஆண்டுகள் பூர்த்தியடைவதையிட்டு பெரும் மகிழ்ச்சியடைகின்றேன். எங்கள் அன்றாட கடமைகளைச் செய்து முடித்ததும் வலம்புரிப் பத்திரிகையை மிகுந்த ஆவலுடன் படிப்பதை வழக்கமாக்கிக் கொள்கின்றோம். யாழ். குடாநாட்டில் வெளிவரும் பத்திரிகைகளில் சமயத்துக்கும் தமிழுக்கும் இலக்கியத்துக்கும் முன்னுரிமை வழங்கும் பத்திரிகைகளில் ஒன்றாக வலம்புரி மிளிர்வது வரவேற்கத் தக்கது. வலம்புரிப் பத்திரிகையின் ஒரு அங்கமாக சங்கு நாதம் பல்வேறு செய்திகளைத் தாங்கி வருகின்றது.

பத்திரிகைப் பணியில் ஈடுபட்டோர் அனைவரும் பாராட்டுக்குரியவர்களாவர். மேலும் பத்திரிகா தர்மத்தைப் போற்றி மக்களுக்குச் சேவையாற்றும் பணியைப் பேணி வளர்ச்சி பெற ''வலம்புரிக்கு'' எனது வாழ்த்துக்களையும் பாராட்டுக்களையும் தெரிவித்து அமைகின்றேன்.

கலாநிதி, செல்வி. தங்கம்மா அப்பாக்குட்டி,
சமாதான நீதிபதி,
தலைவர்,
ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம்,
தெல்லிப்பழை.


வலம்புரி
நடுவுநிலை தவறாத நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்
சங்குநாதம்
அரசியல் - அறிவியல் - ஆன்மீகம் அதுவே உங்கள் சங்குநாதம்




## ஐயப்பதா
## அருள

தமிழ்மக்க
கடந்த நான்கு ஆண்
ளுக்கு தன்னிகரில்லா
ஆண்டை நிறைவு செ
பதித்து ஆண்டுவிழா கொண்டாடும் வலம்புரி
வாக உத்தியோகத்தர்களுக்கும், வலம்புரி வ
களைத் தெரிவித்துக்கொண்டு வலம்புரி
மக்களுக்கு சேவை செய்து வெள்ளிவிழா,
காண எல்லாம்வல்ல சபரிமலை ஐயப்பசுவாமிய
கிடைக்க பிரார்த்தித்து ஆசீர்வதிக்கிறே
ஸ்ரீஐயப்பதாஸ




வலம்புரி – சங்குநாதம்



## பத்திரிகை
## கடைப்பி

வலம்புரி
நிறைவை மகிழ்
துள்ளது. வலம்பு
தத்துக்கள், பிரச்சினைகள் பலவற்றை எதிர்கொ
இறையருளாலும், நல முகாமைத்துவத்தாலு
கையாலும் வெற்றிகொண்டு இன்றைய சிறப்பு
இலங்கைத் தமிழ்மக்களின் குறிப்பாக யா
களைக் காக்க மிகச் சிறந்த முறையில் பணி
பிள்ளைகள், மாணவர்கள், இளைஞர்கள்,
யோருக்கு பொருத்தமான வாசிப்பு விடயங்க
ஊடகத்துறையின் பங்கும் பணியும் நன்கு உ
முழுமையான அபிவிருத்தியில் பங்காற்றுகின்
உறுதியாக கடைப்பிடிக்கின்றது. நேரடியாகவு
வேலைவாய்ப்புகளையும் எழுதும் சந்தர்ப்பங்
வலம்புரி மென்மேலும் பல துறைகளில்
தரம் பெற்ற பத்திரிகையாக வர வேண்டு

வாழ்க வலம்புரி
வளர்க வலம்புரி.

பேராசிரி

மு

# ...ம் ஆண்டு நிறைவு விழா

## ...ஐயப்பதாஸகுருக்களின் அருளாசிச் செய்தி

தமிழ்மக்களின் நன்மதிப்பைப் பெற்று
...த நான்கு ஆண்டுகளாக தமிழ் பேசும் மக்க
...த தன்னிகரில்லா சேவை செய்து நான்காவது
...டை நிறைவு செய்து ஐந்தாவது ஆண்டில் பாதம்
...ண்டாடும் வலம்புரி பத்திரிகைக்கும், அதன் நிர்
...தும், வலம்புரி வாசகர்களுக்கும் எமது நல்லாசி
...ண்டு வலம்புரி பத்திரிகை தொடர்ந்தும் தமிழ்
... வெள்ளிவிழா, பொன்விழா, நூற்றாண்டு விழா
...லை ஐயப்பசுவாமியின் பரிபூரணமான திருவருள்
... ஆசீர்வதிக்கிறேன்.
...ஸ்ரீஐயப்பதாஸ சாம்பசிவ சிவாச்சாரியார்.



...ங்குநாதம் அலுவலகம்

## யாழ்.ஆயரின் வாழ்த்துச் செய்தி



வலம்புரி பத்திரிகை தன் பணியின் நான்கு ஆண்டுகளை நிறைவு செய்வது உண்மையிலே ஒரு மகிழ்வான செய்தியாகும். இவ்வேளையில் இப்பத்திரிகையின் ஆசிரியர் நிர்வாகிகள் மற்றும் பணியாளர்கள் அனைவருக்கும் எம் மனம் நிறைந்த வாழ்த்துக்களை தெரிவிக்கின்றோம்.

ஒரு நாட்டில் நீதித்துறை, நிர்வாகத்துறை, பாராளுமன்றம் ஆகிய மூன்றும் முக்கிய தூண்களானால் பத்திரிகைத்துறை அதன் நான்காவது தூணாகும் என்று கூறப்படுகின்ற வகையில், பத்திரிகைத்துறை இன்று ஒரு முக்கியம் வாய்ந்த துறையாகிவிட்டது. யாழ். நகரில் ஒரே நேரத்தில் [illegible] பத்திரிகைகள் வெளிவந்து பத்திரிகைப் பணியின் தேவையை நிறைவு செய்கின்ற வேளையில் அப்பத்திரிகைகளின் மத்தியில் வலம்புரி தன் பணியினைச் சிறப்பாக ஆற்றுவதையிட்டு பெருமகிழ்ச்சி அடைகிறோம்.


கடந்த நான்கு ஆண்டுகாலப் பணியில் இப்பத்திரிகையின் துரித வளர்ச்சியையும் வேகமான முன்னேற்றத்தையும் காணக்கூடியதாக இருக்கின்றது. வட பகுதி தமிழ்மக்கள் எத்தனை தமிழ் பத்திரிகைகள் வந்தாலும் அப்பத்திரிகைகளின் தரத்தினை அறிந்து ஆய்வு செய்து படிப்பதில் வல்லவர்கள். வலம்புரி பத்திரிகை தனக்கென ஒரு பகுதி வாசகர்களை கொண்டிருக்கின்றது என்றால் அது தன் தரத்தினை பாதுகாத்து வளர்த்து வந்திருக்கின்றது என்பதுதான் அர்த்தம்.

ஆன்மீகக் கருத்துக்களுக்கும் கட்டுரைகளுக்கும் வலம்புரிப் பத்திரிகை சிறப்பு முக்கியத்துவம் தந்து பிரசுரிக்கும் பணியினை நாம் இங்கு சிறப்பாக பாராட்ட விரும்புகிறோம்.

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ் என்ற விருதுவாக்குடன் வலம்புரி பத்திரிகை இன்னும் சிறப்பாகத் தன் பணியினை தமிழ்மக்களுக்கு ஆற்ற வாழ்த்தி ஆசி கூறி நிற்கிறோம்.

மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகை,
யாழ்.ஆயர்,
யாழ்ப்பாணம்.

## பல்கலைக்கழகமாக மிளிரும் வலம்புரி பேராயர் ஆசிச் செய்தி



வலம்புரி பலவித சவால்களின் மத்தியில் தொடர்ந்து வளர்ச்சியுற்று வருவதைக் கண்டு மகிழ்ச்சியடைகின்றேன்.

இன்று யாழ்ப்பாணத்திலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் தமிழ் இலக்கிய ரசனையையும், வரலாற்று சிந்தனைகளையும் வளர்ப்பதில் வலம்புரி முதலிடம் வகிக்கின்றது என்று கூறினால் தவறாகாது. இதுவே வலம்புரி தமிழ்மக்களுக்கு செய்கின்ற அரும் பெரும் சேவையென்று நினைக்கின்றேன். இப்படியான சேவையில் தொடர்ந்து வலம்புரி ஈடுபட வேண்டும் என்பதே என்னுடைய விருப்பமாகும்.

பத்திரிகைகளே சாதாரண மக்களின் பல்கலைக்கழகங்கள் என்பது அறிஞர் ஜே.பார்ட்டன் என்பவருடைய கருத்து. உலகத்திலே அரைவாசிப்பேர் பத்திரிகைகளை விட வேறு எதனையுமே வாசிப்பதில்லை என்று அந்த அறிஞர் கூறினார்.

வலம்புரி சாதாரண மக்களின் பல்கலைக் கழகமாக வளர்ந்து வருகிறது. இதனைக் கண்டு அனைத்து தமிழ் பேசும் மக்களுமே பெருமைப்பட வேண்டும்.

வலம்புரி தொடர்ந்து நற்பணியாற்ற வாழ்த்துகின்றேன்.

அதி வண.கலாநிதி, S.ஜெபநேசன்,
பேராயர்- தென் இந்திய திருச்சபை.

## யாழ்.கிளிநொச்சி உலமா சபைத் தலைவரின் வாழ்த்துச் செய்தி



யாழ்.தீவகற்பத்தில் கடந்த நான்கு வருடங்களாக யுத்த சூழ்நிலையின் மத்தியிலும், பத்திரிகை தர்மத்தினை கைக்கொண்டு மிகவும் வெற்றிகரமாக வலம் வந்து கொண்டிருக்கும் வலம் புரியின் சேவை இந்நாளில் பாராட்டிற்குரியது.

வலம்புரியின் சேவை என்றும் எமக்குத் தேவை. அது மேலும் புதுப்பொலிவுடன் விளங்க எமது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

மௌலவி.பி.ஏ.எஸ் சுப்யான்,
யாழ்.கிளிநொச்சி உலமா சபைத் தலைவர்.

## பத்திரிகை தர்மத்தை வழுவாது கடைப்பிடிக்கும் நாளேடு

வலம்புரி தனது நான்காவது வருட
...நிறைவை மகிழ்வமைதியோடு பூர்த்தி செய்
...துள்ளது. வலம்புரி பிறந்த நாளிலிருந்து பல
...லவற்றை எதிர்கொண்ட பொழுதும் அவைகளை
...மைத்துவத்தாலும், பண்பான ஊடகக்கொள்
... இன்றைய சிறப்பு நிலையை அடைந்துள்ளது.
குறிப்பாக யாழ்ப்பாண மக்களின் நலன்
... முறையில் பணியாற்றி வருகின்றது. வலம்புரி,
... இளைஞர்கள், பெண்கள், முதியோர்கள் ஆகி
...ாசிப்பு விடயங்களைத் தாங்கி வருகின்றது.
...ணியும் நன்கு உணரப்பட்டு இப்பிரதேசத்தின்
... பங்காற்றுகின்றது. பத்திரிகை தர்மத்தை
...து. நேரடியாகவும் பல வழிகளிலும் பலருக்கு
...தும் சந்தர்ப்பங்களையும் கொடுத்துள்ளது.
... பல துறைகளில் வளர்ச்சி கண்டு சர்வதேச
... வர வேண்டுமென வேண்டுகின்றேன்.
... வலம்புரி
... வலம்புரி.

பேராசிரியர் P.பாலசுந்தரம்பிள்ளை,
புவியியல் பேராசிரியரும்,
முன்னாள் துணைவேந்தரும்.



## யாழ்.பல்கலைக்கழக துணைவேந்தரின் வாழ்த்துச்செய்தி

வலம்புரி நாளிதழ் 4வது அகவையை நிறைவு செய்வதை அறிந்து மகிழ்ச்சி அடைகின்றேன். ஒரு சமூகத்தின் மனச்சாட்சியாக, மனச்சாட்சியின் குரலாக பத்திரிகைகள் விளங்க வேண்டும். ஈழத்தமிழர் படும் இன்னல்களை, துன்ப துயரங்களை வெளிக் கொணர்ந்து சர்வதேச சமூகத்தின் முன் நிலைநிறுத்திக் காட்டும் பாரிய பணி இன்று பெரும்பாலும் தமிழ்ப் பத்திரிகைகளின் கையிலேயே உள்ளது.

வாசிப்பு நாட்டம் அதிகரித்து வரும் இந்நாளிலே பத்திரிகைகள் தமது பணியினை விரிவுபடுத்த வேண்டிய தேவை உள்ளது. இத்தேவையை உணர்ந்து வலம்புரி, சங்குநாதத்தினை செம்மையாக வெளியிடுவது மகிழ்ச்சிக்குரியது.

தமிழ்ப்பத்திரிகைத் துறையிலே ஈழத்திருநாட்டிற்குச் சிறப்பானதோர் வரலாறு உண்டு. இந்த வரலாறு தொடர்வதற்கு உந்து சக்தியாக அமைய வேண்டியது கல்விச் செயற்பாடுகளே எனலாம். கல்விச் செயற்பாடுகள் இடையூறின்றி நடைபெற்றால் சமூக முன்னேற்றம் தானாகவே சாத்தியப்படும். இதற்கான பணிகளை முன்னெடுக்கும் பொறுப்பு பத்திரிகைகளுக்கு நிரம்பவே உண்டு.

வலம்புரி நாளிதழ் நாள் நாளும் வளர்ந்து ஈழத்தமிழ் சமூகத்திற்குப் பெரும் பணியாற்ற வேண்டும். என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம் . வாழ்க வலம்புரியின் பணி.

பேராசிரியர், எஸ்.மோகனதாஸ்,
துணைவேந்தர்,
யாழ்.பல்கலைக்கழகம்.

## மணிக்கொடியாய் நின்றாய் வாழி



வலம்புரியே வலம்புரியே கண்ணன் என்னும்
மாயவனின் கையிருந்து மக்களுக்கு
நலம்புரியும் வலம்புரியே யாழ்ப்பாணத்தில்
ஞானமலைக் சுடராகச் செய்தி, எல்லாத்
தலம் பொலியும் கொடை புரிவாய், நீ நான்காண்டு
தமிழருக்கோர் மணிக்கொடியாய் நின்றாய், கல்விப்
பலன்பெருகும் மக்களுக்குப் பழம்தேன் பாலாய்
பலகலையாம் பட்சணமுமாய் நின்றாயே,
நாட்டிலே சமாதான நலம் சிறக்க
நற்கல்விப் பண்பாட்டு வளம் சிறக்க
வாட்டமுறு வறுமைபிணி துயர் ஒழிக்க
மனுநீதி தருமநெறிச் சுகம் பிறக்க
தேட்டமுற வளரும் பொரு ளாதாரத்தால்
திகழ்மக்கள் மனங்குளிரத் தமிழ் செழிக்க
ஊட்டுகின்ற தாய்போலப் பணிகளாற்றும்
ஒலி சங்கு வலம்புரிசூ ரியன்போல் வாழி.

அருட்கவி.
சி.விநாசித்தம்பி. M.A.

வலம்புரியின்

# 4ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்புமலர்


## வாழ்க வலம்புரி! ஓங்குக உன் புகழ்!

கொம்பியூட்டர் ரைப்பிங், லமனேற்றிங் மற்றும் சர்வதேச ரீதியிலான தொலைபேசி வசதிகள், இன்ரநெற் வசதிகள், பக்ஸ், போட்டோ பிரதி வசதிகள் போன்ற சேவைகளை சிறந்த முறையில் வழங்குபவர்கள்



**ஸ்ரீ முருகன் தொலைத் தொடர்பகம்**

303, கே.கே. எஸ் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 021 222 2670
Fax:- 021 222 3214


## ஆண்டு ஐந்தில் அடி எடுத்து வைக்கும் வலம்புரிக்கு!

அறிவுக்கு விருந்தாய் அனைவரும் போற்றிட
ஆண்டுகள் நான்கு ஆற்றிய நற்பணி
இதயத்திருத்தி என்றுமே வாழ்த்திட
நடுநிலை தவறாது நன்னெறி காத்திட
நாளும் காலையில் நாம் வரவேற்றிடும்
நாளிதழ் வலம்புரி நலம் வாழியவே!

படிப்போர் கேட்போர் அனைவருக்குமாக
பக்குவமான பல்சுவை அம்சங்கள்
பத்திரிகை வாசகர் பலரும் போற்றிட
பகுத்துத் தந்திடும் வலம்புரியே
பல்லாண்டு பல்லாண்டு பலமிகப் பெற்று
பாரோர் போற்றிட வாழிய! வாழிய!

வலம்புரிச் சங்குநாத நல் ஒலியது
வானுயர்ந்து ஒலித்து வையகம் பரவிட
வளம் பல பெற்று வாழ வாழ்த்துதுமே.

நீர்வை மணி.


## வையகமெல்லாம் வலம்புரி வலம் வர வாழ்த்துகின்றோம்

யாழ் நகரில் சகல விதமான கையடக்க தொலைபேசிகள், அதன் உதிரிப்பாகங்கள், திருத்த வேலைகள் என்பனவற்றை மிகச் சிறந்த வகையில் செய்து தருபவர்கள்
**நவீன் செலுலர் போன் சொப்** ஸ்தாபனத்தார்.



**நவீன் செலுலர் போன் சொப்**

185, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 0777 574160
FAX:- 0777 265711



## வலம்புரியே! வாழ்க பல்லாண்டு!

நாற்றிசையும் நிகழ்கின்ற நிகழ்வெல்லாம் நீ சேர்த்து
நடுவு நிலைமையெனும் நல்லவழி நீ நடத்து
ஆற்றி வரும் அளப்பரிய சேவையதன் பயணத்தில்
ஆண்டு நான்கினது நிறைவதனைக் காணுமுன்னைப்
போற்றி வாழ்த்துகிறோம்! வலம்புரியே நீ வளர்ந்து
பல்லாண்டு பணிபுரிந்தெம் மக்களது மனங்களிலே
ஏற்றமுடன் வீற்றிருக்க எல்லாம் வல்லவனாம்
இறையவனின் அருளினையே
நாடி நாம் துதிக்கின்றோம்.

ப.மகேந்திரதாசன்,
நாயன்மார்க்கட்டு.


நான்காம் ஆண்டை நிறைவு செய்யும்
வலம்புரிப் பத்திரிகைக்கு எமது
நல்வாழ்த்துக்கள் உரித்தாகட்டும்

தரமான மரத் தளபாடங்களை உங்களுக்கு
சிறந்த முறையில் செய்து தருபவர்கள்



**ஈஸ்வரி மரக்காலை அன் தொழிலகம்**

பலாலி வீதி, பரமேஸ்வரா சந்தி.



ஐந்தாம் ஆண்டில் காலடி பதிக்கும்
வலம்புரிக்கு எமது நல்வாழ்த்துக்கள்!

ICI தயாரிப்பான CIC **PAINT** கம்பனியின்

**DUCO – Autocolour**

**Dulux** { Gloss finish once / Pentalite plus }

**Glidden** { Emulsion / Enamal }

**Necol Autocolour**



மற்றும் இதர பொருட்களை மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளலாம்.

**சிவன் மோட்டோர்ஸ் ஸ்ரோர்ஸ்**

70/1, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P:- 021.222.2763


## வலம்புரி நாளிதழ் வாழியவே!

சூரியன் ஒளியினில் செய்திகள் கொட்டிடும்
சுதந்திர வலம்புரி வாழிய வாழிய
சீறிடும் பூமியின் செய்திகள் குவித்திடும்
செந்தமிழ் வலம்புரி வாழிய வாழிய

அழகிய தமிழினில் தலையங்கம் தீட்டிடும்
ஆனந்த வலம்புரி வாழிய வாழிய
இளமையின் அழகினில் தினமும் மலர்ந்திடும்
இனிய வலம்புரி வாழிய வாழிய

புதுமைகள் தமிழினில் பூத்திட நிமிர்ந்திடும்
பூவனமாய் வலம்புரி வாழிய வாழிய
எதுகையும் மோனையும் காத்திட எழுந்திடும்
இதயம் வலம்புரி வாழிய வாழிய

நீராகவும் நெருப்பாகவும் புதினங்கள் வெளியிடும்
நடுவுநிலை வலம்புரி வாழிய வாழிய
போரோடும் அமைதியோடும் நாளும் களமாடும்
புன்னகை வலம்புரி வாழிய வாழிய!

பூ.புலேந்திரராஜா.J.P.

# காரிகையைக் கானகத்தில்...

வலம்புரியின் 4வது ஆண்டு நிறைவு
சிறப்புச் சிறுகதை



செங்கை ஆழியான்

நள்ளிரவை நெருங்கிக் கொண்டிருந்த வேளையில் ஒரு ஜீப வண்டியும், ஒரு ஏபோர்டிக்காரும் பருத்தித்துறைப் பக்கமிருந்து வேகமாகப் பயணப்பட்டு வல்லைவெளிச் சந்தியை நெருங்கிக்கொண்டிருந்தன. வெளியில் அரைகுறை நிலவு வல்லைவெளியின் அமைதியை குலைக்காது மெல்லிய வெளிச்சத்தைப் பரவ விட்டிருந்தது. ''உர்''என்ற இரைச்சலோடு காற்று மட்டும் வீசியது. ஜீபில் வந்து கொணடிருந்த மணியத்தார், ''ஓரமாக வண்டியை நிறுத்து, தம்பி'' என்றார். டிறைவர் இருக்கையிலிருந்த முருகேசுக்கு நிறுத்தச் சொன்ன காரணம் விளங்கியது. ஓரமாக நிறுத்தினான். பின்னால் வந்து கொண்டிருந்த காரும் ஜீப் வண்டியை அண்மித்து நின்றது.

காரில் சாரதியாக அமர்ந்திருந்த சுந்தரத்தார் பின்னால் திரும்பி, காரின் பின் சீற்றில் அமர்ந்திருந்த மனைவியிடம ''ஏனப்பா, இறங்கி ஒண்டுக்கு இருக்கப் போறியளே?' என்று கேட்டார்.

''ஒண்டும் வேணாம். நீங்கள் போயிட்டு வாருங்கோ...''

இரண்டு அதிகாரிகளும் ஒவ்வொரு கானுக்குள் ஒதுங்க, முருகேசும் ஒரு பக்கமாக ஒதுங்கக் கொண்டான். காரிற்குள் இருந்த தங்கம்மாவிற்கும் இறங்கி ஒதுங்கினால் பரவாயில்லைப் போலப்பட்டது. இறங்கித் தெருவை விலக்கி அயற் பற்றைக்குள் மறைவாக அமர்ந்து கொண்டாள்

வல்லைக்காற்று உர்ரெனச சத்தமிட்டபடி வீசியது.

ஜீப்பும் காரும் வேகமாகப் புறப்பட்டன. பற்றைக்குள் அமர்ந்திருந்த தங்கம்மா விதிர் விதிர்த்துப் போய்! ''ஐயோ... நானிங்க... நில்லுங்கோ... நில்லுங்கோ... என்று ஓலமிட்டபடி தெருவிற்குப் பாய்ந்து வந்தாள். அதற்குள் வாகனங்கள் இரண்டும் முனியப்பர் கோயிலைக் கடந்து விட்டன. தங்கம்மா பெருங்குரலில் ஓலமிட்டலறினாள். எவருமில்லாத பாழ்வெளி. வல்லைவெளி பற்றிய கதைகள் வேறு நிரம்ப மனதில் உலவின.

காருக்குள் மனைவி இருக்கிறாள் என்ற எண்ணத்துடன் சுந்தரத்தார் காரை ஓட்டிக் கொண்டிருந்தார். ''பாவம் அலுப்பு நல்ல நித்திரையாக்கும்'' என்றும் எண்ணிக் கொண்டார.

தங்கம்மாவிற்குக் குலை நடுக்கம் எடுத்தது. வேகமாகக் காருக்குப் பின்னால் ஓடி வந்ததால் கொண்டையும் அவிழ்ந்து விட்டது. தலைவிரிகோலமாக, ''பாவி பாவி என்னை இப்படிப் பரிதவிக்க வட்டிட்டுப் போறியே,'' என்றலறினாள்.

கிழக்கிலிருந்து தெருவைப் பகலாக்கியபடி லொறி ஒன்று விரைந்து வந்தது. பக்கத்தில் கிளினர் பாடியபடி அமர்ந்திருந்தான. டிறைவர் அதனை இரசித்தபடி ஸ்ரியரிங்கைப் பற்றியிருந்தான். வல்லைச் சந்தி திரும்பிய முகட்டில் தலைவிரிகோலமாக ஒருபெண் தெருகரையினின்று லொறியை நிற்பாட்டுமாறு கைகாட்டுவது தெரிந்தது.

''அணணை நிற்பாட்டாதை... இது வேறு ஒன்று... இந்தவிடத்தில இப்படித்தான் நிக்கிறதாம். காறித்துப்பிவிட்டு ஓட்டு...'' என்றான கிளினர். அவன் பாடிய சினிமாப் பாடல் தேவாரமாக மாறியிருந்தது. டிரைவரின் கரங்கள் பதறின.

வேகமாக லொறி தங்கம்மாவைக் கடந்து விரைந்தது. அவன் துப்பல் அவள் மீது படிந்தது.

''நல்ல காலம்... வீட்டிற்குப் போனதும் மந்தரித்து நூல் கட்ட வேணும்...''

தங்கம்மா ஓவெனக் கதறி அழுதாள. உடம்பெல்லாம் பயத்தினால் வியர்த்து ஒழுகியது. கண்கள் இருள்வது போல உணர்வு. ''எட பாவி மனிசா உன்னை நம்பி வந்தவளை இப்படி நடுத்தெருவில் விட்டிட்டுப் போயிட்டியே? நீ வேணுமென்றுதான் செய்திருக்கவேணும் கந்தோரில ஒருததியோட உனக்கு தொடுப்பு எண்டு கேள்விப்பட்டும் அதை வெளிக்காட்டாமல் இருந்தன். திட்டமிட்டுச் செய்திட்டாய். என்னைத் தொலைச்சு தலை முழுகினால் அந்த சிங்காரியோட வாழலாமென்ற எண்ணந்தானே? நல்லா வாழ்ந்து தொலை. இனிச் சீவியத்திலும் உன்னோட வாழமாட்டன்..'' என்று கண்ணீருடன் தங்கம்மா முடிவெடுத்துக் கொண்டு நிமிர்ந்த போது இன்னொரு லொறி தெருவில் வந்து கொண்டிருப்பது தெரிநதது. இம்முறை தங்கம்மா துணிந்து நடு வீதியில் நின்று நிறுத்துமாறு வேண்டினாள்.

திடீரெனக் குறுக்கே ஒரு பெண் தோன்றியதும் இன்னது இன்னாதது தெரியாமல் டிரைவர் தங்கராசா சடுதியாக பிறேக் அடித்து நிற்பாட்டினான். எதிரில் தலைவிரி கோலமாக ஒருபெண்.

''அண்ணை இறங்காதை...'' என்றான் பக்கதிலிருந்த கிளினர்.

''அண்ணன்மாரே, என்ர புரியன் இங்க என்னை விட்டுட்டு ஓடிவிட்டான். என்னை ஒருக்கா உங்களோட ஏத்திக் கொண்டு போய் யாழ்ப்பாணத்தில விட்டிடுங்கோ'' எனத் தங்கம்மா கை கூப்பி இரந்தாள்.

அணணை, உது முனிதான். மோகினி வடிவில் வந்திருக்குது... இறங்காதை. அடிச்சிடும்.''

''என்னடா செய்யிறது...?''

''ஏதாவது தருவதாகச் சொல்.. அண்ணை.''

டிரைவர் தங்கராசா வெலவெலத்துப் போனான்.

தங்கம்மா விரைந்து டிரைவர் பக்கமாக ஓடி வந்தாள்.

''ஐயோ முனியம்மா... என்னை ஒணடும் செய்திடாதை. பிள்ளை குட்டிக்காரன். உனக்கு வெள்ளைக் கோழி தாறன்...''

''ஐயா என்னை ஏத்திக்கொண்டு போங்கோ...''

''முனியம்மா உனக்குப் படையல் வைக்கிறன் எங்களை விட்டிடு...''

''ஐயோ நான் சொல்லிறதை நம்புங்கோ...''

''நம்புறன்... எங்களை விட்டிடு. உனக்குச் சிவப்புச் சாவல் தாறன். வேணுமெண்டால் கிடாயும் வெட்டுறன்...''

''ஐயோ...'' என்றலறினாள் தங்கம்மா. ''பாவி மனிசா...''

''முனியம்மா உங்களைத் திட்டுதண்ணை... டாஸ் பொட்டில இருக்கிற சாராயத்தைப் போத்தலோட தூக்கிக் கொடுத்துவடுங்கோ...'' என்றபடி கிளினர் சாராயப் போத்தலை எடுத்து தங்கராசாவிடம் நீட்டினான். வருகற வழியில்தான்மட்டும் சாராயத்தைப் பருகிய ஓரவஞ்சகத்தைக் கிளினரால் பொறுக்கமுடியவில்லை. அதனை வாங்கி அவளிப் நீட்டியபடி தங்கராசா லொறியை வேகமாகக் கிளப்பினான். முனியம்மா வாங்கினாளா இல்லையா என்பதை அவன் கவனிக்கவில்லை.

லொறி புட்டுக்கொண்டு விரைந்தது. வல்லைப் பாலத்தில் எதிரே தட்டிவான் ஒன்று வந்து கொண்டிருந்தது. அதனை மறித்து, ''உங்கால இப்ப போகாதையுங்கோ... முனியம்மா நிக்கிறா! நாங்கள் தப்பிவந்தது அதிசயம்.. விடியப்புறமாப் போங்கோ...'' என்று கூறிவைத்தான்.

வல்லைப் பாலத்தில் சிறிது நேரத்தில் பெரும் வரிசையில் வாகனங்கள் தரித்து இடம் பிடித்தன.

''இந்த விடத்தில இப்படித்தான் எத்தனை பேரை முனி இங்க அடிச்சிருக்குது.''

''இதுகனத்த நாள். அது தான் வெளிப்பட்டிட்டுது...''

''சவாரிச் செல்லப்பன் தன்ரை மனிசியை இங்க கொண்டு வந்து சாக்காட்டியவனாம் அந்தச்சீவன் தான் இப்படி அலை யுது...''

''முனியாவது மோகினியாவது...'' என்றான் ஒரு இளைஞன்.

''அப்ப நீர் மசிர் இறங்கிப் போம்...''

அந்த இளைஞன் கம்பீரமாக இறங்கி முன்னால் நடந்தான். சிறிது துாரம நடந்தவன் முனி யப்பர் கோயில் தெருவிளக்கில் ஒரு பெண் தலைவிரி கோலமாக நிறபது தெரிந்தது. அப்படியே திரும்ப வந்து தட்டிவானில் தலை யைக் குனிந்தபடி அமர்ந்து கொண் டான்.

''என்னடா தம்பி?''

''அண்ணை சொன்னது சரி தான் ஏதோ நடுத்தெருவில நிக்குது..''

''அது இண்டைக்கு பலியெடுக்காமல் போகாது...''

வல்லைப் பாலத்தில் நிறுத்தப்பட்டிருந்த வாகனங்களில் சில திரும்பிச செல்லத் தலைப்பட்டன.

தட்டிவானில் பருத்தித்துறை மாநதிரிகர் சின்னப்பர் இருப்பதை ஒருவர் அடையாளங் கண்டார். அவா, இருப்பதை எல்லாருக்கும், அறிவித்தார்.

''சின்னையாண்ணை எதாவது செய்யுங்கோ...''

''வல்லை முனிக்கு எதுவும் செய்ய முடியாது. இந்தப பக்கம் வல்லைப் பாலத்தடிக்கு வராமல் காவல் செய்யிறன்...'' என்றார் மாந்திரிகர் சின்னையா.

''அதையாவது செய்யுங்கோ... சுருக்கா...''

யாழ்ப்பாணப் பக்கமிருந்து ஒரு ஜீப்பும் ஒரு ஏபோர்ட்டிக் காரும் விரைந்து வந்தன. அவற்றினை வல்லைப் பாலத்தில் நின்றிருந்தவர்கள் கைகாட்டி மறித்தனர்.

''என்ன என்ன?'' என்று ஜீப்பிலருந்து மணியத்தார் படபடத்தார்.

என்ன? என்னப்பா? காரிலிருந்து சுந்தரத்தார் பதறினார்.

''அங்கால இப்ப போகேலாது..'' ''ஏன்...?''

''முனி நிக்குது... தலைவிரிகோலமாக முனியப்பர் கோவிலடியில நிக்குது...''

காரிலிருந்து இறங்கி சுந்தரதததார் மணியத்தாரிடம் வந்தார்.

''எக்கணம் தங்கம்மாவை அது அடிச்சிருக்கும..'' என்றார் கண்ணீர்விட்டபடி.

''அப்படியொன்றுமிருக்காது... நீர் காருக்க வடிவாகப் பார்த்தனீரே?''

''வீட்டிற்குப் போய் கேற்றடியில நிறுத்திவிட்டு ''தங்கம்கேற றைத்திற'' என்றன். பின் சீற்றில பதில் வரவில்லை. திரும்பிப் பார்த்தால் தங்கம்மாவைக் காணவில்லை. உங்களிடம் ஓடி வந்தன்...'' என்றார் கலங்கியபடி சுந்தரத்தார்.

''நாங்கள் வல்லைவெளியில நிற்பாட்டினது பிழை ஐயா'' என்றான் கவலை ததும்ப முருகேசு.

''விசர் கதையை விட்டுட்டு ஜீப்பை எடு. நாங்களாக்கு முனி யமமாவாக்குது. எடு முருகேசு.. நானிருக்கிறன்.''என்று அதட்டினார மணியத்தார். டிஆர்.ஓ.வின் பேச்சிற்கு மறுபேச்சேது? ''வன் னக்காட்டில எத்தனை பேய் பிசாசு களைக் கண் டனான். நீ பயப்படாமல் வாகனத்தை ஓட்டு...''

முருகேசு டாஸ் பொர்டத திறந்து எதையோ எடுத்தான்.

''என்னடா...?''

''திருநீறு... இந்தாருங்கோ நீங்களும் நெத்தியல வடிவாப் பூசுங்கோ, ஐயா. எனககுப் பயமாகவிருககுது...''

''இறங்கடா... நான் ஜீப்பை ஓட்டுறன்...'' முருகேசு இறங்கிக் கொண்டான். மணியத்தார் டிரைவர் சற்றில் ஏறி ஸ்ராட் செய்தார். ஒளியைப் பாய்ச்சியபடி ஜீப் விரைந்தது.

முனியப்பர் கோயிலை நெருங்கிய போது குறுக்கே கண்ணீரும் கம்பலையுமாகத் தங்கம்மா நின்று கரங்கூப்பி நிறுத்துமாறு கும்பிட்டாள். அவளை அடையாளங்கண்டு கொணட சுந்தரத்தார் காரை விட்டிறங்கி ஓடிவந்தார்.

''தங்கம்மா...''

''சீ, நீயும் ஒரு மனி சனா?''

தஙகம்மா முன்னால் வந்து ஜீப்பில ஏறிக்கொண்டாள் விம்மி விம்மி அழத் தொடங்கினாள். ''முனியமமாவை'' ஏற்றிக் கொண்டு ஜப் முன்னால் வர பின்னால் கார் விரைந்து வருவதை வல்லைப் பாலத்தில் நின்றவர்கள் கண்டனர்.

''உன்னோட இனி வாழ மாட்டன்'' வெள்ளைக் கோழி வேணுமா எண்டு கேட்டான்கள். சிவத்தசாவல் வேணுமா எண்டு கேட்டான்கள். படையல் வைக்கிறானாம். ஒருதன் முகத்தில காறித்துப்பி விடடும் போனான். சாராயப் போத்தலால எறிஞ்சுவிட் டும் ஒருத்தன் போறான். இவனோடு இனிச் சேர்ந்து வாழ மாட்டன் எனத்தங்கம்மா வழி நெடுகப்பிதற்றியபடி வந்தாள்.

''உது முனியின்ர வேலை'' என்றான்முருகேசு மெதுவாக.

தங்கம்மாதன்டுத்தமுடி வில கடைசிகாலம் வரைதளராதிருந்தாள் எனததெரிகிறது. சுந்தரத்தார் கந்தோர் தொடுபபுடன் தன்கடைசி காலத்தைக் கழித்தார் என்றம் சொல்லப்படுகிறது.


''தங்கம்மாவை முனி அடிச்சாதால மனம்பேதலித்து விட்டது. அது தான் பிரிஞ்சு போயிட்டாள்'' என ஊராருக்குச சுந்தரத்தார் சமாதானம் கூறினாராம். ★



# நல்லூர்க் கந்தன் ஆலயத்தின்

# தோற்றமும் ஏற்றமும்

கலாநிதி
க.சொக்கலிங்கம்
(சொக்கன்)



யாழ்ப்பாணத்தைத் தமிழ் மன்னர் ஆட்சிபுரிந்த காலததிலே, தொடக்கத்தில் வல்லிபுரம் என்று இன்று வழங்கி வரும சிங்கைநகரையும் பின்பு நல்லூரையும் தலை நகர்களாயக் கொண்டிருந்தனர் என்பது வரலாறு. பிற்பால் தமிழனாய்ச் செண்பகப பெருமாள் என்ற பெயருடன் விளங்கி, கோடடையிலிருந்து இலங்கையின தென்புலத்தினை ஆண்டு வநத சிங்கள அரசன் பராக்கிரமபாகுவால் வளர்க்கப்பட்டு அவன் ஏவலால் யாழ்ப்பாண அரசினைக் கைப்பற்றி சிறீ சங்க போதி புவனேகபாகு என்ற சிங்களப் பெயரினைச் சூடிய வேந்தனே, 1450 ஆம் ஆண்டளவில் அதுகாலம் வரை தலைநகராயிருந்த சிங்கை நகரை விடுத்து நல்லூரினைத் தலைநகர் ஆக்கினான். இவன் புரிந்ததலையாய பணி, நல்லூர்க் கந்தசுவாமி கோயிலைக் கட்டியதாகும். இச்செய்தி "கைலாயமாலை" என்ற நூலின் தனிச்செய்யுள் ஒன்றினால் உறுதிப்படுகின்றது. அதனோடு நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் கட்டியததிலும் அவன் பெயர் வருவதனாலும் அது வலுவுறுகின்றது.

**நல்லூர் என்ற பெயரின் சிறப்பு**

தமிழகத்திலே ஆதிச்ச நல்லூர், திருவெண்ணெய் நல்லூர், பந்தனை நல்லூர் முதலாகத் தமக்கு முன்னால் அடைகளைப் பெற்ற ஊர்கள் பல உள்ளன. ஆனால் எந்த அடைகளையும் பெறாது "நல்லூர்" என்ற நல்ல பெயர் அமைந்தமை இவ்வூருக்கு அமைந்த தனிச் சிறப்பாகும். கோயில் என்றதும் அது சிதம்பரத்தையே குறிப்பது போன்று நல்லூர் என்றதும் அது இடவாகு பெயராக எம் தமிழ்ப் பெருங் கடவுளாகிய கந்தசுவாமியின் கோயிலையே நினைவிற் கொணர்வதும் குறித்துக் காட்டவேண்டிய ஒன்றே.

**கோயில்கள் நிறைந்த நல்லூர்**


யாழ்ப்பாணத் தமிழரசர் காலத்திலேயே நல்லூரின் நான்குதிசைகளிலும் காவற்கடவுளாக, சட்டநாதர் (வடக்கு), வெயில் உகந்த விநாயகர் (கிழக்கு), கைலாசன் நாதர் (தெற்கு), வீரமாகாளி (மேற்கு) ஆகியோர் எழுந்தருளினர். இன்று நல்லூரைச்சுற்றி 1-2 கிலோ மீற்றருக்குட்பட்ட பருத்தித்துறை வீதி, செம்மணிவீதி, சட்டநாதர் வீதி, திருநெல்வேலிச் சிவன் வீதி, முடமாவடி, ஆடிய பாத வீதி, கச்சேரி நல்லூர் வீதி, ஆனந்தன்வடலி வீதி, பழந்தெரு வீதி என்பனவற றில் மட்டும் ஏறக்குறையச் சிறியவும் பெரியவுமான சுமார் அறுபது கோயில்கள் வரை உள்ளன. இவை தவிர நல்லூரின் கிழக்கு வீதியிலே மனோன்மணி அம்மன ஆலயம், மேற்கு வீதியில் விநாயகர் ஆலயம், அதனையடுத்துச் சிவன் கோயில் என்பனவும் உள்ளன.

வாரணாசி என்றும் காசி என்றும் இந்துக்களால் ஏத்தப் போற்றப்படுவதும், கங்கையாகிய புனித நதியினைப் பெற்றதும், அங்கு இறந்தால் முத்திப்பேறு உறுதி என்று நம்பப்படுவதுமான நகரினைக கோயில்களின் நகரம் (City of temples) என்று குறிப்பிடுவது வழக்கம். இலங்கையில் சிறப்பாக யாழ்ப்பாணத்தில் நல்லூரே கோயில்களின் நகரம் என்று கூறுவது முற்றிலும் பொருத்தமே.

இக்கோயில்களுக்கெல்லாம் நடுநாயகமாகப் பல தனித்தனமைகளோடு விண்மீன்களின் நடுவண் ஒளிரும் வெண்மதியாக நல்லூர்க் கந்தசுவாமி கோயில் ஒளிர்கின்றது என்றால் அது மிகையுரையன்று.

**நல்லூர்க் கந்தசுவாமி கோயிலின் மறுபிறப்பு**

ஸ்ரீசங்கபோதி புவனேகபாகு கட்டிய கந்தசுவாமி கோயில், செம்மணிவீதியில் இன்று கம்பீரமாகக் காட்சிதரும் கிறிஸ்தவ தேவாலயம் உள்ள இடத்திலே அமைந்திருந்தது என்றும், அது பிலிப்தெ ஒலிவெறா என்னும "வீரசூரத் தளபதியால்" (போர்த்துக்கீச தளபதியால்) 1621 ஆம் ஆண்டில் தரைமட்டமாக்கப்பட்டது என்றும் முதலியார் குலசபாநாதன் தமது நல்லூர்க் கந்தசுவாமிகோவில் என்ற நூலில் குறிப்பிட்டுள்ளார். (பக்:15)



வலம்புரியின் 4வது ஆண்டு நிறைவு

சிறப்புக் கட்டுரை

போர்த்துக்கேயரின் வன்கணமையால் நல்லூாக் கந்தசுவாமி கோயில் மட்டுமன்றி யாழ்ப்பாணச சைவரின் சமயக் கடைப்பிடிக ளும் நெறிமுறைகளும் பெருமபாதிப்புக்கு உள்ளாயின. இந்நிலை ஒல்லாந்தர் காலநதொடக்கம் (1658-1796) வரை நீடித்தது. ஓரளவு சமய சகிப்புத்தன்மை கொண்டிருந்த அவர்களின் காலத்திலே "1734ஆம் ஆண்டளவில் இனறுள்ள இடத்தில் (குருக்கள் வளவில்) சிறிய தொரு மடாலயமாகக் கோயில் மறுபிறப்பெடுததது. (ஆதாரம்:நல்லூர்க் கந்தசுவாமி கோயில்) மடாலயமாயிருந்த இதனை ஓடுவேய்ந்து ஓரளவு பெரிதாய் உருவாக்கியவர், இன்றைய அறங்காவலர் குமாரதாஸ்மாப்பாண முதலியரின் மூதையரான இரகுநாத மாப்பாண முதலியாராவார்.

**கோயிலின் வளர்ச்சி**

"நல்லூர்க் கந்தசுவாமி கோயிலிலே பூசைகள் முதலியன காலநேரம் தவறாது நடைபெறுகின்றன என்பது இக்காலததில் யாவரும் நன்கறிந்ததொன்று. எனினும் இத்தகைய சீரிய ஒழுங்கினை நடைமுறைக்குக் கொண்டு வர அல்லும் பகலும் அயராது தொண்டாற்றி வந்தவர் இப்போதுள்ள அறங்காவலரின் (1964 இல மறைந்த ஷண்முகதாஸ மாப்பாணமுதலியார்) தந்தையாரான சங்கரப்பிள்ளை இரகுநாதமாப்பாண முதலியார் அவர்களே என்பதை ஈண்டுக் குறிப்பிடுதல் வேண்டும்"

நல்லூர்க்கந்த சுவாமிகோயில் (பக்:28) ஷண்முகதாஸ் மாப்பாணர் தந்தை வழியில் மேலும் பல வகைகளிலே கோயிலை வளர்த்தார். 1964 இல் அவர் மறைய அவரின் இளவலான குமாரதாஸ் மாப்பாணமுதலியார் கண்ணினைக்காக்கின்ற இமைபோலக் கோயில் வளர்ச்சியிலே திரிகரணசுத்தியோடு ஈடுபட்டு ஆற்றிவரும் அரும் பணிகள அளப்பில. இவற்றால் ஆண்டுதோறும் புதுப்புது வனப்புடனும், புதுப்புது எழுச்சியுடனும் காட்சிதரும் ஆலயத்தில் என்றும் இளைஞனாய் அழகனாய் வீற்றிருந்து கந்தசுவாமி அருளாட்சி நடத்துவது சொற்களால் விபரிக்கும் தகையதன்று.

**முன்னோடிவழி காட்டி**

ஒரு காலத்தில் இரவு முழுவதையும் பகலாக்கிய வண்ணம் தேவதாசிகளின் நடனங்களும், வாண வேடிக்கைகளும், சண்டித்தனங்களும் போட்டா போட்டியுமாக ஆலய மஹோற்சவங்கள் நடந்துவந்தன. வழிபாட்டிற்கும் ஒழுங்குக்கும் பக்தியுணர்வுக்கும் முற்றிலும் முரணான வேடிக்கைகள் குளிக்கப் போய்ச் சேறு பூசியதாய் முடிந்தன. பிறசமயத்தவரின் ஏளனத்திற்கும் கண்டனத்திற்கும் உரியனவாய் மஹோற்சவங்கள் நடந்தமையால் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலர் முதலாய சமயப் பெரியார்கள் மனம் நொந்தும், அவர்களின் அறிவுரைகள் செவிடன் காதில் ஊதிய சங்கானதும் நீண்டதொரு துயர் நிறைந்த வரலாறாகும்.

இவ்வரலாற்றினை முறியடித்துக் குறித்த நேரத்தில் ஒரு நிமிடத் துளிகூட முந்தியோ பிந்தியோ இன்றிப் பூசைகளையும், பெருவிழாக்களையும் நாடாததி முன்னோடியாயும் பல கோயில்களுக்கு வழிகாட்டியாயும நல்லூர்க்கந்தசுவாமி கோயில விளங்குவதை யாவரும் அறிவர். மலையை நாடிச் செல்வது மகமதுவா, மகமதுவை நாடிச் செல்வது மலையா என்ற வகையில் மக்களின் நேர வசதி முக்கியமா அல்லது கோயில் நேரக் கட்டுப்பாடு முக்கியமா என்ற கேள்விகளை ஒரு சிலர் அண்மைக் காலத்திலும்கிளப் முறட்டு அவை அறங்காவலரின் முடிவினை எவ்வகையிலும் மாற்றாமை சிறப்பித்துக் கூறவேண்டுவதாகும். தனியாருடைமையா, பொதுமக்கள் உடைமையா என்று ஐயம் எழும் பொழுது ஜனநாயகயுகமாகிய இன்று பொதுமக்கள் உடைமை என்ற தெளிவே பெரும்பானமையரால் ஏற்கப்படுவது இயல்பே. ஆனால் இந்த இயல்புக்கு எதிரான தனியாருடைமையும் சில வேலைகளில் கூடிய நலங்களைத் தரலாம் என்பதற்கு நல்லூர் நிர்வாகத்தைச் சிறந்த எடுத்துக்காட்டாகக் கொள்ளலாம்.

தமிழகத்தில் உள்ள பிரமாண்டமான ஆலயங்களும் அவற்றின கட்டடசிற்ப ஓவியத் திறங்களும் தரிசிப்போருக்குப் பிரமிப்பை அளிப்பன. நல்லூர் கந்தசுவாமி கோயிலை அவற்றோடு ஒப்பிட முடியாது என்பதும் மறுக்கமுடியாத உண்மையே. ஆனால் ஆண்டு தோறும் இந்தக் கோயில் பெறும் விரிவாக்கமும் அந்த விரிவாக்கத் தினபினனணியில் அமைந்த கலையழகும், செயல் நேர்த்தியும் மிகுதியும் பாராட்டத்தக்கன என்பதற்கு ஐயமில்லை.

"என்றும் இளையாய்! அழகியாய்!" புலவர் போற்றும் பேரழகான முருகப்பெருமான் முத்துக்குமாரசுவாமியாய் ஆறுமுகனாய, வள்ளி தெய்வானை சமேதனாய், வேல் எனும் ஞானசக்தியாய் எழுந்தருளி உலாப்போகும் காட்சியின் பேரழகானது உள்ளங்களைக் கொள்ளை கொண்டு அடியார்களின் கண்களைவிட்டு அகலாதிருப்பது சொல்லில் அடங்காது. நித்தம் அழகான முத்தையன் தன்னைத் தரிசிப்போரின் சித்தத்தையும் நிறைத்து அதில அழியா அழகை நிலைநிறுத்துவதை என்னென்பது!

பல்லுயிரும் பல உலகும் படைத்தளித்துத்துடைக்கும் எல்லையறு பரம்பொருள் முன்னிருந்தபடியே இருப்பான் என்பது எம் நம்பிக்கை. ஆனால் அவனைப் புறத்திலே நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியாகத் தரிசிப்போருளாய் அக்குகையில் கையாளப்படும் புதுமைகளும், அப்புதுமைகளுக்கு மேலும் மேலும் மெருகிடும் வகையில் கையாளப்படும் நவன சாதனங்களும் பலப்பல. ஆண்டு தவறாது வெள்ளையடித்தல், வர்ணம் தீட்டுதல், தீபங்கள் விக்கிரகங்கள் மற்றும் பல்வகைக் கலங்கள் வர்ண மெருகூட்டல், வாகனங்கள், ஊர்திகள் என்பன துடைத்துப் பூச்சிட்டு புதியன போல் காட்சி தரச் செய்தல் என்பன நல்லூருக்கே உரிய தனிச் சிறப்புக்களாகும்.

இததனைக்கும் நாளாந்த அருச்சனைகளுக்கோ உருத்திராபிஷேகம், சண்முகார்ச்சனை, மஹோறசவங்கள் முதலியவற்றிற்கோ அறவிடப்படும் கட்டணத்தில் பல ஆண்டுகளாக எவ்வித மாற்றமும இல்லாதிருப்பதும் வியப்பிலும் வியப்பே. செல்வனாகிய கநதசுவாமியின் செல்வப் பெருககமும் அப்பெருக்கத்தின் புறவெளிப்பாடுகளும் எங்கிருந்து எவ்வாறு வருகின்றன என்பதைக் கண்டாரோ கேட்டாரோ எவரும் இலர். அவன் ஆட்டுவித்தால் ஆடாதார் யாரே.

வேல்ஸ் நகரிலே சிங்களவர் தொடககிய சுப்பிரமணிய சுவாமி கோயிலில் வெள்ளையர் காவி கட்டிய துறவிகளாய் முருகனைப் பூசித்து வடமொழியிலும், தமிழிலும் துதிகள்பாடி இங்கிலாந்து வாழ் சைவத் தமிழரை ஈர்க்குமளவிற்கு உலகளாவிய அப்பெருமான் லண்டனில் ஆர்ச்வே (Archway) என்ற இடத்திலே தமிழர் தொடக்கிய முதலா வது கோயிலிலே வீற்றிருந்து அருள்வதும் அவ்வாலயத்தில் நல்லூர் மஹோற்சவ நாள் இருபத்தைநதிலும் மஹோற்சவம் நிகழ்வதும் சிறப்பித்துக் கூறவேண்டுவன.

**சித்தர்கள், ஞானிகள், கவிஞர்கள் ஏந்திய சிவமைந்தன்**

நல்லூரான் திருவடியை நான்
நினைத்த மாத்திரத்தில்
எல்லாம் மறப்பேனடி கிளியே!
இரவு பகல் காணேனடி

என்பது தவஞானியும் சித்தருமான சிவயோக சுவாமிகளின் திருவாக்கு. அவரும் அவர் தம் ஞானகுருவாகிய செல்லப்பாச் சுவாமிகளும் சித்துக்களிலே சித்தியடைந்த இடம் நல்லூர்த் தேரடி என்பது யாவரும் அறிந்ததே. மணி பாகவதராய் நல்லூர் வர்து சுவாமி நாதத் தமிழபிரானாகி இறுதியில் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞானசம்பந்த பரமாசாரிய சுவாமிகள் நிலையடைந்து நல்லைத் திருஞான சம்பந்தர் ஆதனத்தை உருவாககியவரும் நல்லூர்க் கந்தனின் திருவருட்பார்வைக்கு இலக்கானவரே. சடையம்மா என்ற முருகபக்தை மடம் கண்டதும் நல்லூரானின் நல்லருளாலேயே இன்னும் எத்தனை எத்தனையோ அருளாளர் இலைமறை காயாய் அவன் அருளைக்கண்டும் வண்டினர் என்பதே உண்மை.

யாழ்ப்பாணத்தின் தலைசிறந்த சைவநெறியாளரும் கவியாளருமான மேலோர் பதினெட்டாம் நூற்றாண்டில் இருந்து இன்றுவரை நல்லூர்க்கந்தன் மீது பக்தி கனிந்து பாடிய பிரபந்தங்கள், கீர்த்தனைகள், திருப்புகழ், தனிப்பாடல்கள் எண்ணுக் கணக்கற்றவை. இந்தப் பாவானர் வரிசை இனியும் தொடரும்; பெருகும்.

**வெண்ணிலவில் ஒரு களங்கம்**

சைவ ஆலயங்களின் வரலாற்றிலே மேற்குறித்த பல காரணங்களாலும் தன்னிகரற்று விளங்கும் நல்லைக் கந்தனின் தீர்த்தோற்சவம் இளைஞர்களின் அட்டாதுட்டிகளால் அவன் அடியார் பலரையும் மனம் நோகவைத்துள்ளது. விழாக் காலங்களில் பக்திப் பரவசம் ஒரு புறமாகக் கேளிக்கைகள் களியாட்டங்கள், வீதித்தடைகளை மீறல்கள் என்பனவும் கொள்ளைகளும் இடம் பெறுவதும் துடைக்கவேண்டிய களங்கங்களாக உள்ளன.

**பணிவன்பான வேண்டுதல்கள**

முருகன் தமிழ்த் தெய்வ். தமிழால் வைதாரையும் வாழ வைப்போன். சுவாமி திருவிழா வருங்காலங்களில் வேத பாராயணத்தோடு கந்தரனுபூதி முதலாம் தமிழ்த் தோத்திரங்களும் ஒலிபரப்பப்படுவது நன்று என்பதும் வசத்த மண்டபப் பூசை இறுதியில் பண்ணொன்றைப் பஞ்சபுராணம் ஓதப்படுவது சிறப்பு என்பதும் அவற்றை எதிர்காலத்தில் கையாளல் வேண்டும் என்பதும் எமது பணிவான வேண்டுதல்கள்

**சீரி தாகிய செந்தமிழ் தந்தருள் பூரணன் அடிபோற்றி அருள் பெறபாரிலேயுறு பல் வகை அல்லலும் தீர நல் லைச் செழும்பதி சேர்மினே.**

-விபுலாநந்த அடிகள்

# வலம்புரியின் 4ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்புமலர்

மக்கள் வங்கி சங்கானைக்கிளை முகாமையாளரின்

## வாழ்த்துச் செய்தி



இடம்புரிகள் மத்தியிலே நிஜ ஒலிகளைப் பகர்ந்து நிற்கும் வலம்புரியே. உன் ஓசை தினமும் எட்டுத் திக்கெங்கும் தொட்டுவிட, வாராந்தம் சங்குநாதம் முழங்கிடத் தமிழ்த்தாய் வியந்தாள் பத்திரிகைத்துறையில் நான்காவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடுவதில் தமிழுலகு பூரிக்கின்றது. இப்பத்திரிகை வளர்ச்சி வருங்காலங்களிலும் நாதம் முழங்கிட ஆசிகள் பகர்ந்திடுகின்றேன்.

மக்கள் வங்கி (சங்கானைக் கிளை) — பொன். அச்சுதம்பிள்ளை, முகாமையாளர்

ஊடகவியலாளர் சங்க தலைவரின்

## வாழ்த்துச் செய்தி



யாழ். குடாநாட்டில் இருந்து நெருக்கடிகள் பலவற்றிற்கு முகம் கொடுத்து உண்மைச் செய்திகளை நடுநிலையுடன் உடனுக்குடன் வெளியிடுவதில் வலம்புரி என்றுமே பின்நின்றதில்லை. தமிழர்களின் கலை கலாசார பண்பாட்டு விழுமியங்களை தாங்கியபடி தமிழர்களின் தேசியப் பிரச்சினைக்கு முன்னுரிமை கொடுத்தும் கடந்த நான்கு ஆண்டு காலமாக வலம்புரி செய்தி வெளியிட்டு வருகிறது.

தொடர்ந்தும் வலம்புரி தனது நியாயமான கோட்பாட்டின் அடிப்படையில் நவீனயுகத்திற்கு ஏற்ப செய்திகளை வெளியிட வேண்டும் என எமது சங்கம் சார்பாக வாழ்த்துகிறேன்.

யாழ்ப்பாண ஊடகவியலாளர் சங்கம். — வே.தவச்செல்வம், தலைவர்


நான்காவது அகவையினைப் பூர்த்திசெய்யும் வலம்புரி வையகம் முழுவதும் வலம்வர வாழ்த்துகின்றோம்.

ஓடர் நகைகளை குறித்த தவணையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

**கார்த்திகா நகைப் பூங்கா**

கீரிமலை வீதி, பண்டத்தரிப்பு.

நான்காவது ஆண்டைப் பூர்த்திசெய்யும் வலம்புரியை வாழ்த்துகின்றோம்

சகல விதமான வீடியோ பிரதிகள் CD பிரதிகள் அனைத்து வகையான புதிய பழைய வீடியோ பிரதிகள் யாவற்றையும் பெற்றுக்கொள்ள

**சந்தோஷ் வீடியோ விஷன்**

பிரதான வீதி, சங்கானை.

நான்காவது ஆண்டைப் பூர்த்திசெய்யும் வலம்புரி நாளிதழுக்கு எமது உள்ளம் கனிந்த வாழ்த்துக்கள்

**உதயன் கட்டடப்பொருள் விற்பனை நிலையம்**

59, பிரதான வீதி, சங்கானை.

நான்காவது ஆண்டினை நிறைவு செய்கின்ற வலம்புரி என்றென்றும் வாழ்க

சங்கானை பிரதேச செயலகத்திற்கு முன்பாக அமையவுள்ள

**மேரி பல்பொருள் வாணிபம்**

புத்தாண்டில் புதுப்பொலிவுடன் தனது சேவையை ஆரம்பிக்கின்றது இத்தருணம் நண்பர்கள், வாடிக்கையாளர்கள் அனைவரும் நிகழ்வில் கலந்து சிறப்பிக்குமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

உரிமையாளர்:- எ.வில்சன்

சகலவிதமான மங்கள வைபவங்களுக்கும் பந்தல்சேவை, பாத்திரவகைகள், கதிரைகள் மற்றும் வீடியோப்படம் பிடித்திடவும் நாடவேண்டிய ஒரேயிடம்

**குருபோட்டோ அன் வீடியோ**

சங்கரத்தை, வட்டுக்கோட்டை.

உங்கள் திருமண வைபவங்களிற்கும் மற்றும் மங்களகரமான வைபவங்களிற்கும் எல்லா வகையான உணவு வகைகளைப் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய இடம்

**K.P. கேற்றறீஸ் சேவிஸ்**

மற்றும்

யாழ் - கொழும்பு தினசரி சொகுசு பஸ் சேவையும்

சங்கரத்தைச் சந்தி, வட்டுக்கோட்டை. தொ.பே. 077-7111725

ஐந்தாம் ஆண்டில் காலடி பதிக்கும் வலம்புரிக்கு எமது நல்வாழ்த்துக்கள்

**இ.ச.பேரம்பலம் சக நிறுவனம்**

50, 52, கஸ்தூரியார் வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 222 2988, 222 3096
FAX:- 222 2368

வலம்புரிப் பத்திரிகையின் பணி மேலும் சிறக்க எமது உளங்கனிந்த வாழ்த்துக்கள்

**கஜமுகன் காட்வெயர்ஸ்**

147, 149, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P:- 021 222 2833

நான்காவது ஆண்டினை நிறைவு செய்து
ஐந்தாவது ஆண்டில்
காலடி பதிக்கும்
'வலம்புரி'ப் பத்திரிகைக்கு
எமது நல்வாழ்த்துக்கள்.

காலத்தால் அழியாத தங்க நகைகளை
அசல் ௨௨ கரட்டில்
செய்து பெற்றுக்கொள்ள
நம்பிக்கையுடன் நாடவேண்டிய இடம்

# நியூ லலிதா நகை மாடம்

191, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.







# NEW LALITAA JEWELLERS

191, Kasthuriar Road, Jaffna.

[C/6888]

# வலம்புரியின் 4ஆம் ஆண்டு நிறைவுச் சிறப்புமலர்

## ஐந்தாவது அகவையில் காலடி எடுத்துவைக்கும் வலம்புரி நீடு வாழி

தினம் கையில் வலம்புரி! திக்கெங்கும் வலம்புரி!
மனம் நிறைக்கும் வலம்புரி! மக்கள் உள்ளத்தில் வலம்புரி!
சினம் போக்கும் வலம்புரி! சிந்திக்கவைக்கும் வலம்புரி!
வளம் போற்றும் வலம்புரி! வாழவைக்கும் வலம்புரி!

இன்றுஒரு தகவல் இராசிபலன் தினசரி தியானம்
என்றும் புதுமை மௌனத்தின் தேடல் கவிதைக் கலசம்
சென்றும் அழியாத ஞானக்கதிர் சேவைதான் எத்தனை
வென்றும் தேற்றியும் வியாசர் பதில்கள் சிந்தும்

நாதம் காதோடு இசைக்க நா சுவைக்க சமையல் குறிப்பும்
தேசம் காக்க சிறுவர் அரங்கம் எல்லோரையும் சிந்திக்கவைக்கும்
பாசம் பெருக பன்னாட்டு விளையாட்டுச் செய்திகள்
நாசம் போகாதிருக்க குருஷேத்திரம் தேடும் தேடல்கள்

வாலிபர் யுவதிகள் வாசிக்கும் சினிமா சிதறல்
வேலிகள் இன்றி பலரையும் வேலியாக்கும் குறுக்கெழுத்துப் போட்டி
சாலையில் சந்திக்காமல் சந்திக்கும் பேனா நண்பர்கள்
ஓலையில் எமக்கு ஒழுங்காக அமையும் வலம்புரி -நாதமே நீடுவாழி

கவி ஆக்கம் — சி.சச்சிதானந்தம்
சச்சியா இரும்பகம்
பிரதான வீதி
வட்டுக்கோட்டை


## டிலா வீடியோ அன் போட்டோ

டிஜிற்றல் முறையில் வீடியோப் படம் பிடிப்பதற்கும் அதனைக் கனனி முறையில் தொகுத்து வழங்குவதற்கும் அத்துடன் வெளிப்புறப் படப்பிடிப்பாளர்களுக்கும் கனனி மூலம் தொகுத்து வழங்கப்படும்.
இன்றே நாடுங்கள்

**டிலா வீடியோ அன் போட்டோ**

பிரதான வீதி, வட்டுக்கோட்டை

## நடுநிலை தவறாது மக்களுக்கு சேவையாற்றி மேன்மேலும் வளர வாழ்த்துகின்றோம்

நுகர்ச்சிச் சேவை : புடவை விற்பனை
உணவு வகைகள் : பாண்,பணிஸ் வகைகள்
எரிபொருள், போட்டோ பிரதிகள், கட்டடப் பொருட்கள், தொலைபேசி, பாரஊர்தி, லாண்ட் மாஸ்ரர்

ஆகிய சேவைகளை நீங்கள் பெற்றுக்கொள்ள

**சங்கானை ப.நோ.கூ.சங்கம் (வ.து) சங்கானை**

க.இராசதுரை
பொது முகாமையாளர்

உள்நாட்டு வெளிநாட்டு அழைப்புகள் உடனுக்குடன் பெற்றுக் கொள்ளவும் மற்றும் சகலவிதமான இலத்திரனியல் உபகரணங்களும் மின்சார உபகரணங்களும் குளிர்சாதனப் பெட்டிகளும் உத்தரவாதத்துடன் திருத்திக் கொள்ளவும் நாட வேண்டிய இடம்

**வட்டு தொலைத்தொடர்பகம்**

பிரதான வீதி, வட்டுக்கோட்டை

## யாழ். மண்ணில் புதிய அத்தியாயத்தின் உதயம் சக்தி தொலைக்காட்சி

இப்போது தங்குதடையின்றி ஒளிபரப்பாகின்றது சக்தி T.V பலவிதமான புதுமை நிகழ்ச்சியுடன் உங்கள் நிகழ்ச்சிகளிலும் விளம்பரங்களிலும் MTV ஸ்தாபனத்துடன் இணைந்து செயற்படுகின்றார்கள் இலங்கையில் 32 வருடங்கள் அனுபவம் பெற்ற யோ.எகட்டன் செனிற் மாக்கட்டிங் அட்வடேஸ்மன் சிஸ்ரம் ஸ்தாபனத்தார். உங்கள் விளம்பரங்கள் சக்தி T.V யில் இடம் பெற வேண்டுமானால்

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

**சக்தி T.V, சக்தி FM முகவர்கள்**

யோ.எகட்டன் செனிற் மாக்கட்டிங் அட்வடேஸ்மன் சிஸ்ரம்
சுண்டுக்குளி மகளிர் கல்லூரி முன்பாக, யாழ்ப்பாணம்.

தொலைபேசி
0777 032188. 021 222 7227

தொலைநகல்
021 222 7227

பிரத்தியேக விளம்பரதாரரும் வீடியோ விளம்பர படப்பிடிப்பாளர்களும் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:-

**P. தேவா**

மூளாய் வீதி, வட்டுக்கோட்டை.
தொலைபேசி:- 077 6143541

(C/6990)

# உடன்படிக்கையின் பின்னர் தமிழ் நாட்டிலுள்ள 7500 அகதிகள் நாடுதிரும்பினர்

(கொழும்பு)

பிரதமர் ரணில்விக்கிரம சிங்கவுக்கும் தமிழீழ விடுதலைப்புலிகளின் தலைவா வே.பிரபாகரனுக்கும் இடையே புரிந்துணர்வுஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டதைத் தொடர்ந்து.

தமிழக அகதிமுகாம்களில் தங்கி வாழ்ந்து வந்த சுமார் 7ஆயிரத்து500க்கும் மேற்பட்ட அகதிகள் நாடு திரும்பியுள்ளனர்.

இவர்கள் அனைவரும் விமானம் மற்றும் படகுகள்மூலம் நாடுதிரும்பியுள்ளதாக புனர்வாழ்வு புனரமைப்பு மற்றும் மீள்குடியேற்ற அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அவ் வறிக்கையில் மேலும், கடந்தகால யுத்த அனர்த்தங்களினால் சுமார் 88 ஆயிரத்துக்கும் அதிகமான மக்கள் தமிழகம் சென்றுள்ளனர்.

இவர்களில் 66ஆயிரத்துக்கும் அதிகமானோர் தமிழ்நாட்டில் உள்ள 111அகதி முகாம்களில் வாழ்ந்து வருகின்றனர். ஏனைய 22ஆயிரம் பேரும் தமிழ் நா டிலுள்ள ஏனைய பிரதேசங்களிலும, விடுதிகளிலும் வாழ்ந்து வருகின்றனர்.

இங்குள்ள அகதிகளில் சுமார் 2ஆயிரத்திற்கும் அதிகமானோர் நாடுதிரும்ப ஆவலாக உள்ளனர்.

இதற்கிடையில் தமிழகத்தில் உள்ள இலங்கை அகதிகளை நாட்டுக்கு திருப்பி அழைப்பது குறித்து புனர்வாழ்வு புனரமைப்பு மீள் குடியேற்ற அமைச்சு தமிழ் நாடு அரசுடனும், மத்திய அரசுடனும் பேச்சு வார்த்தை நடத்தி வருவதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(தி-61)

# பொலிஸ்மா அதிபராக இந்திரா டி. சில்வா நியமனம்

(கொழும்பு)

27வது பொலிஸ்மா அதிபராக இந்திரா டி. சில்வா நேற்றுமுதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை சபாநாயகர் ஜோசப் மைக்கல் பெரேரா தலைமையில் கூடிய அரசியல் யாப்புப் பேரவை இதற்கான சிபார்சுகளைச் செய்தது.

முன்னாள் பொலிஸ்மா அதிபர் ரி.ஈ.ஆனந்தராஜாவின் ஓய்வைத் தொடர்ந்து கடந்த இரு மாதங்களாக இப்பதவி வெற்றிடமாக இருந்து வந்தது.

இதனைத் தொடர்ந்து இந்திரா டி. சில்வா பிரதிப் பொலிஸ்மா அதிபராக நியமிக்கப்பட்டார்.

இவரை பொலிஸ்மா அதிபராக நியமிக்க ஜனாதிபதி சிபார்சு செய்திருந்த போதிலும், சிரேஷ்டத்துவம் காரணமாக இப்பதவி நியமனத்தில் இழுபறிநிலை ஏற்பட்டு வந்தது தெரிந்ததே.

(தி-61)

# ஊடகத்துறை சட்டமூலத்தில் சில வரையறைகள் கொண்டுவரத் தீர்மானம்

(கொழும்பு)

ஊடகத்துறை சட்டமூலத்தில் சில வரையறைகளை கொண்டு வருவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகள் பலவற்றில் ஊடகத்துறைச் சட்டங்களுக்கு எவ்வித கட்டுப்பாடுகளும் இல்லை.

ஆனால், நாட்டிலுள்ள ஊடகவியலாளர்கள் தமது கடமைகளை ஒழுங்காகச் செய்வதற்கு பல இடையூறுகள் ஏற்பட்டு வருகின்றன.

இதனால், பாராளுமன்றத்தில் ஊடகத்துறை குறித்து சில சட்டங்களை கொண்டுவருவதன் மூலம் இதனை நீக்க முடியும் எனவும் எதிர்பார்க்கப்படுகிறது.

(தி-61)


## யாழ்ப்பாணம் மாநகர சபை வரவு செலவுத்திட்டம் 2004

2004ம் ஆண்டுக்கு கிடைக்கக் கூடிய மாநகர வருமான மதிப்பீட்டையும் உத்தேச செலவின விபரங்களையும் உள்ளடக்கிய மாநகர சபையின் வரவு செலவுத்திட்டம் 2003ம் ஆண்டு மார்கழி மாதம் 20ம் திகதி தொடக்கம் ஏழு நாட்களுக்கு மாநகர சபை அலுவலகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்படுமென மாநகர சபை கட்டளைச் சட்டத்தின் (அத்தியாயம் 252, 212) பி பிரிவின் பிரகாரம் இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

மாநகர சபை,
யாழ்ப்பாணம்.
19. 12. 2003.

C/6996


# உலகத் தமிழ்க் கவிஞர்கள் கையேடு வெளியீடு

(யாழ்ப்பாணம்)

புதுவை மொழியியல் பண்பாட்டு ஆராய்ச்சி நிறுவனம், இந்தியத் தமிழ்க் கவிஞர்கள் மாநாடு ஒன்றினை நடத்தத் திட்டமிட்டுள்ளது.

இம் மாநாட்டினையொட்டி உலகத் தமிழ்க் கவிதை, உலகத் தமிழ்க் கவிஞர்கள்-ஒரு கையேடு ஆகிய இரண்டு தொகுப்பு நூல்கள் வெளியிடப்படவுள்ளன.

இவற்றுக்கு ஆக்கங்களை அனுப்ப விரும்புவோர், தாம் ஆக்கிய ஐந்து கவிதைகளை தட்டச்சில் பதித்து பத்துப் பக்கங்களுக்கு மேற்படாமல் இருக்குமாறு அமைத்து அவற்றுடன் தங்கள் வாழ்க்கைக் குறிப்பையும் (பெயர், பிறந்தநாள், இடம பெற்றோர் குடும்ப விபரம், கல்வித் தகுதி, வெளியிட்ட கவிதை நூல்கள், சிறப்புத் தகவல்கள்) என்பனவற்றுடன் நிழற்படம் ஒன்றையும் இணைத்து இம்மாத இறுதிக்குள் இயக்குநர், புதுவை மொழியியல் பணபாட்டு ஆராய்ச்சி நிறுவனம், 112, காமாட்சியம்மன் கோவில் வீதி, புதுச்சேரி 605 001, இந்தியா என்ற முகவரிக்கு அனுப்பிவைக்குமாறு கேட்கப்பட்டுள்ளது.

(உ-3,7)

## கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைத்துறையின் அனைத்து வருட மாணவர்களுக்கான கலந்துரையாடல் ஒன்று எதிர் வரும் 22ஆம் திகதி திங்கட் கிழமை மு.ப.11.00மணிக்கு நுண் கலைத்துறையின் நடேசர் அரங்கில் இடம்பெற உள்ளது.

(உ-18)

# ஆஸி.அணியை பின்தள்ளி விட்டு அந்த இடத்தைப் பிடிக்க முடியும்

## இந்திய அணித்தலைவர் கங்குலி நம்பிக்கை

உலக டெஸ்ட் கிரிக்கெற் அரங்கில் முதன்நிலை வகிக்கும் அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணியை அந் நிலையில் இருந்து பின்தள்ளுவதற்கான முழு ஆற்றலும் இந்தியாவிற்கு இருப்பதாக இந்திய கிரிக்கெற் அணித்தலைவர் சௌரவ் கங்குலி தெரிவித்துள்ளார்.

அண்மையில் அவுஸ்திரேலியாவின் அடிலைட்டின் ஓவல் மைதானத்தில் நடைபெற்று முடிந்த இரண்டாவது டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலிய அணியை 4விக்கெற்றுக்கள் வித்தியாசத்தில் அதன் சொந்த மண்ணிலேயே தோற்கடித்ததன் பின்னர் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின போதே கங்குலி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

கங்குலி தொடர்ந்தும் கருத்துத் தெரிவிக்கையில்,

அவுஸ்திரேலிய கிரிக்கெற் அணிக்கு அடுத்த படியாக இந்திய கிரிக்கெற் அணியே சிறந்த அணி என்பதை முன்னர்தான் கூறியிருந்தேன. அவுஸ்திரேலியாவில் தற்போது நடைபெற்று வரும் 4போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரையும் வெற்றிகொள்ள முடியுமானால் உலகின் தலைசிறந்த கிரிக்கெற் அணி என்ற பட்டத்தினை இந்தியாவினால் சூடிக்கொள்ள முடியும். என்று தெரிவித்துள்ளார்.

சர்வதேச கிரிக்கெற் பேரவையின் தற்போதைய டெஸ்ட் கிரிக்கெற் அணிகளுக்கான தரப்படுத்தலில் தற்போது இந்திய அணி 6வது இடத்திலேயே உள்ளது குறிப்பிடத்தக்கது.

இதேவேளை தங்களது சொந்த நாட்டில் தங்களது அணியை எதிர் அணியினால் வெற்றி கொள்ள முடிவது என்பது மிக கடினமான என்ற போதிலும், வெளிநாடுகளில் தமது அணியானது திறமைகளை வெளிக் காட்டத் தவறி விடுகின்றமையும் கங்குலி ஒப்புக்கொண்டுள்ளார்.

மேலும் கடந்த இரண்டு வருடங்களாக மிகச் சிறப்பான வெற்றிகளை ஈட்டி வருகின்ற இந்திய அணியானது, அவுஸ்திரேலியாவிற்கு எதிரான இந்த டெஸ்ட் தொடரை வெற்றி கொள்வதற்கு இந்திய வீரர்கள் மிகச் சிறப்பாக விளையாட வேண்டிய நிலையில் இருப்பதாகவும் கங்குலி தெரிவித்திருத்தமை இங்கு குறிப்பிடத்தக்கது. (உ-68)

# ஜேர்மனியின் முன்னாள் கால்பந்தாட்ட அணித்தலைவர் ஹங்கேரியின் பயிற்றுநராகிறார்

ஜேர்மனியின் முன்னாள் கால் பந்தாட்ட அணியின் தலைவரும் ஜேர்மனியை 1990ஆம் ஆண்டு உலகக் கிண்ணத்தை வென்றெடுக்க வழி நடத்தியவருமான லோதர் மத்தாயஸ ஹங்கேரியின் கால்பந்தாட்ட பயிற்றுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

மேற்கு ஜேர்மனிக்காகவும், பின்னர் ஜேர்மனிக்காகவும் 150சர்வதேச கால்பந்தாட்டப் போடடிகளில் விளையாடியுள்ள 42வயதுடைய லோதர் மத்தாயஸ் இரண்டு வருடத்திற்கான ஒப்பந்தத்தின் மூலம் ஹங்கேரியின் கால்பந்தாட்ட பயிற்றுநராக செயல்படவுள்ளார்.

இது தொடர்பான பேச்சு வார்த்தைகள் முடிவடைந்த நிலையில் மிக விரைவில் இவருடன் ஒப்பந்தத்தில் கைச்சாத்திடப்படும் என ஹங்கேரியின் கால்பந்தாட்ட சம்மேளனம் அறிவித்துள்ளது.

மேலும் மிகச் சிறந்த அனுபவம் வாய்ந்த முன்னாள் வீரரான லோதர் மத்தாயஸ் ஹங்கேரியின் கால்பந்தாட்ட அணிக்கு மிகப் பொருத்தமான பயிற்றுநர் என ஹங்கேரி கால்பந் தாட்ட சம்மேளனம் தெரிவித்துள் ளது. (உ-68)

# பன்முக ஆளுமை....

ஈழத்தில் தொடர்ந்து வந்த மரபு வழிக்கல்விப் பரப்பினை ஒருங்கிணைத்து நிறுவன ரீதியான ''அமைப்புக்குள்'' கொண்டு வர இவ்விரு நிறுவனங்களும் பெரிதும் உதவின. தமிழிலும் வடமொழியிலும் புலமைமிக்கவரான ஐயரவர்கள் இவ்விரு நிறுவனங்களின் மூலம் மொழிப் புலமையையும் இரசனையையும் வளர்க்க வழிகோலினார். ஐயர் வகித்த பதவி (வித்தியாதரிசி) இந்நிறுவனங்களுக்கு உதவி நன்கொடை பெறும் விடயங்களில் வெற்றியளித்தது என்றே கருதவேண்டும். தான் பதிப்பித்த வசந்தன் கவித்திரட்டினை அப் போதைய தேசாதிபதி சேர். அன்றூ காஸ்டிக்கொற் அவர்களுக்கு உரிமையாக்கினார். இதிலிருந்து அரச செல்வாக்கு ஐயருக்குக் கணிச மான அளவு இருந்திருக்கும் என எண்ணமுடிகின்றது. தமது அரசி யல் செல்வாக்கினை இந்த இரு நிறுவனங்களின் வளர்ச்சிக்கும் ஐயர் பயன்படுத்தினார் எனக் கரு தலாம்.

யாழ்ப்பாணம் ஆரிய திராவிட பாஷாவிருத்திச் சங்கம் 1921 ஆம் ஆண்டு ஐப்பசி மாதம் 17ஆம் திகதி நிறுவப்பட்டது. இந்த நிறுவனம் பற்றிய ஆய்வுகள் தனியே செய்யப்பட வேண்டியவை.

சுன்னாகம் பிராசீன பாடசாலை 1920ஆம் வருடமளவில் நிறுவப்பட்டது எனக் கூறப்படுகின்றது. இப் பாடசாலையின் தலையாசிரியராக வித்துவ சிரோமணி கணேசையர் நியமிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. பிராசீன பாடசாலையில் சமஸ்கிருதம் கற்பிப்பதற்காக இந்தியாவில் இருந்து பிரம்மஸ்ரீ சிதம்பர சாஸ்திரியவர்களை வரவழைத்து நியமித்தமையும் சதாசிவ ஐயரின் ஆளுமையை புலப்படுத்துகின்றது.

சதாசிவ ஐயரின் முக்கியமான பணிகளில், அவரை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்த கலாநிதியையும் குறிப்பிட வேண்டும். ''கலையாக்கம் கருதிய மும்மாத வெளியீடாகக் கலாநிதி (1942ஆம் ஆண்டு தொடக்கம்) வெளிவந்தது. ஈழத்துத் தமிழ் ஆய்வுச் சஞ்சிகைகளிலேயே கலாநிதிக்கும் சிறப்பானதோர் இடமுண்டு.

ஆசிரியர்களுக்காக "ஆசிரிய போதினி" என்னும் சஞ்சிகையையும் ஐயர் சிறிது காலம் நடாத்தினார் என்று அறிய முடிகின்றது.

இலக்கியம், இலக்கணம், சமயம் பற்றிய பல கட்டுரைகளையும் கவிதைகளையும் அவ் வப்போது ஐயரவர்கள் எழுதியுள்ளார்கள்.

ஈழத்துத் தமிழ் இலக்கிய வரலாற்றிலே பதிப்பாசிரியராகவும், பத்திரிகையாசிரியராகவும் ஆய்வாளனாகவும் மொழி பெயர்ப்பாளனாகவும், கவிஞராகவும் வாழ்ந்து மறைந்த முகாந்திரம் தி.சதாசிவ ஐயரைப் பற்றிய ஆய்வு நூலொன்று வெளிவர வேண்டுமென்று அவாவுறுகின்றோம்.□

# விளையாட்டுச் செய்திகள்

# இந்திய-பாகிஸ்தான் முறுகலுக்கு கிரி.போட்டி மூலம் முடிவு

## பாக்.கிரி. சபை நம்பிக்கை

இந்திய-பாகிஸ்தான் கிரிக்கெற் அணிகளுக்கிடையே நிலவிவரும் முறுகல் நிலை அடுத்த ஆண்டு இடம்பெறவுள்ள போட்டித் தொடரோடு முடிவுக்கு வரும் என பாகிஸ்தான் கிரிக்கெற் சபையின் புதிய தலைவர் சாஹேரியர் கான் தெரிவித்துள்ளார்.

மேற்படி போட்டித் தொடரானது இரு நாடுகளுக்கும் இடையிலான சமாதான முயற்சிகளுக்கு மேலும் உந்துசக்தியாக இருக்கும் என சகல தரப்பினராலும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்திய-பாகிஸ்தான் நாடுகளுக்கிடையே ஓர் உறவுப் பாலமாக கிரிக்கெற் விளங்க முடியும் இந்த வகையில் அடுத்த ஆண்டு முற்பகுதியில் இரு நாட்டு அணிகளும் பாகிஸ்தானில் மோதவுள்ளமை ஒரு வரவேற்கத்தக்க முன்னேற்றகரமான செயற்பாடாக அமைந்துள்ளன என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பாகிஸ்தான் முன்னாள் கிரிக்கெற் சபைத் தலைவர் ஜெனரல் தாிக்ஸியா ஊழல் விவகாரம தொடாபாக இராஜினாமாச் செய்ததை அடுத்தே தற்போது அதன் புதிய தலைவராக சாஹேரியர் கான நியமிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (உ-18)

நயனொடு ஈன்று நன்றிபயக்கும் பயன் ஈன்று பண்பின் தலைப்பிரியாச் சொல்
- குறள்

# வலம்புரி

## பத்திரகைப் பணி

ஓர் சமூகத்தை நெறிப்படுத்துவதில் பத்திரிகைகளின் பணி மிக முக்கியமானது. சமூக விழுமியங்களையும், மனித நேயத்தையும் பேணிக் காப்பதில் பத்திரிகைகள் நேரிய பாதையில் செயற்படுவது அவசியமாகும்.

அவ்வகையில் இன்று தனது நான்காவது ஆண்டை நிறைவு செய்து கொள்ளும் வலம்புரி, தனது பணியை நடுவுநிலையோடும், மனச் சாட்சிக்கு அமைவாகவும் செய்து வந்துள்ளது என்பதையிட்டு மகிழ்வடைகின்றோம்.

ஓர் பத்திரிகையாளனின் பேனா கூரியவாளைவிடக் கூர்மையும், வீரியமும் மிக்கது. இது உலக வரலாற்றின் பட்டறிவில் அறியப்பட்ட உண்மை. பத்திரிகையாளரின் பேனாக்கள் மக்கள் ஆட்சியை நிலைநாட்டிய வரலாறுகள் பல உண்டு. அதேபோல் ஜனநாயக உரிமைகள் புதைகுழிக்குள் வீழ்த்தப்படுவதற்கும் பத்திரிகைகள் காரணமாக இருந்துள்ளன என்பதை எளிதில் மறுத்துவிட முடியாது.

ஓர் மக்கள் சமூகத்தில் விழிப்புணர்வை ஏற்படுத்தவும், அறிவியலை வளர்க்கவும் பத்திரிகைகளால் தான் முடியும் அதேவேளை ஓர் மனித சமூகத்தின் அடிப்படை கலாசார விழுமியங்களையே தகர்த்து, மக்களை மாக்களாக மாற்றும் வல்லமையும் பத்திரிகைகளுக்கு உண்டு.

இவ்வாறு ஆக்கத்தையும் அழிவையும் தரக்கூடிய பத்திரிகைகளின் பணி கூரிய வாளில் நடப்பதைப்போன்றது. பேனாவைத் தூக்கிவிட்டால் எதையும், எவ்வாறும் எழுதலாம் என்ற உணர்வு மனிதநேயத்தையே அழித்துவிடவல்லது. இந்த உலகின் இயக்கம் அனைத்திற்கும் காரணமாக இருக்கக் கூடிய இறைபரம்பொருளை ஒரு கணம் எண்ணிப்பார்ப்பது மிகவும் அவசியமானதாகும். தர்மம் - நீதி என்ற உயரிய கோட்பாடுகளைக் கடைப்பிடிக்காத எந்தப் பத்திரிகையாலும் நலிந்து போன மக்களுக்கு உதவி செய்துவிட முடியாது. மாறாக அப்பத்திரிகைகளால் மக்களுக்கு அநீதியே இழைக்கப்படும். இதுவே நிஜம். இந்த உண்மையை வலம்புரி உணர்ந்து தனது பணியை தர்மத்தின் வழியில் முன்னெடுத்துச் செல்கிறது.

அதன் காரணமாக பல்வேறு நெருக்கடிகளுக்கு மத்தியிலும், தனது இருப்பை நிலைநிறுத்தியுள்ளது. பத்திரிகை - பத்திரிகையாளன் என்றால், எழுதுகோலை எடுத்து விட்டால் எதையும் எழுதிவிட முடியும் என்ற சிந்தனைக்குச் சிறிதேனும் இடம் கொடாமல் - நடுவுநிலை தவறாமல - பக்கசார்பின்றி, இனத்துவம், தேசியம், மொழி, சமயம் என்ற முழுமைக்கும் உரிய இடமளித்து செயற்படுகின்றது.

யுத்தத்தின் கொடூரம் உச்சம்பெற்ற காலத்தில் ஆரமபிக்கப்பட்ட வலம்புரி தமிழ் மக்கள் படும் இன்னல்களை வெளிக்கொணரும் பணியில் தன்னை அர்ப்பணித்துள்ளது. அதனைத் தொடரவும் உறுதிபூண்டுள்ளது.

# "டெங்குக் காய்ச்சல்" வருமுன் காப்போம்

தற்போது யாழ் குடாநாட்டில் மழைபெய்து ஓய்ந்துள்ளது ஆனால், நுளம்புப் பெருக்கம் அதிகமாகக் காணப்படுகின்றது. நுளம்புப் பெருக்கத்திற்கு நீர் அவசியமானதொன்றாகும். நீர்த்தேக்கமின்றி ஒருகாலமும் நுளம்பு பெருக்கமடையமாட்டாது. மழை ஓய்ந்துள்ளபோதும் எமது சூழலிலுள்ள சிறு சிறு பாத்திரங்களில் தேங்கி நிற்கும் மழைநீரானது நுளம்புப் பெருக்கத்திற்குச் சாதகமாக அமைகின்றது. இவ்வாறு சிறு பாத்திரங்களில் தேங்கும் மழைநீரில் டெங்குக் காய்ச்சலைப் பரப்பும் "ஈடிஸ" வகை நுளம்புகளே பெருக்கமடையும்.

"ஈடிஸ்" வகை நுளம்புகளின் எண்ணிக்கை அதிகரிக்கும்போது நோயின தாக்கமும் அதிகரிக்கும் என்பதே உண்மை (இயல்பு) நோய்க் கட்டுப்பாட்டுச் செயற்பாட்டில் சுகாதாரப் பகுதியினரின் ஆலோசனைகளை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நோய் நிலையைக் கட்டுப்படுத்தலாம்.

மூன்று நிலைகளில் தோன்றும் "டெங்குக்காய்ச்சலானது" அபாயகரமானது மட்டுமன்றி, மரணத்தை விளைவிக்கக்கூடியதுமாகும். இவ்வகை நுளம்புகள் காலை 07-10 மணிவரையும் மாலை 03-06 மணிவரையும் மனிதரைக் கடித்துக் குருதியை உறிஞ்சும் தன்மையது. இந்த நேரத்தில் நுளம்புக் கடியில் இருந்து பாதுகாத்துக்கொள்வது மிகமுக்கியமானதொன்றாகும்.

ர் டெங்கு நோயை ஒழிக்க சாத்தியமான காரியம்தான் என்ன?

- இந்நுளம்பினம் பெருகக்கூடிய இடங்களை இனங்கண்டு, இவற்றை இல்லாது ஒழித்தலே மிகச்சிறந்த முறையாகும்.

ர்ர் "ஈடிஸ்" நுளம்பு பெருகும் இடங்கள் எவை?

இளநீர்க் கோம்பைகள், சிரட்டைகள், கைவிடப்பட்ட ரயர்கள், கூரைகளில் போடப்படும் ரயர்கள், பிளாஸ்ரிக் பாத்திரங்கள, போத்தல்கள், வீட்டின் முகப்பிலுள்ள பிளேற் (**Sun Shade Hood**) நீண்டநாள் கழுவப்படாத தண்ணீர்த் தொட்டிகள், சைக்கிள் திருத்தும் நிலயங்களில் தொங்கவிடப்பட்டுள்ள பாவிக்காத ரயர்கள், வாழைப் பூவில் இருந்து உதிர்ந்த மடல்கள், தாழ்வாரத்தில் உள்ள ஆட்டுக்கல், மேசைக்கால்களின் அடியில் வைக்கப்படும் நீர் நிறைந்த பாத்திரங்கள், மரங்களில் உள்ள பொத்துக்கள், மிருகங் களின் கால் குழம்பினால் ஏற்படும் குழிகள் ஆகியவற்றில் தேங்கும் மழைநீர்.

☞ டெங்குக் காய்ச்சலைத் தடுப்பது எப்படி?

நுளம்புக் கடியில் இருந்து பாதுகாத்தல்.

நுளம்புப் பெருக்கத்தைத் தடை செய்தல்.

☞ நுளம்புக் கடியில் இருந்து பாதுகாப்பது எப்படி?

☞ பகல் நேரத்தில் இவ்வகை நுளம்பு கடிப்பதனால் காரியாலயம், பாடசாலை, வீடு ஆகிய இடங்களில் முழுநீள ஆடை அணிதல் வேண்டும்.

☞ நுளம்புத்திரி, புல்லெண் ணெய், புகையூட்டல் ஆகியன பாவித்தல்.

☞ வைத்தியசாலைகளில் சிகிச்சை பெறும் நோயாளிகள் நுளம்புவலை, நுளம்புத்திரி, பாவிப்பதன் மூலம் ஏனைய நோயாளிகளைப பாதுகாத் தல்.

☞ யன்னல், கதவுச் சீலைகளை மருந்து தோய்வித்துப் பாவித்தல்.

☞ நுளம்புப் பெருக்கத்தைத் தடை செய்வது எப்படி?

☞ உங்கள் வீடு, பாடசாலை, தொழில் ஸ்தானம் ஆகியவற்றின் சூழலில் நுளம்பு பெருக்கம் அடையும காரணிகளை அழித்தல்.

☞ குப்பை கூழங்களை எரித்தலும், புகைத்தலும்.

ர் தேவையற்ற போத்தல், பைகள் பிளாஸ்ரிக் கலன்களை புதைத்தல்

ர மேசைக்கால்களின் அடியில் உள்ள பாத்திரங்களில், பூச்சாடி ஆகியவற்றில் சவர்க்காரம் அல்லது உப்புக்கரைத்துவிடல்.

ர் கூரையில் போடப்பட்ட ரயாகளை மண்ணால் நிரப்புதல்.

ர் வளர்ப்புப் பிராணிகளுக்காக வைக்கப்படும் நீரை ஒழுங்காக நாளாந்தம அகற்றுதல்.

☞ கூரைப் பீலிகளைத் துப்பரவு செயது நீர்தடைப்படுதலைத் தவிர்த்தல.

☞ மேற்கூறப்பட்ட சுகாதார நடைமுறைகளை ஒவ்வொருவரும் எமது சூழலில் மேற்கொண்டு, "டெங்குக் காய்ச்சலில்" இருந்து பாதுகாத்துக் கொள்ள திடசங்கற்பம் கொள்வோம்.

"நோய்நாடி நோய் முதல்நாடி - அது தணிக்கும்
வாய்நாடி வாய்ப்பச் செயல்"□

**வைத்திய கலாநிதி க.தா. சிவபாதம், பதில்மாகாண பிரதிப் பணிப்பாளர், சுகாதாரசேவைகள், யாழ்ப்பாணம்**

# கொலைச் சந்தேக நபர்கள் பிணையில் விடுவிப்பு

(யாழ்ப்பாணம்)

நீராவியடி வைரவர் ஆலயத்தை அண்மித்த பகுதியில் இடம்பெற்ற கொலை ஒன்றின் தொடர்பில் சந்தேகத்தில் தடுத்துவைக்கப்பட்டிருந்த நபர்கள் இருவர் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கடந்த ஒக்டோபர் மாதம் 6ஆம் திகதியன்று மேற்படி பகுதியில், நாரந்தனையைச் சேர்ந்த யோ.அஜந்தீப் என்ற இளைஞர் படுகொலை செய்யப்பட்டிருந்தார்.

இக் கொலை தொடர்பில் சந்தேகத்தின் பேரில் கைதுசெய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 2வது சந்தேக நபர் இராசலிங்கம் விக்கினேஸ்வரன், 3வது சந்தேக நபர் பரமசிவம் லிவிங்ஸ்டன் ஆகியோர் சார்பான பிணை மனுக்களை சட்டத்தரணி இ.ஏகநாதனின் அனுசரணையுடன் சட்டத்தரணி என். ஸ்ரீகாந்தா நேற்று முன்தினம் யாழ். மேல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மனு மீதான விசாரணையின் பின் மேற்படி இருவரும் தலா 15ஆயிரம் ரூபா பணப் பிணையிலும் சரீரப் பிணையிலும் செல்வதற்கு யாழ்.மேல்நீதிமன்ற நீதிவான் எஸ்.வரதராஜா யாழ்.நீதிமன்றத்தினூடாக உத்தரவிட்டார். (உ-4)

## கிளிநொச்சி வலயப் பாடசாலைகளில் 34,742 மாணவர்கள் தற்போது கல்விகற்கின்றனர்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி கல்வி வலயத்திற்கு உட்பட்ட பாடசாலைகளில் 34 ஆயிரத்து 742 மாணவர்கள் தற்போது கல்விகற்று வருகின்றனர்.

கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பளை, ஆகிய கோட்டங்களுக்கு உட்பட்ட பாடசாலைகளிலேயே மேற்படி எண்ணிக்கையான மாணவர்கள் கல்விகற்று வருகின்றனர்.

இக் கல்விவலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில் கடமையாற்ற ஆயிரத்து 630ஆசிரியர்கள் தேவையான நிலையில் தற்போது 996 ஆசிரியர்களே கடமையாற்றி வருகின்றனர்.

அத்துடன் இக் கல்வி வலயத்திற்கு உட்பட்ட பெரும்பாலான கட்டடங்கள் கடந்தகால இராணுவ நடவடிக்கைகளினால் சேதமாக்கப்பட்டும் அழிக்கப்பட்டும் உள்ளன.

இதனால் இங்குள்ள பாடசாலைகளில் இடப் பற்றாக்குறை ஆசிரியர் விடுதியின்மை மற்றும் தளபாட வசதியின்மை என்பன நிலவி வருகின்றன. (தி-64)

## சுகாதார சேவைதொழிற்சங்கங்கள் போராட்டங்களைக் கைவிட்டு தீர்மானங்களைப் பரிசீலிக்க கோரிக்கை

(கொழும்பு)

சுகாதார ஊழியர் தொழிற்சங்கங்கள் நடத்திவரும் போராட்டங்களைக் கைவிட்டு அமைச்சரவை எடுத்த இறுதித் தீர்மானங்களை ஏற்றுக்கொள்ளுமாறு சுகாதார அமைச்சர் பி.தயாரட்ண தொழிற்சங்கங்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.

இது தொடர்பாக அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில்,

சுகாதார சேவை ஊழியர்கள் அடிக்கடி போராட்டங்களை நடத்தி வருவதால், நோயாளிகள் பெரிதும் பாதிப்படைகின்றனர்.

தொழிற்சங்கங்களின் கோரிக்கைக்கு அமையவே யோசனைகள் அமைச்சரவையிடம் முன்வைக்கப்பட்டன.

எவவாறாயினும், சுகாதார ஊழியர்களின் கோரிக்கைக்கு அமைய மேலதிகக் கொடுப்பனவுகளை வழங்க முடியாது எனவும் அவ்வாறு கொடுப்பனவுகள் கொடுக்கவேண்டுமாயின் இதற்கென பாரிய தொகையொன்றினை ஒதுக்க நேரிடும் என்றார்.

அதனால், அமைச்சரவையினால முன்வைக்கப்பட்ட இறுதித்தீர்மானம் தொடர்பாக ஆராய்ந்து பார்க்குமாறும் அவர் தொழிற்சங்கங்களைக் கேட்டுக்கொண்டுள்ளார்.(தி-61)

## புதிதாக அமைக்கப்பட்ட யாழ்.பிரதம தபாலகம் ஜனவரி 14இல் திறப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம், சாவகச்சேரி, காரைநகர் பகுதிகளில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள தபாலகங்கள் எதிர்வரும் ஜனவரி மாதம் 14ஆம் திகதி உத்தியோக பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளன.

தபால, தொலைத தொடர்புகள் அமைச்சு நேற்றைய தினம் யாழ். பிரதம தபாலகத்திற்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில் இது குறித்து தொவிக்கப்பட்டுள்ளது.

அன்றைய தினம் காலை சாவகச்சேரி தபாலகம் மற்றும் தொடர்பாடல் மையமும்,

அடுத்து, யாழ்.பிரதம தபாலகம் மற்றும் தொடர்பாடல் மையமும்

மாலை, காரைநகர் அஞ்சல் அலுவலகம் மற்றும் தொடர்பாடல் மையமும் திறந்துவைக்கப்படவுள்ளன.

நவீன தொழில் நுட்பத்துடனும் பூரண வசதிகளுடனும் இயங்கவுள்ள இத் தபாலகங்கள் மூலம் மக்கள் தமது சகல தேவைகளையும் நிறைவேற்றிக்கொள்ள முடியும் என மாவட்ட அஞ்சல் அத்தியட்சகர் எஸ்.சிவராஜசிங்கம் தெரிவித்தார். (உ-3,7)

## தினசரி தியானம்

### ஆத்தமாவின் இயல்பு

ஒவ்வொரு மனிதனும் நிரந்தரமான சந்தோஷத்தை விரும்புகின்றான். இது அவனுடைய உடன்பிறந்த உணர்ச்சியாகும். இது அவனுடைய ஆத்மா பேரானந்தவடிவம் எனபதைக் குறிக்கின்றது. ஒவ்வொருவரும். ஒவ்வொன்றைப் பற்றியும் பூரண ஞானத்தை வேண்டுகின்றனர். இது ஆத்மா ஒரு ஞானத்திறன் என்கிற குறிப்பைக் கொடுக்கிறது. ஒவ்வொரு மனிதனும் சுதந்திரத்தை விரும்புகின்றான். ஆத்மா எப்பொழுதும் சுதந்திரமானது என்பதைக் காட்டுகின்றது. உள்ளேதேடி, எப்பொழுதும் பேரானந்தமாகவும் ஞானமாகவும், சுதந்திரமாகவும் இருக்கும் ஆத்மாவை அடைவாய்.

சுவாமி சிவானந்தர்

## ஜனவரி 7 ஆம் திகதி சிவத்தமிழ் செல்வியின் 79வது பிறந்தநாள் விழா

(யாழ்ப்பாணம்)

தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத் தலைவர் கலாநிதி சிவத்தமிழ்ச்செல்வி தங்கம்மா அப்பாக்குட்டியின் 79வது பிறந்தநாள் அறக்கொடை விழா எதிர்வரும் ஜனவரி மாதம் 7ஆம் திகதி புதன் கிழமை காலை 9.30மணிக்கு தேவஸ்தான அன்னபூரணி மண்டபத்தில் நடைபெறவுள்ளது. இந் நிகழ்வில் தங்கம்மா அப்பாக்குட்டி எழுதிய 'அறவொளி காட்டிய சான்றோர் வரிசையில்' என்னும் நூல் வெளியீடு இடம்பெறவுள்ளது.

அத்துடன் வன்னிப் பிரதேசக் கல்வி வலயங்களில் உள்ள வறுமைக் கோட்டிற்கு கீழ்வாழும் கல்விப் பொதுத் தராதர (சா/த) வகுப்பில் சித்திபெற்று உயர்கல்வி பயில இருக்கும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள் கொள்வனவுக்கென தலா 750 ரூபா வீதம் அன்பளிப்பு வழங்கப்படவுள்ளது.

இந் நிகழ்வில் யாழ்.பல்கலைக்கழக தமிழ்த்துறை விரிவுரையாளர் சி.சிவ லிங்கராஜா பிரதம விருந்தினராகவும் வலி-வடக்கு பிரதேச செயலர் கலாநிதி க.குணராசா சிறப்பு விருந்தினராகவும் கலந்துகொள்ளவுள்ளனர். (உ-18)

## போட்டி போட்டு ஓடிய....

பாணத்தைச் சேர்ந்த சண்முகலிங்கம் கோகுலஸ்ரீ ஆகியோரே காயமடைந்தவர்கள் ஆவர். இவர்கள் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை இவ்விபத்துச் சம்பவத்தையடுத்து பருத்தித்துறை வீதியூடான போக்குவரத்துக்கள் ஸ்தம்பித்தன. மேலும் இவ் வீதியால் சென்ற மூன்றுக்கும் மேற்பட்ட மினி பஸ்கள இளைஞர்களின் கல்வீச்சுக்கு இலக்காகிக் கண்ணாடிகள் உடைந்துள்ளன.

இச்சம்பவத்தையடுத்து அச்சுவேலிப் பகுதி மினிபஸ்காரர்களுக்கும் கல்வியங்காட்டுப் பகுதி இளைஞர்களுக்குமிடையில் நேற்றுப் பிற்பகல் நல்லூர் முத்திரைச் சந்திப் பகுதியில் கோஷ்டி மோதல் இடம் பெற்றதாகவும் தெரியவருகிறது.

இவ் விபத்துச் சம்பவத்தையடுத்து கல்வியங்காட்டுச் சந்தைப் பகுதியில் இடம் பெற்ற களேபரத்தைக கட்டுப்படுத்த பொலிஸார் தடியடிப் பிரயோகம் மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மேலும் ஐந்து இளைஞர்களும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கோப்பாய்ப் பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.அத்துடன் வீதியில் அநாதரவாகக் கிடந்த 29 சைக்கிள்களும் பொலிஸாரால் மீட்கப்பட்டு பொலிஸ் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளது.

இதேவேளை சைக்கிள்உரிமையாளர்கள் தகுந்த ஆதாரங்காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ள முடியும் என்று பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி ஆருணகிரிஸ்ரீ செல்வம் தெரிவித்துள்ளார். (இ-51,74)

## இராணுவத்தின்...

மடைந்துள்ள சமாதானச் செயற்பாடுகளின சாதகமான அம்சங்களை திசை திருப்பவும் என்றே இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இராணுவத்தின் ஆழ ஊடுருவித் தாக்கும் படைப்பிரிவினர், புலிகளின் புலனாய்வுப் பிரிவையும், அவர்களின் நடவடிக்கைகளையும் அச்சுறுத்தி வந்தமையால் புலிகள் நோர்வேத் தரப்பினரினூடாக இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படைப்பிரிவை சிதறடிக்கும்படி அரசாங்கத்திடம் கோரியிருந்தனர். இறுதியில் இலங்கைப் பாதுகாப்புப் படையினர் தமது பெறுமதிமிக்க ஒருபிரிவை இழந்தனர். இவை அனைத்தும் நாட்டின் பாதுகாப்பை ஆபத்திற்குள்ளாக்கும் சம்பவங்கள்.

எனவேஇராணுவ ஆழ ஊடுருவித் தாக்கும் படைப்பிரிவை மீளக்கட்டியெழுப்ப விசேட தனிப்பட்ட கவனம் எடுக்கவும், இவ்வாறு உலக சமாதானப் பேரவையின் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (த-6)

## அமைச்சர்...

இந்திய மத்திய அரசின் சார்பில் மனித வள அபிவிருத்தி விஞ்ஞானம் மற்றும் தொழில் நுட்ப அமைச்சர் கலாநிதி முரளி மனோகர் ஜோசி இம் மாநாட்டிற்கு அழைக்கப்பட்டுள்ளார். உலகின் பல பாகங்களில் இருந்து சமயப் பெரியார்களும் அறிஞர்களும்,கல்விமான்களும் இதில் கலந்து கொள்கின்றனர்.

மாநாட்டைத் தொடர்ந்து இலங்கைத் தமிழ் மக்களின் இனப்பிரச்சினை தொடர்பாக சென்னையில் பத்திரிகையாளர் மாநாடொன்றையும் அமைச்சர் நடத்தவுள்ளார்.(த)

## முஸ்லிம்களின்...

வரையில், எமது தலைவரைப் பொறுத்த வரையில் துரதிஷ்டவசமான சில முடிவுகளை எடுக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டது.

அத்தகைய நேரத்தில் தவிர்க்க முடியாத நிர்ப்பந்தத்தின் அடிப்படையில், அடிப்படையான ஒருமுடிவை வடக்கிலே இருந்த முஸ்லிம் மக்கள் சம்பந்தமாக எடுத்திருந்தோம்.

எனினும் எமது தலைவரின் மனதிலும் எமது அமைப்பின் நிலைப்பாட்டின் அடிப்படையிலும் நாம் எப்பொழுதும் தமிழ் முஸ்லிம் மக்கள் எமது தாயகத்தில் ஒன்றாக சகல உரிமையுடனும் வாழும் காலத்தை நம்பிக்கையுடனேயே இருந்தோம்.

அன்று அப்படியொரு முடிபை எடுக்க வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டு விட்டது.

அந்த நிலைமை வடக்கில் வாழ்ந்த முஸ்லிம் மக்கள் மனதை வெகுவாகப் பாதித்ததை நாம் உணர்வோம்.நிச்சயமாக நாம் அதனை நியாயப்படுத்தவில்லை. அன்றைய சூழலில் ஏற்பட்ட துக்ககரமான நிகழ்வுதான் அது.

சிங்களப் பேரினவாதம் சகல வளங்களுடனும் இருந்து கொண்டு எமது போராட்டத்தை நசுக்க முற்பட்ட வேளையில் தவிர்க்க முடியாமல் அத்தகையதொரு முடிபை எடுத்தோம்.

ஆனால் இன்று நாம் வலுவடைந்த சக்தியாக வளர்ச்சி பெற்றுள்ளோம்.எம்மை நாமே ஆளுகின்ற வலிமை பெற்றுள்ளோம்.

இந்நிலையில் கடந்த காலத் துன்பத்தை மாற்றி அமைக்கலாம் என்ற நம்பிக்கை எமக்கிருக்கின்றது. இதன் அடிப்படையிலேயே புரிந்துணர்வு உடன்படிக்கை ஏற்பட்டதற்குப்பின்னர் நாங்கள் முஸ்லிம் சமூகத்தவர்களைச் சந்தித்தோம். தாயகத்தில் தமிழ் முஸ்லிம் மக்கள் நல்லுறவோடு வாழும் நிலைமையை உருவாக்க நாம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளோம் என்றும் தமிழ்ச்செல்வன் மேலும் கூறினார். (இ)

## நான்காம் ஆண்டு...

இப்படியுமா... இந்தப் பாரினில். எல்லோரும் இன்புற்று வாழவேண்டும் என்ற மனநிலை ஏன் இல்லாமல் போனது. வர்த்தகம் என்றால், போட்டியும், பொறாமையும் கலந்த தோற்றமா?... ஒன்றுபட்டு - இணைந்து ஆள்பறிப்பு இன்றி வாழ்ந்தால் இந்த வையகம் உய்யுமல்லவா? இதை எண்ணுகின்றபோது நெஞ்சத்து நெருடலின் அடையாளமாக கண்களின் கசிவைக் கண்டுகொள்கின்றோம்.

இவை இரண்டிற்கும் அப்பால் இறைநம்பிக்கை - ஆத்மபலம் - கேடு நினையாச் சிந்தை இவற்றால் எமது பணி தொடருகிறது. பரம்பொருளின் பாதம் பணிகின்றோம்.நாட்டில் நிரந்தர சமாதானம் ஏற்பட்டு மக்களின் வாழ்வு வளம்பெற இந் நாளில் இறையாசி வேண்டுகிறோம்.

**வலம்புரிக் குடும்பம்.**


**வெற்றிடம்**

மூன்று மொழியும் பேசக்கூடிய 40-55 வயதெல்லைக்கு உட்பட்டவர்கள் மனேஜராக தேவை. ஓய்வு பெற்றவர்களும் விண்ணப்பிக்கலாம்.

உள்நாட்டு வெளிநாட்டு சைனீஸ் உணவு வகைகள் தயாரிக்க அனுபவமுள்ளவர்கள் தேவை.

22-12-2003 அன்று காலை 11.00 முதல் 2.00 மணி வரை நேரில் சந்திக்கவும். சம்பளம் நேரில் பேசப்படும்.

**கிறீன் இன் ரெஸ்ரோரன்ட்**
**60, கண்டி வீதி, சுண்டிக்குழி,**
**யாழ்ப்பாணம்.** (சி-6819)


### காரைநகர் வியாவில் ஹரிஹர புத்திர ஐயனார் கோவில்

### 18ம் படி பூசை விஞ்ஞாபனம்

**21-12 2003 ஞாயிற்றுக்கிழமை**

ஐயப்பன் அடியார்களே!

தமிழும் சைவமும் தமிழர் பண்பாடும் விளங்குகின்ற யாழ்ப்பாணத்தின் கண் அமைந்த காரைநகரில் வியாவில் என்னும் பதியில் முதன் முதலாகத் தோன்றிய பூரணை பொற்கலாதேவி சமேத ஐயப்பசுவாமிக்கும், விநாயகப் பொருமானுக்கும் காலை 8 மணிக்கு விஷேட அபிசேக ஆராதனைகளும் அதனைத் தொடர்ந்து காலை 9 மணிக்கு ஐயப்பசுவாமிக்கு 18ம்படி பூசையும் இடம்பெற்று அடியார்களுக்கு அன்னதானமும் வழங்கப்படும்.

ஸ்ரீ சபரிமலை ஐயப்பன் கழலினைப் போற்றுகின்ற அகில இலங்கை யாழ்.மாவட்ட 18ம் படி குருசாமி சு.இந்துதாசன் குழுவினரும் யாழ்.கோண்டாவில் சபாச ஐயப்பன் ஆலய குரு பிரம்மஸ்ரீ ஹரிஹர சுதசர்மா குருசாமி குழுவினரும் இணைந்து நிகழ்ச்சிகளை நாடாத்தி வைப்பார்கள்.

1. விநாயகர் பூசை
2. ஐயப்பன் பஜனை
3. நாதஸ்வர ஆலாபனை
4. சஹஸ்ர நாம ஆராதனை
5. தீபாராதனை
6. மடிப்பூசை
7. வழிபாடு

இந்தப் பூசை வழிபாடுகளில் மாலை அணிந்த ஐயப்பன் பக்தர்களும் மற்றும் ஐயப்பன் அடியார்களும் கலந்து கொண்டு எம்பெருமான் ஐயப்பனின் பாதகமலங்களைப் பணிந்து திருவருளுக்குப் பாத்திரமாகி உய்யும் வண்ணம் அன்போடு அழைக்கின்றோம்.

**விசேட மேளக்கச்சேரி**

கோண்டாவில் நாதஸ்வர இசையருவி- V.K.பஞ்சமூர்த்தி குமரேஸ் குழுவினர்
ஜேர்மன் நாட்டிலிருந்துவருகைதந்திருக்கும் பிரபல
தவில் வித்துவான்
தவில் சுடரொளி-K.P.செலவநாயகம் அவர்களும்
தவில் மேதை B.நர்மதன் (மது) அவர்களும்
இணைந்து கான மழை பொழிவார்கள்.

வியாவில், பரிபாலகரும்,
காரைநகர். திருப்பணிச் சபையினரும்.

விளம்பர உதவி:-
ஐயப்பன் அடியான்
**குமரன் சில்க்ஸ்** பெரியகடை, யாழ்ப்பாணம்.


**வாழ்க பல்லாண்டு வலம்புரியே!**
**ஓங்குக உன் புகழ் பாரெல்லாம்!**
தரமான நாட்டு அரிசியினை
மொத்தமாகவும் சில்லறையாகவும்
பெற்றுக் கொள்ளலாம்
**NO.1 RICE**
நாகபூசணி மில்
சண்டிலிப்பாய்

**நான்கு வருடங்களைக் கடந்து வெற்றி நடைபோடும் வலம்புரியே தொடர்க உன் பணி**

சங்கானை பனை தென்னை வள அபிவிருத்திக் கூட்டுறவுச் சங்கம்
சங்கானை

சொகுசான உள்ளூர் பயண சேவைக்கு கார் மற்றும் AC வான்களை வாடகைக்குப் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய இடம்
தேவா ரவல்ஸ்
மூளாய் வீதி,
வட்டுக்கோட்டை.
T.P 021 222 5459, 077 6143541

மக்கள் மனதில் நீங்காது
இடம் பிடித்த வலம்புரியே வாழ்க நீ...
வலிகாமம் பனை தென்னைவள அபிவிருத்தி
கூட்டுறவுச் சங்கங்களின் கொத்தணி
மானிப்பாய்


இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 20.12.2003 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.